# மண்ணும் மக்களும்

செ. கணேசலிங்கன்



www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# மண்ணும் மக்களும்

(நாவல்)

## செ. கணேசலிங்கன்

விற்பனை உரிமை:

பாரி நிலையம்

184. பிராட்வே-சென்னை-600108

படிப்பகம்

www.padippakam.com

முதற்பதிப்பு : நவம்பர், 1969
இரண்டாவதுப்பதிப்பு : ஏப்ரல், 1996

விலை ரூ. 30-00

| | | |
|---|---|---|
| Title | : | MANNUM MAKKALUM |
| Subject | : | Novel In Tamil |
| Author | : | Se. GANESALINGAN (C) |
| Size | : | 18 × 12.5 cm |
| Types | : | 10 Point |
| No. of Pages | : | 176 |
| Paper | : | Creamwove 10.5 Kg. |
| Binding | : | Duplex Board |
| Price | : | Rs. 30-00 |
| Publishers | : | KUMARAN PUBLISHERS<br>79, 1st Street, Kumaran Colony,<br>Vadapalani, Madras-600 026. |

Printers : Chitra Printo Graphy, Madras-14.

படிப்பகம்

www.padippakam.com

# சில குறிப்புகள்

மக்களுக்குத் தொண்டு செய்வது, தன்னலமற்று சேவை செய்வது, மக்களுக்காக உயிரையே தியாகம் செய்வது ஆகியவை உலகத்தின் உயர்ந்த குறிக்கோள்கள் என்பதை யாவரும் ஒப்புவர். இந்த 'மக்கள்' என்று நாம் கருதுவது சமுதாயத்தின் கீழ்நிலையில் உள்ளவரே ஆவர். இவர்கள் என்றுமே மேல்மட்டத்தில் உள்ளவரின் அன்பு, கருணை, இரக்கம் ஆகிய உயர்மட்ட உணர்வுகளின் தயவிலே வாழ வேண்டும் என்று கருதுவது மிகவும் பிற்போக்கான கருத்தாகும். கர்மம் என்ற கோட்பாட்டை வைத்து, இவர் இப்படியேதான் வாழ்வர், இரப்போர் இல்லாவிடின் சமுதாயம் மரப்பாவை போலாகிவிடும் என்று இன்றும் கூறுபவர் சமூக விஞ்ஞான வரலாற்று ரீதியாக சமுதாயத்தைப் பார்க்க அஞ்சும் அறிவிலிகள் ஆவர்.

> ''இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
> கெடுக உலகியற்றியான்''

வயிற்றிற்காக இரப்பதைக் கண்டு வள்ளுவர் உலகைப் படைத்தவன் மேலும் சீற்றம் காட்டினார்.

> ''தனி யொருவனுக் குணவில்லை யெனில்
> ஜெகத்தினை அழித்திடுவோம்''

வள்ளுவர் கூறி இரண்டாயிரம் ஆண்டுகளின் பின்னர் பாரதி கொதித்தும் உணவுப் பஞ்சமே உலகைவிட்டு மறையவில்லை. எம் கண்முன்னேயே மனிதனின் அடிப் படைத் தேவையான உணவேயின்றி, துன்பப்படும் கோடிக் கணக்கானவர்களை காண்கிறோம். கழிந்த இரண்டு மூன்று ஆண்டுகளில் நைஜீரியாவிலுள்ள 'பயாபிரா' என்ற பகுதியில் பல லட்சக்கணக்கான குழந்தைகளும் தாய்மாரும், மக்களும் உணவின்றியும் பசிப்பிணியால் நோயுற்றும் கண்முன்னே இறந்ததை 'நாகரிக உலகம்' என்று பெருமைப் படும் இதே உலகமே பார்த்துக் கொண்டிருந்தது. அங்கே உணவுப் பஞ்சம் தலைதூக்கும் போதும் போராயுதங்களுக்கு பஞ்சமிருக்கவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



உலகின் பல பகுதியில், உற்பத்தியைப் பெருக்கி விட்டதனால் விலை வீழ்ச்சியடைந்துவிடும், லாபம் குறைந்துவிடும் என்பதற்காக உணவுப் பொருட்களை கொட்டி எரிக்கின்றனர். மறுபுறத்தில் உணவுப் பற்றாக்குறையால் பசிப்பிணியில் மக்கள் வாடி மரிக்கின்றனர்.

வள்ளுவரும் பாரதியும் பசிப்பிணியைக்கண்டு கொதிப்படைந்தனரே அன்றி இந்நிலையை மாற்றத்தக்க நடைமுறைக்குச் சாத்தியமான வழிகளையே கூறவில்லை. கூறியிருப்பின் இதுவரை எமது நாடுகளிலாயினும் இம்மாற்றத்தைக் கண்டிருப்போம்.

பாரதியால்கூட புரட்சியை ஒரு பூஷ்வா கண்ணோட்டத்திலேயே காண முடிந்தது. உருசிய நாட்டில் நடந்த புரட்சியில் தொழிலாளர்களின் எழுச்சியையும் ஆயுதம் ஏந்திய வர்க்கப் போராட்டத்தையும் தியாகத்தையும் அவரால் காண முடியவில்லை.

''மாகாளி பராசக்தி உருசியநாட்
டினிற் கடைக்கண் வைத்தாள். அங்கே
ஆகாவென் றெழுந்தது பார் யுகப்புரட்சி,
கொடுங்காலன் அலறி விழ்ந்தான்...''

அவர் வழிபட்ட மாகாளி பராசக்தியின் கடைக்கண் பார்வையினாலேயே உருசிய நாட்டில் புரட்சி ஏற்பட்டது என்றே பூஷ்வா புரட்சியாளரான பாரதியால் காண முடிந்தது. அதே மாகாளியின் கடைக்கண் பார்வை இன்னும் அவர் வாழ்ந்த இந்திய நாட்டில் விழாதது வியக்கத் தக்கதே!

பகுத்துண், விருந்தோம்பு என்ற வள்ளுவரின் அறிவுரைகள் எவ்விதப் பயனும் தரவில்லை. ஏனெனில் மனித உறவுகளிடையே உயிரற்ற 'பொருள்' என்று ஒன்று நுழைந்து விட்டது. அது உற்பத்திப் பொருள், மனித உறவுகள் யாவும் உற்பத்திப் பண்டத்தின் ஊடாக ஏற்படும்

www.padippakam.com



நிலையில் சமுதாயம் வேகமாக வளர்ந்து விட்டது. அதனால் மனிதாபிமான உணர்வே மறைந்து வருகிறது. மனிதாபிமானத்தைப் போதிக்க முயல்பவர் யாவரும் இதனாலேயே தோல்வியடைந்து வருகின்றனர்.

உணவு, உடை, வீடு போன்ற மனிதத் தேவைகளை உற்பத்தி செய்வதிலும் பார்க்க உலகில் போராயுதங்களை உற்பத்தி செய்யும் தொழில்களே வலுப்பெற்று வருகின்றன ஏனெனில் இவற்றில் கிடைக்கக்கூடிய லாபம் வேறு எந்த பாவனைப் பொருளிலும் கிடைக்கமாட்டாது. மனிதத் தேவைகளே மறக்கப்பட்டு, மறுக்கப்பட்டு, மனிதரைக் கொல்லும் உற்பத்தியில் உலகம் அதிக கவனம் செலுத்துகிறது. லாபம் சேர்ப்பவர்களது கைப்பொம்மையாக அரசுகளும் வலுப்பெற்று வருகின்றன. அரசியல் அதிகாரமே மக்களிடமிருந்து பறிக்கப்பட்டு லாபம் சேர்ப்பவர்களது கைகளில் அகப்பட்டுவிட்டது.

அத்து மீறிய சுரண்டலின் கொடுமையை தாங்கமுடியாத மக்கள்- லாபம் சேர்ப்பவர்கள், சுரண்டப்படும் மக்கள் என்ற இரு பகுப்பாக சமுதாயத்தை, உலகத்தை நோக்குகின்றனர். லாபம் சேர்ப்பவர்களும் சொத்துடைமையாளர்களும் அவர்களால் சமரசம் பேசுவதற்கும் பலாத்காரத்தால் ஒடுக்குவதற்கும் அமைக்கப்பட்ட அரசு ஒரு புறம். சுரண்டலினால் கொதிப்படைந்த மக்கள் மறுபுறம். இவ்வர்க்கத்தில் சுரண்டப்பட்ட தொழிலாளர், வேலையற்றோர், மாணவர்கள், நிலமற்ற, ஏழை விவசாயிகள் ஒன்று சேர்கின்றனர்.

பொருளாதார வளர்ச்சியில் பின் தங்கிய நாடுகள்—முன்னர் ஏகாதிபத்தியங்களின் காலனிகளாக இருந்து இன்று 'சுதந்திரம்' என்ற போர்வையுள் நின்று —தொடர்ந்தும் அவர்களது சுரண்டல் சந்தையாக, அவர்களுக்கு வட்டிக்கு உழைப்பவர்களாக, அவர்களது யந்திரங்களுக்கு தீனிபோட கனிப்பொருட்களை, மூலப்பொருட்களை உற்பத்தி செய்து,

www.padippakam.com



கொண்டிருக்கின்றன. இந்நாடுகளில் 80 சதவிகிதத்திற்கு மேலானவர் விவசாயிகள். இந்நாடுகளில் ஏகாதிபத்திய நாடுகள் நிலப்பிரபுத்துவத்தையே காப்பாற்றி வருகின்றன. பூஷ்வா ஜனநாயகமே தலையெடுக்க முடியாது இருக்கிறது. ஏகாதிபத்தியங்கள் தமது சுரண்டலுக்கு வாய்ப்பாக அரசுகளை அமைத்து பூஷ்வா ஜனநாயகமே ஏற்படாது ஆயுதங்களைத் திணித்து தமது அடிமையாக வைத்திருக்க முயலுகின்றன.

பிரதான முரண்பாடு மக்களுக்கும் நிலப் பிரபுத்துவத்துக்கும் இடையிலாக விளங்கும் இப் பின்தங்கிய விவசாய நாடுகளில் அத்துமீறிய சுரண்டலுக்கு அகப்பட்ட விவசாயிகளே புரட்சியையும் மக்கள் யுத்தத்தையும் கிராமப் புறங்களில் ஆரம்பிக்கின்றனர். இந்தப் புரட்சியை ஒடுக்க நிலவுடைமை வர்க்கம், முதலாளி வர்க்கம், அவர்களைச் சார்ந்து ஏகாதிபத்தியத்திற்கு தாசாக விளங்கும் அரசும், ஏகாதிபத்தியமுமே தலையிடுகிறது. இதை நாம் வியத்நாம் விவசாயிகளின் புரட்சி ஆரம்பித்தகாலம் தொட்டு இன்றுவரை கண்கூடாகப் பல நாடுகளில் காண்கிறோம். இப்புரட்சியை உலகின் எத்தகைய பலம் வாய்ந்த சக்தியாலுமே அழித்துவிட முடியாது என்பதையும் இன்று உலகமே அறியும்.

பொருளாதாரத்தில் பின்தங்கிய உலக விவசாய நாடுகளிலெல்லாம் விவசாயிகளின் புரட்சியே இன்றைய மாபெரும் சக்தியாக விளங்குகிறது. காட்டுத்தீபோல் பரவத்தக்க சிறு புரட்சிப் பொறியொன்று சிறுகிராமத்திலே எவ்வாறு உருவாகின்றது என்பதையே இச்சிறுநாவல் மூலம் கோடிட்டுக் காட்ட முயன்றேன். இந்நாவலைக் கண்டு அஞ்சுபவர்கள் உண்மையைக் காண விரும்பாத குருடர்கள் என்றே கூறவேண்டும்.

விரைவில் எழுதிய இந்நாவலை சில நாளில் அச்சிடுவதில் உதவிய நண்பர்கள் சீதாராமன், நாராயணனுக்கு என் அன்பு. அச்சுக்கோர்த்து, அழுத்திய தொழிலாளர் கரங்களுக்கு என் நன்றி. ஓவியம் தீட்டித் தந்த வினுவிற்கும் என் அன்பு. கருத்துரை வழங்கிய நண்பருக்கு என் நெஞ்சு.

உரும்பிராய்,
யாழ்ப்பாணம்.
18-11-69

**செ. கணேசலிங்கன்.**

www.padippakam.com

## இரண்டாவது பதிப்பு

# மேலும் சில குறிப்புகள்

கால் நூற்றாண்டின் முன் வெளிவந்த இந்நாவல் தமிழிலக்கிய வரலாற்றில் குறிப்பிடப்பட வேண்டிய சிறப்புடையது என்பதைப் பலர் அறிவர்.

இந்தியாவில் தோன்றும் அரசியல் சித்தாந்தங்கள் ஈழத்திலும் பாதிப்பு ஏற்படுத்தவே செய்கிறது. 1960-களின் ஆரம்பகாலத்தில் சித்தாந்த ரீதியில் சீன-சோவியத் பிளவு ஏற்பட்டது யாவரும் அறிந்ததே. இலங்கை உட்பட உலகெங்கும் கம்யூனிஸ்டு கட்சிகளில் பிரிவு ஏற்பட்டது.

1960 களின் பிற்பகுதிகளில் வட இந்தியாவில் சாரு மஜூம்தார் சீனப் 'புரட்சியின் சித்தாந்தத்தை முன்வைத்து விவசாயிகளின் புரட்சிக்கு அறை கூவல்விட்ட போது அது ஈழத்திலும் தாக்கம் ஏற்படுத்தியது. அச்சித்தாந்தத்தின் நடை முறையை விளக்குவதாகவே இந்நாவல் எழுதப்பட்டது. இவ்வாறு ஒரு அரசியல் வரலாற்றுக் கால கட்ட நிகழ்ச்சிகளை இந்நாவல் கூறி நிற்கும்.

ஈழத்து விவசாயிகளிடை இப்புதிய சித்தாந்தம் ஏற்படுத்திய தாக்கத்தைக் கூறும் இந்நாவல் தமிழ் நாட்டில் வெளியிடப்பட்ட வேளை இந்நாவலைப் படிப்பது இங்கு பாவமாகக் கருதப்பட்டது. 1000 பிரதிகள் வெளியிடப்பட்ட போதும் 100 பிரதிகள் மட்டுமே விற்க முடிந்தது. ஆயினும் அந்த 100 பிரதிகளும் ஆயிரக்கணக்கானவரால் இந்தியாவில் கை மாறிப் படித்து விமர்சிக்கப்பட்டது.

வங்காளத்திலிருந்து ஆந்திராவிலுள்ள சீகாகுளம் உட்பட தமிழ்நாடு வரை தாக்கம் ஏற்படுத்தி இந்திய விவசாயிகளின் புரட்சி நோக்கிய புதிய சித்தாந்தம் இந்தியக் கலை, இலக்கிய உலகிலும் தாக்கத்தை ஏற்படுத்தவே செய்தது.

நிலப் பிரபுத்துவத்திற்கு எதிராக விவசாயிகள் திரண்டெழுந்து போராடுவதைச் சித்தரிக்கும் நிசாந் என்ற

படிப்பகம்

www.padippakam.com



இந்தித் திரைப்படம் பூனா திரைப் படக்கல்லூரியில் முதல் தடவையாக 1976ல் திரையிடப்பட்ட வேளை நானும் அங்கிருந்தேன்.

படத்தை நெறிப்படுத்திய சியாம் பெனிகல், கதாநாயகனாக நடித்த கிருஷ்கனாட்டும் வந்திருந்தனர். மாணவரின் விமர்சனங்களுக்கு விளக்கம் கூறினர். இந்திய நக்ஸல் பாரிப் புரட்சி இத்திரைப் படத்தை எடுக்கத் தூண்டியதா' என வினாவிய போது 'நிச்சயமாக' என கிருஷ்கர்னாட் சிரித்தபடி பதிலளித்தார். மாபூமி என்ற தெலுங்குப் படம், ஜெமினியின் இந்தி, கன்னடம், தமிழில் வெளிவந்த 'எல்லோரும் நல்லவரே' விவசாயிகளின் எழுச்சியை சித்தரிப்பவையே, தமிழில் பல கவிதைகள், சிறுகதைகள், சிலநாவல்கள் விவசாயிகளின் புரட்சியை பிரதிபலித்த போதும் குருதிப் புனல் குறிப்பிடத் தக்க ஒரு நாவலாகும். வெண்மணிக் கிராமத்தின் கொடுமையும் தமிழ் கலை, இலக்கியத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியதை அறிவோம்.

இந்திய நிலப்பிரபுத்துவத்தின் கொடுமைகளைக் கூறும் கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள், சினிமாக்கள் நந்தன் காலந்திலிருந்து நீண்டகாலமாக தமிழ் நாட்டில் வெளிவந்தன.

உழுபவனுக்கே நிலம் என்ற ஜனநாயகக் குரல் இந்திய சுதந்திரப் போராட்டத்துடன் ஜெயப் பிரகாஷ் நாராயணனால் முன் வைக்கப்பட்டது. வினோபா பாவா பாதயாத்திரை மூலம் நிலங்களைப் பெற்று விவசாயிகளிடை விநியோகித்தார். ஆயினும் வங்காளத்தில் வெடித்த விவசாயிகளின் புரட்சியே ஆளும் வர்க்கத்தை அச்சுறுத்தியது. அதன் பின்னர் வெளிவந்த கலை, இலக்கியங்கள் ஆளும் வர்க்கத்தால் அவதானிக்கப்பட்டன. ஏனெனில் அவற்றின் பின்னால் புரட்சிகர அரசியல் சித்தாந்தம் இருந்ததே காரணமாகும்.

உலகெங்குமே தோன்றும் புதிய போராட்டங்கள், எழுச்சி ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளை வரலாற்றாசிரியர் மட்டுமல்ல கலை, இலக்கியங்களில் படைக்கவேண்டியது கலைஞர்கள், எழுத்தாளரது கடமையாகும். இத்தகைய முயற்சிகளில் ஒன்றே இந்நாவலுவாகும்.

ஒரு காலகட்டத்தில் முற்போக்காகக் கருதும் அரசியல் சித்தாந்தம், போராட்டங்கள் மற்றொரு காலத்தில் தவ

படிப்பகம்

www.padippakam.com



றாகத் தோன்றலாம்; திருத்தப் படலாம், எந்தச் சித்தாந்தமும் நடைமுறையில் சோதித்துப் பார்க்க வேண்டும்; நடைமுறையிலேயே சித்தாந்தங்கள் நிலைநாட்டப்பட முடியும்.

புரட்சி யுத்தங்கள், போராட்டங்கள் எல்லாம் எல்லா வேளையும் வெற்றி பெற்று விடுவதில்லை. ஆயினும் அவை தோல்வியுற நேரினும் சமூகத்தின் அரசியல், பொருளாதாரத்தில் பாதிப்பு ஏற்படுத்தவே செய்கிறது.

நிலங்களை நிலமற்ற விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும் எனவும் நில உச்சவரம்புச் சட்டங்களும் விவசாயிகளின் புரட்சி உணர்வுகளைத் தணிப்பதற்காக எழுந்த முயற்சிகளேயாகும்,

இந்நாவல் வெளிவந்து கால் நூற்றாண்டு காலத்தில் தொழில் நுட்பம், விஞ்ஞானம், மூலதனம், பண்ட உற்பத்திப் பெருக்கம் மட்டுமல்ல அரசியல் சிந்தாந்தங்களிலும் ஏற்பட்டுள்ள மாறுதல்களை யாவரும் அறிவர். சோவியத் யூனியன், சீனாவில் ஏற்பட்ட சோஷலிச கட்டுமான முயற்சிகளின் பின்னடைவைப் பற்றியும் அறிவோம்.

இந்நாவல் வெளிவந்த வேளை இலங்கையிலும் நாவலின் சித்தாந்தம் பற்றி காரசாரமாக விவாதிக்கப் பட்டது, இடதுசாரி இளைஞர்களின் எழுச்சியும் இதே காலகட்டத்தில் கூர்மையடைந்திருந்தது. வலதுசாரி ஐக்கிய தேசியக் கட்சியின் வீழ்ச்சியும் இடதுசாரி இயக்கத்தவரிடை தற்காலிக எழுச்சியும் ஏற்பட்டிருந்தன. இந்நாவலிலும் இந்நிகழ்ச்சி விரிவாக்கப்பட்டுள்ளது.

ஆயினும் காலப்போக்கில் இளைஞர்களின் தீவிரவாத கிளர்ச்சிகள் நசுக்கப்பட்டதோடு மேலெழுந்த தேசிய இனப் பிரச்சினை அனைத்து உழைக்கும் வர்க்கத்தவரின் எழுச்சியையும் பின்னடையச் செய்தது. இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் போர் யாவரும் அறிந்ததே. இந்நிகழ்ச்சிகளை நான் விட்டுவிடவில்லை. இந்நாவலைத் தொடர்ந்து பல நாவல்களில் எழுதியுள்ளேன்.

இந்நாவலின் மீள் பதிப்பை விரைவில் அச்சிடுவதில் உதவிய அச்சகத் தொழிலாளர், உரிமையாளருக்கு என் நன்றி.

சென்னை
16-4-1996

செ. கணேசலிங்கன்

படிப்பகம்

# வரலாறும் நாவலும்

முரண்பாடுகள் இன்றி இயக்கம் இல்லை. இயற்கையிலும், மனித சமுதாயத்திலும், எங்கும் முரண்பாடு இருக்கின்றது. இம்முரண்பாடுகளே இவற்றின் வளர்ச்சிக்கு உந்து சக்தியாக விளங்குகின்றன. முரண் என்றால் ஒன்றுக்கொன்று எதிரான என்று பொருள். சமுதாயத்தில் வர்க்க முரண்பாடுகளே வரலாற்றின் உந்து சக்தியாக இருந்து வருகிறது. அடிமைச் சொந்தக்காரர்—அடிமை, நிலப்பிரபு—உழவன், முதலாளி—தொழிலாளி, ஏகாதிபத்தியம்—காலனி நாடு என்று சமுதாயத்தின் வளர்ச்சிப் போக்கில் பல்வேறு முரண்பட்ட சக்திகள் இருந்து வந்தன—வருகின்றன.

சமுதாய வளர்ச்சியில் பழைய அமைப்பிலிருந்து புதிய வர்க்கங்கள் தோன்றுகின்றன; வளர்கின்றன; பழைமை அமைப்பைத் தகர்க்கின்றன; மீண்டும் இப்புதிய வர்க்கங்கள் பழமையாகின்றன, அழிகின்றன. இப்படியே வரலாறு செல்கிறது. பழமையான, பிற்போக்கு வர்க்கங்கள் அமைப்புக்கள் எல்லாம் தவிர்க்க இயலா வண்ணம் அழிந்தே தீரும். இதுவே வரலாற்றின் விதி. அடிமைச் சமுதாயமும், நிலவுடைமை அமைப்பும், முதலாளித்துவ அமைப்பும் வரலாற்றின் விதிப்படி அழிந்து வருவதையே வரலாறு காட்டுகிறது.

தம் வளர்ச்சிக்கும், நலனுக்கும் முரணான சமுதாய அமைப்பைத் தகர்க்கும் உணர்வும்—வர்க்க உணர்வும்—போராட்ட உணர்வும் இவ்வர்க்கங்களின் மனத்திலிருந்து உதயமாவன அல்ல. அவை தம் வாழ்நிலையிலிருந்தே தோன்றுபவை. அடிமை, உழவன், தொழிலாளி, காலனிய நாட்டவர் இவர்களின் துன்பங்கள் துடைத்தெறியப்படும் வரை வர்க்கப் போராட்டங்களும், போர்களும் உலகில் நிற்கப்போவது இல்லை. உலகில் நிகழும் போர்கள் அனைத்

www.padippakam.com



தும் ஒருவகையில் (வர்க்க) ஆதிக்கப் போர்கள்தானே. ஆதிக்கம் அற்ற உலகம் எப்போது அமையுமோ அப்போது தான் உலகில் அமைதி சூழும்; அதற்கான சமுதாய அமைப்பு உருவானால்தான்—அதாவது வர்க்கங்கள் அற்ற சமுதாய அமைப்பு உருவானால்தான் அந்நிலை வரும். அந்நிலை உருவாவதும் வரலாற்றின் இயக்க விதிகளின் ஒன்றுதானே.

''ஐந்து விரல்களின் வேறுபாட்டைக் களைய முடியுமா? முதலாளி—தொழிலாளி வேறுபாடு ஒழிக்கப்பட முடியுமா? இது ஆண்டவனின் படைப்பு'' என்று சிலர் கூறலாம். இவர்கள் எப்பக்கம் நின்று வாதிடுகிறவர்கள் என்பதை அவர்களின் கூற்றிலிருந்தே அறியலாம். சமுதாய அமைப்பு என்பது பிற அனைத்தையும்போல் நிலையானதன்று; மாறி வருபவை தான். உலகத்தில் எதுவும் மாறாமலிருப்பதில்லை. ஒவ்வொன்றிலும் உள்ள அக முரண்பாடுகளே மாற்றங்களுக்குக் காரணமாகின்றன. முதலாளி—தொழிலாளி, நிலப்பிரபு—உழவன் முரண்பாடு பகைமையானது. ஒன்றையொன்று அழிக்க முனைவது. முதலாளித்துவ முறை அழியும் போது முதலாளித்துவ வர்க்கம் ஒழிந்துவிடும். சுரண்டும் வர்க்கங்கள் ஒழிந்ததும் சமுதாய முரண்பாடுகளின் தன்மை பகைமையற்றதாக மாறும். பல தொழில்கள் புரியும் தொழிலாளிகள் போல விரல்கள் ஒன்றையொன்று சார்ந்து நிற்பவையே.

இந்நாவல் மண்ணை பிரதான உற்பத்திச் சாதனமாகக் கொண்ட சமுதாய அமைப்பான நிலப்பிரபுத்துவத்துக்கும் மக்களுக்கும் இடையேயுள்ள முரண்பாடு கூர்மையடைந்து வருவதன் விளைவான நிகழ்ச்சிகளைப் பகைப்புலனாகக் கொண்டுள்ளது. காலனிய ஆதிக்கத்தின் கீழிருந்த நாடுகள் பலவற்றிலும் நிலவுடைமை அமைப்புத் தகர்க்கப்படாமல் இருந்து வருகிறது. இதற்குக் காரணம் ஏகாதிபத்தியம், நிலவுடைமை, தரகு முதலாளித்துவம் இவற்றிடையேயுள்ள நல்லுறவே.

ஏகாதிபத்தியங்கள் தம் நேரடி ஆட்சியை விட்டுச் சென்றபோதிலும் ஏகாதிபத்தியத்தின் மூலதனம் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. இம்மூலதனத் தரகர்கள் அரசியல் அதிகாரம் செலுத்தி வருகின்றனர். இவர்களுக்கு நிலப்பிரபுத்துவ உறவு முறையை அழித்து முதலாளித்துவ வளர்ச்சிக்கு வழி செய்யவேண்டுவது அவசியமில்லை. காரணம், இவர்

படிப்பகம்

www.padippakam.com



கள்தான் அந்நிய மூலதனத்தைச் சார்ந்து நிற்பவர்களா யிற்றே!

ஒரு ஏகாதிபத்தியத்தின் நேரடி ஆட்சி அகன்றதும் பல ஏகாதிபத்தியங்கள் இந்த நாடுகளில் தம் மூலதனம் மூலம் ஆதிக்கம் செலுத்துகின்றன. இந்தியா, இலங்கை போன்ற இத்தகைய அரை நிலப்பிரபுத்துவ, அரைக் காலனிய நாடு களில் மக்களின் முன் நிலப்பிரபுத்துவம், தரகு முதலாளித்து வம், ஏகாதிபத்தியம், சமூக ஏகாதிபத்தியம் ஆகிய நான்கு மலைகள் நிற்கின்றன. இவற்றில் பிரதானமானதும், அடிப் படையானதும் நிலப்பிரபுத்துவம் ஆகும். இந்நாடுகளில் அரை நிலப்பிரபுத்துவ, அரைக்காலனிய பொருளாதாரம் — அரசியல் அமைப்பு எவ்வாறு உருவாயிற்று என்பதை வர லாற்றுப் பின்னணியில் பார்ப்பது பயன்தரத்தக்கதாகவும் அமையும்.

மனித சமுதாய வரலாறு மிக நீண்டது ஆகும். மனிதன் தோன்றிய காலத்தில் அவன் இனத்திடை வர்க்க வேறுபாடு கள் இல்லை. மனித இனம் முழுவதுமே இயற்கையை எதிர்த் துப் போரிட்டு, அதை அடக்கித் தன் நலனுக்குப் பயன்படுத் தும் முயற்சியில் இறங்கியது. அதற்காக இயற்கையின் இயக்க விதிகளைப் புரிந்து கொள்ளத் தொடங்கியது. ஆனால் கருவிகளின் வளர்ச்சி காரணமாகவும், பிறவற்றா லும் உழைக்கும் வர்க்கம்—சுரண்டும் வர்க்கம் என வர்க்கங் கள் தோன்றலாயின.

அடிமைகளும் அடிமைச் சொந்தக்காரர்களும் என இரு வர்க்கங்கள் தோன்றின. அடிமைச் சொந்தக்காரர்கள் தங் களுக்கு எதிராக அடிமைகள் கிளர்ந்து எழாமல் இருக்க அடக்குமுறையைக் கையாண்டனர். அடக்கி ஒடுக்கும்படை உருவாகியது. அடிமைகள்—அடிமைச் சொந்தக்காரர்களுக்கு இடையே இருக்கவேண்டிய உறவுகளும், நீதிநெறிகளும் கொண்ட 'தர்மங்கள்' உருவாயின. அடிமைச் சமுதாய அமைப்பைக் காக்கவும், நியாயம் கற்பிக்கவும் அடிமைச் சொந்தக்காரர்களின் பிரதிநிதியான மனுவால் உருவாக்கப் பட்டதே 'மனுதர்மம்.' இதற்கு சமமாக—ஹமுராபி சட்டத் தைக் கூறலாம்.

அடிமைச் சமுதாய அமைப்பின் வளர்ச்சிப்போக்கிலேயே அதன் அக முரண்பாடுகள் கூர்மையடைந்தன. அடிமைச் சொந்தக்காரர்களுக்கும், அடிமைகளுக்கும் இடையே முரண்

www.padippakam.com



பாடுகள் கூர்மையடைந்தன. அடிமைகள் பழைய முறையில் ஆளப்பட முடியாத நிலையும், பொருளாதார வளர்ச்சிக்கு அடிமைச் சமுதாய அமைப்பு தடையான நிலையும் உருவாகியது. அடிமைகளின் பழைய விலங்கு அகற்றப்பட்டது, நிலவுடைமை அமைப்பு உருவாகியது, புதிய விலங்கு பூட்டப்பட்டது. நிலவுடையாளர்களின் தலைவன் அரசன் தோன்றினான்; அரசு தோன்றியது. நிலவுடைமை அமைப்பின் உறவு முறைகள், நீதிநெறிகள் இவற்றை வலியுறுத்த அரசியல் நூல்களும், அற நூல்களுமான அர்த்த சாஸ்திரம், திருக்குறள் போன்றவை உருவாக்கப்பட்டன.

நிலவுடைமைச் சமுதாய அமைப்பில் கைத்தொழில்கள் வளர்ந்தன. விஞ்ஞான வளர்ச்சியும், பொருள் தேவைப் பெருக்கமும் கைத்தொழிலில் ஒரு பெரும் புரட்சியை தோற்றுவித்தது. இப் புரட்சியே தொழிற் புரட்சி என்று வரலாறு கூறுகிறது. இப்புரட்சியின் விளைவாகப் பொருள் உற்பத்தியிலும், உற்பத்தி உறவுகளிலும் பெரும் மாற்றம் ஏற்பட்டது. பொருளாதார அமைப்பில் நிலம் பிரதான உற்பத்திச் சாதனமாக இருந்த நிலைமாறி பெருந்தொழிகள் முக்கியத்துவம் பெறத்தொடங்கின. உற்பத்திச் சாதனத்தில் நிகழ்ந்த புரட்சி உற்பத்தி உறவிலும் ஏற்படத் தொடங்கியது. ஆனால் காலாவதியான நிலவுடைமை உறவுமுறையும், நிலவுடைமை அரசும் இதற்குத் தடையாக இருந்தது. முதலாளித்துவச் சமுதாய அமைப்பின் உடன் பிறப்பான முதலாளிகளும், தொழிலாளர்களும் தம் வளர்ச்சிக்கு முரணான நிலவுடைமை அமைப்பையும், அரசையும் ஜனநாயகப் புரட்சி மூலம் தகர்த்து முதலாளித்துவ அமைப்பை உருவாக்கினர்.

முதலாளித்துவ சமுதாய அமைப்பின் கருவில் உதித்த புரட்சிகர வர்க்கமே தொழிலாளி வர்க்கம். தொழிற்சாலைகள் சில தனிப்பட்ட முதலாளிகளிடம் குவிந்தன; இழப்பதற்கு விலங்குகளைத் தவிர ஏதுமற்ற தொழிலாளி வர்க்க சமூகமே உற்பத்தியில் ஈடுபட்டது. இந்நிலையில், தனியுடைமை—சமூக உற்பத்தி என்ற முரண்பாடு கூர்மையடைந்தது. இம் முரண்பாடு களையப்படவேண்டுமாயின் தனியுடைமை—சமூக உற்பத்தி என்ற நிலை மாறி சமூக உடைமை—சமூக உற்பத்தி என்ற நிலை உருவாகவேண்டும் என்ற விஞ்ஞான சோஷலிசத் தத்துவம் தோன்றியது. சோஷலிசம் மூலமே

படிப்பகம்

www.padippakam.com



முதலாளித்துவ அமைப்பைத் தகர்த்து வர்க்கங்களற்ற—ஆதிக்கம் அற்ற சமுதாயத்தை நிலைநிறுத்த முடியும் என்பதையும், இப்புரட்சியை இறுதிவரை கொண்டு செல்ல வல்லது பாட்டாளி வர்க்கமே என்பதையும் வரலாறு காட்டுகிறது.

அடிமைச் சமுதாயம், நிலவுடைமைச் சமுதாயம், முதலாளித்துவ சமுதாயம், சோஷலிச சமுதாயம் என சமுதாய அமைப்பு மாறி வருதல், மனித விருப்பத்திற்கு அப்பால் இயங்கும் புறநிலை வரலாற்று விதி உலகு தழுவிய ரீதியில் மெய்மையாவதையே உறுதிப்படுத்துகிறது.

ஆனால், இந்தியா, இலங்கை, சீனா மற்றும் சில நாடுகளில் சமுதாய அமைப்பின் தன்னியல்பான மாற்றப் போக்கில் ஏகாதிபத்தியங்களின் தலையீடு காரணமாக அக நிலை முரண்பாட்டில் மாறுதல் ஏற்பட்டுப் புதிய சில திருப்பங்கள் ஏற்பட்டன. (எனினும் நீண்டகாலக் கண்ணோட்டத்தில் பார்த்தால் அவை வரலாற்றின் போக்கைத் தடுத்து நிறுத்த முடியாது.)

நிலவுடைமை அமைப்பின் காவலர்களான மன்னர்களின் ஆட்சிமுறை பலவீனமாக இருந்த நிலையில் ஐரோப்பிய வணிகர்கள் இந்நாடுகளுக்கு வந்தனர். இவ்வணிகர்களின் கம்பெனிகள் வாணிபம் புரியும் நிலையிலிருந்து அரசியல் ஆதிக்கம் செய்யும் நிலைக்கு மாறினர். நிலவுடைமை மன்னர்களிடையே கூர்மையடைந்த முரண்பாடுகள் காரணமாகப் பல உள்நாட்டுப் போர்கள் நிகழ்ந்தன. ஏகாதிபத்திய நாட்டு வணிகக் கம்பெனிகள் இந்நாடுகளின் அக முரண்பாடுகளைப் பயன்படுத்தி பெரும்பகுதியைத் தம் ஆதிக்கத்தின் கீழ் படிப்படியாகக் கொண்டு வந்தன. 'நாட்டுப் பற்று' மிக்க மன்னர்கள் பலர் ஏகாதிபத்திய சக்திகளிடம் ''உபகாரச் சம்பளம்'' பெற்றும், துணைப்படை உடன்பாட்டைச் செய்து கொண்டும் இந்நாடுகளின் சுதந்திரத்தை அடகு வைத்தனர். நிலவுடைமைச் சக்திகளின் இவ்வகை துரோகச் செயல்கள் நிகழ்ந்த போதிலும் உழவர்கள் எண்ணற்ற கிளர்ச்சிகளை ஏகாதிபத்தியத்துக்கு எதிராகச் செய்தனர்.

இங்கிலாந்தில் நிகழ்ந்த தொழிற்புரட்சிக்கு முன்னால் இந்தியா போன்ற நாடுகளிலிருந்து பருத்தி, பட்டு ஆடைகள் ஏற்றுமதியாயின. ஆனால் தொழிற் புரட்சிக்குப் பின்னர்

படிப்பகம்

www.padippakam.com



இங்கிலாந்தின் ஆலைகளில் உற்பத்தி பெருகியதும், ஆங்கில ஆலைப்பொருள்கள் காலனி நாடுகளின் சந்தையில் குவிந்தன. ஆலைப் பொருள்களுடன் போட்டியிடமுடியாத சுதேசி கைத்தொழில்கள் அழிந்தன, காலனி நாடுகளின் பருத்தி போன்ற மூலப்பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன; நுகர்வுப் பொருள்கள் இறக்குமதியாயின.

ஆலைப்பொருள்களின் இறக்குமதியால் தொழிலிழந்த கைத்தொழிலாளர்களும் ஏகாதிபத்தியப் ''பாதுகாப்பு'' பெற்ற மன்னர்களின் படைக்கலைப்பால் போர்த்தொழிலிழந்த வீரர்களும் உழைப்புச் சந்தையில் மலிவாகக் கிடைத்தனதக் கண்ட ஏகாதிபத்திய பிரிட்டிஷ் முதலாளிகளின் மனதில் பிறிதொரு எண்ணமும் உருவாகியது. மூலப்பொருள், உழைப்பு, சந்தை ஆகியன மிக மிக மலிவாகவும், எளிதாகவும் கிடைக்கும் காலனி நாடுகளிலேயே தங்கள் ஆலைகளை நிறுவினால் என்ன என்ற எண்ணமே அது.

ஏகாதிபத்திய பிரிட்டன் முதலாளிகளின் மூலதனம் காலனி நாடுகளில் ஊடுருவியது. பிரிட்டிஷ் முதலாளிகளின் மூலதனத்தை நிர்வகிக்கும் தரகு முதலாளிகளும் இந்த நாடுகளில் உருவாயினர். இப்படித்தான் காலனி நாடுகளில் பல பெருந்தொழில்கள் உருவாயின. நிலப்பிரபுத்துவ உறவு முறையால் சீரழிந்திருந்த — ஏகாதிபத்தியத்தால் மிகுந்த அளவில் சுரண்டப்பட்ட காலனி நாடுகளில் மூலதனம் உருவாகும் நிலையும் இல்லை: அவ்வாறு உருவானாலும் அரசியல் அதிகாரத்தைக் கைக்கொண்டிருந்த பிரிட்டிஷ் முதலாளிகளுடன் போட்டியிடவும் முடிந்திருக்காது. ஆகவே அந்நிய மூலதனமே ஆதிக்கம் செலுத்தியது.

உலக வரலாற்றை நோக்கும்போது, ஏகாதிபத்திய பிடிப்புக்கு ஆளாகாத நாடுகளில் முதலாளித்துவ வளர்ச்சி ஏற்பட ஏற்பட நிலவுடைமை அமைப்புத் தகர்ந்ததையும்—தனது வளர்ச்சிக்குத் தடையாக இருந்த நிலவுடைமை ஆட்சியைத் தகர்த்து அரசியல் அதிகாரத்தை முதலாளித்துவம் கைப்பற்றியதும் காணலாம். ஆனால் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் பிற்போக்கான—தேசிய மூலதனம் உருவாவதற்குச் சாதகமற்ற நிலப்பிரபுத்துவ அமைப்பு தமது மூலதன ஆதிக்கத்திற்கு சாதகமான அடித்தளம் எனக்கருதி நிலப்பிரபுக்களிடம் நல்லுறவு கொண்டனர் ஏகாதிபத்தியவாதிகள்.

படிப்பகம்

www.padippakam.com



ஆயினும் நிலவுடைமைக் கொடுமைகளுக்கு ஆளான உழவர்கள் நிலப்பிரபுக்களுக்கும், மன்னர்களுக்கும் எதிராகக் கிளர்ச்சிகள் பல செய்தனர். ஏகாதிபத்திய மூலதனத்தால் முதலாளித்துவ உற்பத்தி முறை வளர்ந்தபோது அது தவிர்க்க முடியாதவண்ணம் நிலவுடைமை உறவு முறைகளில் கொஞ்சம் தளர்ச்சியை ஏற்படுத்தவே செய்தது. இவ்விளைவாக காலனிய—நிலப்பிரபுத்துவ நாடுகள் காலனிய—அரை நிலப்பிரபுத்துவ நாடுகள் என்ற நிலைக்கு மாறின. இம் மாற்றம் ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட மாற்றத்திற்கு முற்றிலும் மாறானது.

ஆங்கில ஏகாதிபத்தியம் தனது பொருளாதார—அரசியல் ஆதிக்கத்தை மட்டும் காலனி நாடுகளில் நிலை நாட்டவில்லை. காலனிய அடி அமைப்பை நிலைநிறுத்தும் வண்ணம் ஓர் கல்விமுறையையும் உருவாக்கியது. அக்கல்வி முறை ஆங்கிலேயர்களையும், அவர்தம் பண்பாட்டையும் பற்றி உயர்வாக எண்ணும் வண்ணமும், ஆங்கில ஏகாதிபத்தியத்துக்குச் சேவை செய்வதில் பெருமையும் கொள்ளச் செய்யத்தக்கதாக இருந்தது. கல்வி என்பது பொருளாதார அமைப்பைக் காக்கும் அரசியல் லட்சியத்துக்குப் பயன்படும் வண்ணம் ஆளும் வர்க்கத்தால் உருவாக்கப்படும் ஒரு மேல் அமைப்பில் (Superstructure) ஒன்றுதானே. அக்கல்வியைப் பெறும் 'பேறு' பெற்ற ஏகாதிபத்திய ஏஜெண்டுகளான தரகு முதலாளி வர்க்கமும், நிலவுடைமை வர்க்கமும் ஏகாதிபத்தியத்துக்குச் சேவை செய்வதில் பெருமிதம் கொண்டன.

காலனிய, அரை நிலப்பிரபுத்துவ ஆட்சி அமைப்பில் துன்புற்றவர்கள் உழவர்களே. பிரிட்டிஷார்ஆட்சியை நிறுவிய பின்னர் இந்திய வரலாறு வீரம் மிக்க உழவர்கள் ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கும், நிலப்பிரபுத்துவக் கொடுமைக்கும் எதிராக ஓயாமல் நிகழ்த்திய போராட்டங்களின் வரலாறாகத் தான் இருந்து வந்துள்ளது. காலனிய ஆட்சிக்கும், நிலப் பிரபுத்துவச் சுரண்டலுக்கும் எதிரான எண்ணற்ற உழவர் எழுச்சிகளின் வரலாறாகத்தான் இருந்து வந்துள்ளது.

ஏகாதிபத்தியத்தின் அணைப்பில் சுகம் கண்ட 'உபகாரச் சம்பளம்' பெற்ற அரசர்களும், ஜமீன்தார்களும், தரகு முதலாளிகளும் ஆங்கில அரசின்பால் பேரன்பு கொண்டிருந்தனர். அவர்களின் சேவையை மெச்சி ஆங்கில ராணிகள் இட்ட முத்தங்களே ராவ்பகதூர், திவான் பகதூர், சர்

www.padippakam.com



ஆகிய பட்டங்கள். நிலவுடைமை அமைப்பு ஏகாதிபத்திய மூலதனச் சுரண்டலுக்கு ஏற்ற அமைப்பு அல்லவா? மன்னர்கள் ஏகாதிபத்தியத்துக்குச் சேவை செய்தனர்; ஏகாதிபத்தியம் நிலவுடைமை அமைப்பைக் காத்து மன்னர்களுக்கு உதவியது.

ஆங்கில ஏகாதிபத்தியத்தின் கொடுமைக்கு ஆளான உழவர்களும், கிளர்ச்சிக்கார ராணுவ வீரர்களுமே முதலில் இந்தியாவில் ஆங்கில ஏகாதிபத்தியத்தை அழிக்க விரைந்தனர். 1857 இன் முதல் சுதந்திரப்போர் இந்த பரந்த நாடு முழுவதையும் வளைத்த ஒரு காட்டுத் தீயாக மாறி ஏகாதிபத்திய வாதிகள் மீது பல இழிவான் தோல்விகளை சுமத்தியது; அந்நிய ஏகாதிபத்தியத்தின் அடித்தளத்தையே ஆட்டி வைத்து விட்டது. இந்திய மக்களின் இந்த மாபெரும் எழுச்சியானது இந்தியாவின் நிலப்பிரபுத்துவ மன்னர்களது துரோகத்தின் காரணமாகத் தோற்றுவிட்டது. அதன் பின்னர் உழவர்களின் ஆயுத மேந்திய கிளர்ச்சிகள் கணக்கற்றவற்றை இந்தியா கண்டது. ஆயினும், இந்தக் கிளர்ச்சிகள் எல்லாம், விஞ்ஞான பூர்வமான கோட்பாடு இல்லாததனாலும் தோற்றுவிட்டன.

1857 இல் நிகழ்ந்த அந்த மாபெரும் சுதந்திரப் போரில் இந்திய மக்களின் வீரத்தையும், ஏகாதிபத்தியத்தை அழிக்கும் ஆத்திரத்தையும் கண்ட அரசி விக்டோரியா 1858ல் ஓர் மகாசாசனம் வெளியிட்டார். அதன் உள் அர்த்தம் என்னவெனில் ஒரு பக்கம் அரசை, அதாவது ராணுவத்தைப் பலப்படுத்துவதாகவும், மறுபக்கம் காலனி மக்களின் நலனில் அக்கறை கொண்டது போன்ற பாசாங்குடன் சில சில்லரை சீர்திருத்தங்கள் செய்வதாகவும் இருந்தது.

போர் என்பது முரண்பாடுகள் கூர்மையடையும் போது உண்டாகும். முரண்பாடுகளின் தன்மையை ஒட்டியே போர் வடிவங்கள் நிர்ணயமாகின்றன. நிலப்பிரபுத்துவ மன்னர்கள் தரகு முதலாளிகளுக்கும்—ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கும் இடையே முரண்பாடு இல்லையா? அவற்றிடையேயும் முரண்பாடு உண்டு. எனினும் அவை ஆயுதமேந்திய போராட்டத்தால் தீர்த்துக் கொள்ளும் பகைமையான முரண்பாடு அல்ல. சில சீர்திருத்தங்களால் தீர்த்துக்கொள்ளப்படும் பகைமையற்ற முரண்பாடுகள், ஆகவேதான் உழவர்களும்,

படிப்பகம்

www.padippakam.com



ராணுவ வீரர்களும், தொழிலாளர்களும், பிறரும் ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு எதிராகக் கிளர்ந்து எழுந்ததைக் கண்ட தரகுத் தன்மை வாய்ந்த இந்திய பூர்ஷ்வாக்கள் புரட்சிப் பாதையிலிருந்து சமரச, சரணாகதிப் பாதைக்குத் தேசிய விடுதலைப் போராட்டத்தைத் திசை திருப்பிச் செல்லும் நோக்கோடு தலையிட்டனர். இன்று வியட்நாம், கம்போடியா போன்ற நாடுகளில் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து மக்கள் ஆயுதமேந்திய போராட்டம் நடத்தும் தேசியப் புரட்சி யுத்தமே ஏகாதிபத்தியத்துக்கு எதிரான சரியான போராட்டம் என்பது வரலாறு காட்டும் உண்மை.

ஆனால் நிலவுடைமையாளர்களும், தரகு முதலாளிகளும் தங்கள் எசமானர்களான ஏகாதிபத்தியத்துக்குக் கைம்மாறு செய்ய வேண்டி பகைமையான எதிரியை நோக்கி மக்கள் போர் தொடுக்கும்போது மக்களின் போராட்டத்தை சமரச சத்தியாக்கிரகப் பாதைக்குத் திருப்பிவிட்டனர். கணவன்—மனைவி, நண்பர்கள் இடையே ஊடலால் நிகழும் சாத்வீக — சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு ஒப்பான முறைகளைக் கையாண்டதோடு அப்போராட்ட முறைகளுக்கு நியாயமும் தத்துவ விளக்கமும் கற்பித்தனர். ஆனால் சீனாவில் இதே கால கட்டத்தில் ஜப்பானிய ஏகாதிபத்தியத்தையும் அதன் துணைவனான நிலப்பிரபுத்துவக் கொடுங்கோலர்களையும் அம்மக்கள் பொதுவுடைமைக் கட்சியின் தலைமையில் வீரமிகு போராட்டங்களை நடத்தி ஒழித்து இறுதியில் விடுதலையும் பெற்றனர். ஆனால் இந்தியா போன்ற நாடுகளில் இருந்த பொதுவுடைமைக் கட்சியின் தலைமை நிலப்பிரபுத்துவ, தரகு முதலாளித்துவத் தலைமை இயக்கத்தின் ஒரு 'வால்' போலத்தான் செயல்பட்டது.

ஆயினும், துன்புற்ற உழவர்களும், மக்களும் ஆங்கில ஏகாதிபத்தியத்துக்கு எதிராக புரட்சிகர நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். முன்னுவமை காணாத ஒரு புரட்சிகர நிலைமை இந்தியத் துணைக்கண்டத்திலும் தொடர்ந்து வந்தது. ஆசாத்ஹிந்து கைதிகளை விடுதலை செய்யக்கோரிய வலிமையான இயக்கம், இந்தியா எங்கணும் மாணவர்கள் நடத்திய சக்தி வாய்ந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம், அரச சமஸ்தானங்களில் நிகழ்ந்த நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் போராட்டம், தபால் தந்தி ஊழியர்களின் சக்திவாய்ந்த போராட்டம், விமானப்படை, ராணுவக் கிளர்ச்சிகளுடன் இந்திய கப்பல் படையினரின் ஆயுதமேந்திய கிளர்ச்சி, பீகாரில் நிகழ்ந்த

www.padippakam.com



போலீஸ் எழுச்சி, பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் ஒன்றுபட்ட நடவடிக்கைகள், வரலாற்றுப் புகழ்பெற்ற தெலிங்கானா உழவர்களின் ஆயுதமேந்திய போராட்டம் ஆகியவை அனைத்தும் இந்தியாவில் ஏகாதிபத்தியத்தின் ஆட்சியைக் கிட்டத்தட்ட அழிக்கும் நிலைக்குக் கொண்டு வந்தது.

இத்தகைய ஒரு புரட்சிகர சூழ்நிலை முன்நிற்கவே இந்திய மக்களின் புரட்சிகர எழுச்சியை நசுக்கும் நோக்கோடு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தனது கைதேர்ந்த ஏஜெண்டுகளான நிலப்பிரபுத்துவ-தரகு முதலாளித்துவத் தலைமையில் 'சுதந்திரப்'போராட்டத்தை நடத்தச் செய்யவும், அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவும் தொடங்கியது. பழைய காலனி முறையில் ஆள மக்கள் விடமாட்டார்கள் என்ற நிலையில் ஏகாதிபத்தியம் தனது ஏஜெண்டுகளிடம் அரசியல் அதிகாரத்தைப் படிப்படியாகக் கொடுக்க முடிந்தது. மதங்களிடையே நடைபெற்ற படுகொலைகளுக்கு நடுவே இந்தியா பிரிக்கப்பட்டது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பின்னணிக்குச் சென்ற அதே நேரத்தில் தரகு முதலாளித்துவத்தையும்' பெரும் நிலப்பிரபுத்துவத்தையும் பிரதிநிதித்துவப்படுத்திய வர்களிடம் அரசியல் அதிகாரம் கொடுக்கப்பட்டது. இந்த போலித்தனமான சுதந்திர காலனிய-அரை நிலப்பிரபுத்துவ அமைப்பை அரைக்காலனிய-அரை நிலப்பிரபுத்துவ அமைப்பாய் மாற்றியது. இதுபோன்ற 'சுதந்திரமே' பிரிட்டிஷ் காலனி நாடுகள் அனைத்திற்கும் கிடைத்தது.

இந்தியாவில், ஹைதராபாத் நிஜாமின் நிலப்பிரபுத்துவ ஆட்சிக்கெதிரான உழவர்களின் ஆயுதமேந்திய புரட்சித் தீ வளர்வதைக் கண்ட சுதேச மன்னர்கள் பலரும் தமது சிறு படையால் உழவர்களை அடக்கி ஒடுக்கமுடியாது என்றுணர்ந்து, தமது வர்க்க நலனைப் பிரதிபலித்த இந்திய அரசுடன் இணைத்தனர். இதன் பயனாக அவர்கள் இழந்தது ஒன்றும் இல்லை. அரசர்கள் என்ற நிலையிலிருந்து அமைச்சர்கள், கவர்னர்கள், தூதர்கள் போன்ற புதிய பதவிகளில் மக்கள்மீது ஆதிக்கம் செலுத்தினர். நிலப்பிரபுக்கள், ஏகாதிபத்தியம் தம் நலனுக்கு ஏற்படுத்திச் சென்ற அமைப்பான சட்டமன்ற உறுப்பினர்களாகவும், நிலப்பிரபுத்துவ ஆதிக்கத்தின் புதிய வடிவமான பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுமாகி நிலப்பிரபுத்துவ அமைப்பைக் காத்து வருகின்றனர்.

படிப்பகம்

www.padippakam.com



மத்திய காலத்தை நினைவூட்டும் அடிமைத்தனங்களும் அரிசனங்கள் உயிரோடு எரிக்கப்படும் நிகழ்ச்சிகளும், ஷைலக்கையும் மிஞ்சும் லேவாதேவி, கெந்துவட்டி முறைகளும், சாதி வேறுபாடுகளின் இறுக்கத்தால் எண்ணற்றோர் துன்புறும் நிகழ்ச்சிகளும் எதைக் காட்டுகின்றன? இந்த அரை நிலப்பிரபுத்துவ உறவு முறைகளின் இழிதன்மையால், 80 சதவீதம் மக்கள் தொகை விவசாய தொழிலில் ஈடுபடும் நாடுகளில்கூட ஆண்டுதோறும் அரைப்பட்டினியாலும் பட்டினியாலும் அதன் விளைவான நோய்களாலும் கோடிக்கணக்காக செத்து மடியும் நிகழ்ச்சிகள் கொடுமையான நிலப்பிரபுத்துவ அமைப்பு முறை, மக்களின் பிரதான பகைவன் என்பதை நிலைநாட்டுகின்றன.

அரைக்காலனிய, அரை நிலப்பிரபுத்துவ நாடுகளில் உள்ள பல்வேறு முரண்பாடுகளுள் பரந்துபட்ட மக்களுக்கும், நிலப்பிரபுத்துவத்துக்கும் உள்ள முரண்பாடே பிரதானமானது. இம்முரண்பாட்டைத் தீர்ப்பதன்மூலமே பிறமுரண்பாடுகளையும் தீர்க்க முடியும். காலாவதியாகிப்போன அரை நிலப்பிரபுத்துவச் சமூக அமைப்பு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் நேரடி ஆட்சி அகன்றதும் பல்வேறு ஏகாதிபத்தியமும் சமூக ஏகாதிபத்தியமும் தமது (அதிகாரவர்க்கத்) தரகு முதலாளித்துவ ஏஜெண்டுகள் மூலம் எமது மக்களைக் கொள்ளையடிக்க வசதி செய்வதாலும், உழவர்களின் பிரச்சனை இந்தக் கட்டப் புரட்சியின் அடிப்படைப் பிரச்னையாகிறது.

ஏகாதிபத்தியத்திற்குச் சாதகமான இந்த அமைப்புள்ள நாடுகளில் அந்நிய மூலதனத்தின் மொத்த அளவில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றம், அந்நிய நாடுகளுக்குச் செலுத்தப்படும் அதிகமான லாபங்கள், ஆயிரக்கணக்கான கூட்டுத் தொழில்கள், முக்கியப் பொருள்கள், தொழில் நுட்ப அறிவு, ராணுவ சப்ளைகள், படைக்கலத் தொழில்கள், ராணுவத் தளங்கள் நிறுவவும், சந்தைகளுக்காகவும்கூட ஏகாதிபத்தியத்தின் 'உதவி, மான்யம், கடன்கள் ஆகியவற்றின்மீது

www.padippakam.com



முழுமையாகச் சார்ந்திருத்தல், சமமற்ற வாணிப உடன்பாடுகள், பொதுச் சட்டம் 470 (பி.எல். 480) உடன்பாடுகள் ஆகியன அனைத்தும் ஏகாதிபத்தியத்தையும், சமூக ஏகாதிபத்தியத்தையும் அரைக்காலனிய நாடுகளின் எசமானர்களாக்கிவிட்டன. பொதுத்துறை என பறைசாற்றப்படும் அதிகாரவர்க்க முதலாளித்துவம் மக்களிடம் சோஷலிசம் வந்துவிட்டது போன்ற ஓர் மாயையை உருவாக்கும் முறையன்றி வேறொன்றும் இல்லை.

ஆகவே புதிய ஜனநாயகப் புரட்சியான இன்றைய கட்டப் புரட்சியின் கடமை நிலப்பிரபுத்துவம், தரகு பெருமுதலாளித்துவம், ஏகாதிபத்தியம், சமூக ஏகாதிபத்தியம், ஆகியவற்றின் ஆட்சியைத் தூக்கி எறிவதாகும். இதன் சாராம்சம் உழவர் புரட்சியாகும்.

இந்த நாடுகள் அரைக் காலனி, அரை நிலப் பிரபுத்துவ பொருளாதார அமைப்பில் இருப்பவை என்பதற்கு சமுதாய அடி அமைப்பான பொருளாதார அமைப்பு மட்டுமல்லாது, அவ்வமைப்புக்குச் சேவை புரியும் மேல் அமைப்பான கலை, இலக்கியம், கல்விமுறை போன்றவையும் இருப்பது சான்றாகும். ஏகாதிபத்திய ஆட்சிக்குச் சேவை செய்வோரை உருவாக்கப் புகுத்தப்பட்ட 'மெக்காலே கல்வி முறை' மாறவில்லை என்று அடிக்கடி கூக்குரல் கேட்பதும், கல்விமுறைக்கு எதிரான மாணவர் கிளர்ச்சிகளும், ஆங்கிலம் இன்னும் பயிற்று மொழியாக இருப்பதும், ஏகாதிபத்திய அடிமைப் புத்தி இன்னும் மாறாமலிருப்பதும், கல்விக் கூடங்களில் நிலவுடைமைக்குச் சேவை புரிந்த இலக்கியங்களும், கருத்துக்களும் கற்பிக்கப்படுதலும் தற்செயலானது அன்று.

நிலவுடைமை அமைப்பைக் கட்டிக் காக்கப் பொருத்தமான ஒழுக்கக் கருத்துக்களைப் புகன்ற சீன நாட்டுக் கன்பூசியசுக்கு ஒப்பான திருவள்ளுவரின் திருக்குறள், மற்றும் கீதை, வேதங்கள், அனைத்தும் இக்காலத்துக்குப் பொருந்துபவன என்று கூறுவதும், அவற்றைப் பூசிப்பதும் இன்னும்

படிப்பகம்

www.padippakam.com



நிலப்பிரபுத்துவம் ஆதிக்கம் செலுத்துகிறது என்றுதானே பொருள்? நிலப்பிரபுத்துவம் பெரிதும் உள்ள தமிழ் நாட்டுத் தஞ்சை மாவட்டத்தில் சன்மார்க்கம் போதிக்கும் மடங்களும், நிலப்பிரபுக்களை வள்ளல்கள் எனச் சித்தரிக்கும் பண்டைய இலக்கியங்களைப் போதிக்கும் தமிழ்க் கல்லூரிகளும் எண்ணிக்கையில் மிகுந்து காணப்படுதல் நிலப்பிரபுத்துவத்தைக் காப்பதற்குத்தானே?

நிலவுடைமை அமைப்பின் பிறிதொரு மேலமைப்பான— இந்தியா, இலங்கை போன்ற நாடுகளுக்கே உரிய சிறப்பு வடிவமான சாதி அமைப்பு இன்றும் இறுக்கமாக உள்ளதும் நிலப்பிரபுத்துவம் மக்கள் முன் உள்ள பிரதான எதிரி என்பதைத்தான் காட்டுகிறது. நிலவுடைமையாளர்களும், அவற்றின் ஏவலர்களும் அன்பு, சத்தியம், சன்மார்க்கம், அகிம்சை, போன்றனபற்றிப் பேசுதலும், ஏகாதிபத்திய வாதிகள் 'அமைதி' 'போரின்மை' பற்றிப் பேசுதலும் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்ட உணர்வை மழுங்கடிக்கத் தானே?

நிலப்பிரபுத்துவத்துக்கு எதிரான உழவர்களின் தீவிரப் போராட்டம் எழும்போதெல்லாம் ஆளும் வர்க்கம் புதிய புதிய முறைகளில் நிலப்பிரபுத்துவத்தை நிலை நிறுத்துகிறது. நில உச்சவரம்புச் சட்டம், ராஜமானிய ஒழிப்பு, பட்டா வழங்குதல், நிலமீட்சி இயக்கம் யாவும் அடிப்படையில் நிலப்பிரபுத்துவ ஆதிக்கத்தைக் காக்கும் செயல்களே. மன்னர், மானிய ஒழிப்பின் போது மாஜி மன்னரும், தற்போதைய அமைச்சருமான ஒருவர், இந்த நடவடிக்கைக்கு எதிராக பேசிய தம் சகாக்களுக்கு ''புதிய நிலைமைகளுக்கு ஏற்பத் தங்களை மாற்றிக்கொள்ள வேண்டும்'' என்று கூறியதன் பொருள் என்ன? மக்கள் மன்னர்களையே (நிலப்பிரபுத்துவத்தையே) அழித்தொழிக்கக் கிளம்பும்போது கர்ணனின் கணைகளிலிருந்து பார்த்திபனைக் காத்த கண்ணன் போல் ராஜமானிய ஒழிப்பு நமது நிலவுடைமை அமைப்பைக் காத்துள்ளது. பார்த்திபனைப்போல் நாம் மகுடத்தைத்தானே

படிப்பகம்

www.padippakam.com



இழந்தோம். வேறென்ன இழந்தோம்? இதற்காக ஏன் இந்த ஆர்ப்பாட்டம் என்பதுதானே பொருள். ஒடுக்கப்படும் வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதன் மூலம் மட்டுமே உண்மையான தன் விடுதலையைப் பெறமுடியும்.

கிராமங்களில் உழவர் தொடங்கும் போராட்டம் வெற்றி பெறப் போவது உறுதி. ''பசுமைப் புரட்சி நிகழ வில்லையெனில் பெரும்புரட்சி வந்துவிடும்'' என்ற ஓர் அமைச்சரின் கூற்று நிலப்பிரபுத்துவத்துக்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு கூர்மையுற்று உள்ளதையே காட்டுகிறது. இப்போராட்டங்களை அடக்க, என்னதான் சன்மார்க்கத்தையும், அஹிம்சையையும், திருக்குறளையும் போதித்தாலும் அவை உழவர்களின் புரட்சியுணர்வை அடக்க முடியாது. ஏகாதிபத்தியங்கள் உதவினாலும், நேரிடையாகத் தலையிட்டாலும், ஏன் எந்த சக்தியாலும் இப்போராட்ட அலையைத் தடுக்கமுடியாது. உலகிலேயே மிகப் பலம் பொருந்திய தெனக் கூறப்படும் அமெரிக்க ஏகாதிபத்தியம் வீரவியத்நாம் மக்களிடம் வாங்கும் அடி கணக்கற்றது! மக்களே யுத்தத்தின் வெற்றி தோல்வியை நிர்ணயிப்பவர்கள், கருவிகள் அல்ல.

உழவர்களின் வீரஞ்செறிந்த போராட்டங்களை இன்றைய யுகக் காவியங்களான நாவல்களாக எழுதுதல் புரட்சிகர எழுத்தாளர்களின் கடமை.

மண்ணை உடைமையாகக் கொண்ட நிலப்பிரபுக்களின் ஆதிக்கத்துக்கும் கொடுமைக்கும் எதிராகவும், அரசியல் அதிகாரம் பெறவும் மக்கள் நடத்தும். இந்த வரலாற்றை முன் நடத்தும் போராட்டத்தைப் பகைப்புலனாகக் கொண்டுள்ள இந்நாவல் ஓர் நல்ல தொடக்கமே; முடிவன்று. போராட்டங்கள் பெருகப் பெருக இதுபோன்ற இலக்கியங்களும் பெருகும்; இதுபோன்ற இலக்கியங்களும் மக்களின் போராட்டத்திற்கும் எழுச்சிக்கும் உந்து சக்தியாகும்.

''வரலாற்று மாணவன்''

படிப்பகம்

www.padippakam.com



கூரையின் இடுக்குவழியாக சூரியனது கதிர்கள் குத்திட்டு நிலத்தில் ஒருவட்டம் போட்டிருந்தது. பன்னிரண்டு மணி யாகி யிருக்குமா?

செவிகளைக் கூர்மைப்படுத்தினான். எவ்வித மனித அரவமுமே கேட்கவில்லை. கோழிகள் கொக்கரித்து உலாவும் ஒலி இடையிடை கேட்டது.

எழுந்து நின்று சுவரைச் சுற்றி நடந்து வெளி உலகைப் பார்க்க விரும்பினான். சுவர் மட்டத்திலும் பார்க்க கூரை தாழ்ந்திருந்ததால் எதுவுமே தெரியவில்லை.

வெளியே சென்று குடிசையைச் சுற்றியுள்ள கிராமப் பகுதியைப் பார்த்து காற்று வாங்க மனம் துடித்தது.

''குடிசையைத் தவிர முற்றத்தில் கூட சில நாட்களுக்கா யினும் தலைகாட்டாமல் இருப்பதே நல்லது.''

இரவு முத்துவேலு சொன்னது மாதவனின் நினைவில் வந்தது. இரவு பூராவும் முத்துவேலுடன் காடுகளையும் வயல்களையும் கடந்து கால்வலிக்க நடந்து வந்ததை நினைத்துக் கொண்டான். இருபது இருபத்தைந்து மைல் தூரத்திற்கு மேலாக நடந்திருக்கலாம்; அக்குக்கிராமத்துள் நுழைந்த போது சேவல்கள் விடிவிற்காகக் காத்திருந்தவை போல விட்டுவிட்டுக் கூவிக் கொண்டிருந்தன.

குடிசையின் தாழ்வாரத்திலும் முற்றத்திலும் சிலர் தூங் கிக்கொண்டிருந்தனர்.

தண்ணீர் வைக்கும் இடத்தையும் வெளியே அவசர மாயின் செல்ல வேண்டிய பகுதியையும் அரவமின்றிக் காட்டி முத்துவேலு சொன்னான்.

குடிசைக்குள்ளே தூங்கிக்கொண்டிருந்த பிள்ளைகளை அரைத் தூக்கத்தில் எழுப்பிவந்து முற்றத்திலே பாயைப் போட்டுப் படுக்க வைத்தான்.

www.padippakam.com



உள்ளே ஒரு பாயை விரித்து மாதவனைப் படுக்கச் செய்தான். அருகே வெறும் நிலத்திலேயே முத்துவேலு கையைத் தலையணையாக வைத்துப் படுத்துக் கொண்டான்.

''வெளியே தலைகாட்டாமல் உள்ளேயே நல்லாய் படுத்து ஒய்வெடுங்கோ. எப்படியும் தியாகனை மதியம் பேர்லை அனுப்பிவைக்கிறேன்''

முத்துவேலு தூங்கும்போது சொன்னது நினைவில் மீண்டும் வந்தது. இரவு முத்துவேலு காட்டிய இடங்களே மாதவனுக்கு மாறாட்டமாகத் தெரிந்தது. வாசலில் தொங்கிய சாக்கை விலக்கி வெளியே பார்த்தான். முன்புறத்தில் வாழை மரங்களும் பற்றைச் செடிகளும் ஓரளவு மறைவாக இருந்தன அவற்றின் ஊடாக தூரத்தில் ஓரிரு குடிசைகள் தெரிந்தன.

வெளியே செல்ல எண்ணிய மாதவன் முத்துவேலுவின் வார்த்தைகள் நினைவு வரவே சிறிது பின் வாங்கினான்.

'இப்போது என்னதான் அவசரம், தியாகு வரட்டன்' என்று மனதிற்குள் சொல்லிக்கொண்டான்.

முத்துவேலுதான் என்ன மனுஷன்? இத்தனை களைப்பான நடையின் பின்னரும் எவ்வளவு நேரம் தூங்கியிருப்பான். இரண்டு மணிநேரம்? இருக்காது.

''பொழுது காலிக்க முந்தியே நாங்கள் வயலுக்குப் போய் விடுவோம். நடுகை நேரம். இப்பதான் கொஞ்ச நாளைக்கு ஒழுங்காக வேலையிருக்கும். அதை வைத்துக் கொண்டே மாதக் கணக்காக வயிற்றை நிரப்பவேணும்.''

''என்னைப் பற்றியே கவலை வேண்டாம். நான் தனியவே இருந்து விடுவேன்.''

''தியாகு சாப்பாடு ஏதேன் கொண்டு வருவான்.''

''இல்லாவிட்டாலும் பரவாயில்லை. இவையெல்லாம் எனக்குச் சாதாரண பழக்கம்.''

www.padippakam.com



தன் உணவு பற்றிக் கவலைப்பட்ட முத்துவேலுவிடம் மாதவன் சொன்னான்.

## 2

மீண்டும் மாதவன் முகட்டைப் பார்த்தபடி பாயில் படுத்தான். கைகளை கோர்த்து தலைக்கு முண்டாகக் கொடுத்திருந்தான். பகலில் தூங்குவது பழக்கமாக இருந்த போதும் பின்னர் கண்களை மூடவில்லை. புதிய இடம். மனதிலே ஒருவித அமைதியின்மை தியாகுவின் வரவை அவன் மனம் ஆவலோடு நோக்கியது.

அமைதியிழந்த நிலையில் மீண்டும் எழுந்து சிறிது நேரம் பாயில் உட்கார்ந்தான். பின்னர் எழுந்து வந்து வாயிலில் தொங்கிய சாக்கை நீக்கி வெளியே பார்த்தான்.

''எவரும் இல்லாத வேளைகளில் தியாகன் வந்து விட்டில் தங்குவதுண்டு.''

முத்துவேலு இரவு வழியில் சொன்னது அவன் நினைவில் வந்தது.

குடிசையின் தாழ்வார ஓரமாக குனிந்தபடி நடந்தான். குடிசையின் புன்புற செடிமறைவில் சிறுநீர் வாடை வீசியது.

அங்கு சென்று சிறுநீர் கழித்துவிட்டு தாழ்வாரப் பக்கமாக வந்தான். மூலையில் ஒரு பானையில் தண்ணீர் இருந்தது. முகத்தைக் கழுவி வாயை அலம்பிக் கொப்பளித்தான். குளிர்ந்த நீரைக் கையில் ஏந்தி 'மடமட' வெனக் குடித்தான்.

மீண்டும் வாயிலில் தொங்கிய சாக்கை ஒதுக்கி விட்டு உள்ளே நுழைந்தான். தியாகன் அங்கு வந்து

www.padippakam.com



பகலெல்லாம் படித்துக்கொண்டிருப்பான். அல்லது எழுதிக் கொண்டிருப்பான் என்றும் முத்துவேலு சொன்னதும் அவன் நினைவில் வந்தது. குடிசைக்குள்ளே படிப்பதற்கு ஏதாவது கிடைக்குமா என்று சுற்றும் முற்றும் பார்த்தான்.

உள்ளே திருகணியில் வைத்த சில பானைகள் இருந்தன. மூடியால் மூடப்பட்டிருந்தன. ஒரு மூலையில் உறி ஒன்று தொங்கியது. மற்றொரு மூலையில் சில அழுக்கடைந்த ஓலைப் பெட்டிகள்.

ஒரு சிறு ஓலைப் பெட்டியில் காய்ந்து வாடிய வெற்றிலையும் முழுப்பாக்கும் பாக்கு வெட்டியும் இருந்தன. ஏதோ அரிய உணவைக் கண்டவன் போல அதிலேயே குந்திவிட்டான். பாக்கை வெட்டி வாயில் போட்டு வெற்றிலையுடன் சப்பினான். வாயில் உமிழ்நீர் சுரக்கத் தொடங்கியது. ஈரமான சுண்ணாம்பு கிடைக்கவில்லை. காய்ந்த துண்டு களைப் பொறுக்கி எடுத்து வாயில் போட்டுக் கொண்டான்.

மற்றொரு ஓலைப்பெட்டியைப் பிரித்துப் பார்த்தான். இளம் பச்சை ஜாக்கெட்டோடு ஒரு சிறு புத்தகம்; தலைப்பைப் பார்த்தான். 'ஜமீன் இனாம் ஒழிப்பு—சி. என். அண்ணாதுரை எம். ஏ.'

'அறிஞர் அண்ணா' என்று போடாது ஏன் முழுப்பெயர் போட்டார்கள்? பத்துப் பதினைந்து ஆண்டுகளின் முன்னர் அந்நூலைப் படித்தது நினைவில் வந்தது.

தியாகன் இனி இரண்டு மணி நேரம் கழித்து வந்தாலும் பரவாயில்லை என்று மனத்திற்குள் சொல்லிக் கொண்டான்.

மீண்டும் பாயில் சென்று சப்பாணி கட்டியபடி உட்கார்ந்தான். வாய் அசைப்போட்டுக் கொண்டிருந்தது. சுவைத்த வெற்றிலைச் சாறை விழுங்கினான். குடல் நனைந்த குளுமை.

உடனே நூலை விரித்து ஆர்வத்தோடு படிக்கத் தொடங்கினான். ''இரண்டாம் பதிப்பு—1969''

படிப்பகம்

www.padippakam.com



நல்ல தொண்டு. தக்க வேளையில் பதிப்பித்தார்கள். பதிப்பாளர்களைப் பாராட்ட வேண்டும். மனதில் வாழ்த்தினான்.

''நம் நாட்டில், கூலிக்கோ, வாரத்திற்கோ, பிறருடைய நிலத்தைப் பயிரிட்டு வயிறு கழுவவோரே அதிகம், சொந்த நிலத்தில், தானே உழுது உண்டு வாழ்வோரின் தொகை மிகச் மிகச் சொற்பம்.''

''தானே பயிரிட்டு வரும் சொந்த நிலம், தாய்ப்பால் குடித்து வளரும் குழந்தைபோல...''

என்ன அழகான உவமானம்! மெய்மறந்து மாதவனின் நெஞ்சம் எழுத்துக்களிலே ஈடுபடுகிறது.

''உழுதுண்டு வாழ்வானே வாழ்வான், மற்றவர்கள் தொழுதுண்டு பின் செல்பவர்கள் என்று நகரத்தில் படிக்கிறோம். படித்தானபிறகு, நமக்கே எண்ணம் அது போலிருப்பதில்லை. அவன் பட்டிக் காட்டான் என்றுதான் கேலி செய்கிறோம்...''

பண்ணையாருக்கும் கணக்கெழுதுபவருக்குமிடையே நிலம், விளைச்சல் பற்றிய உரையாடல் எழுகிறது. பண்ணையார்களின் கொடுமைகளை அண்ணா அழகு தமிழில் அள்ளி வீசுகிறார்.

''(பண்ணையார்களிலே) மிலாரும் கையுமாக இருப்பவர்கள்! கம்பத்திலே கட்டிவிட்டுக் கணக்குக் கேட்பவர்கள்! காரித்துப்பிவிட்டு வாசற்படி ஏறாதே என்று சீறுபவர்கள்! இந்தியாதிகள்!!''

அதன் கீழே அடையாளமிட்டிருந்த வரிகளை மாதவன் ஊன்றிப் படித்தான்.

''மற்ற பல முதலாளித்துவத்தைவிட நில முதலாளித்துவமிருக்கிறதே அது மனிதத் தன்மையை மாய்ப்பதிலே, முதல் தரமானது. குடும்பம் குடும்பமாக, இந்த முதலாளித்துவத்

www.padippakam.com



துக்கு அடிமையாகி, தலைமுறை தலைமுறையாக, காலில் வெள்ளெலும்பு முளைத்த நாள் முதலாய் அடிமைக் காரனையே' என்று நந்தனார் பாடினார் என்கிறார்கள் கதையில். வாழ்க்கையிலே அதைப் பாடிச் சொல்வதில்லை. ஆனால் உண்மை நிலை என்னவோ இதுதான்...''

மாதவனின் மனம் நிறைந்து சிரிப்பு உதட்டிலே வழிந்தது.

இந்த அறிஞர் அண்ணாவின் அறிவுக் கருத்துக்களை மீண்டும் இத்தனை காலம் படிக்காதுவிட்டேனே என்று நெஞ்சம் ஏங்கியது.

சுவையான நாவல் படிப்பதுபோல வேகமாக பக்கங்கள் ஓடிக்கொண்டிருந்தன.

அரும்பிய பசியே மறந்துவிட்டது.

முதுகு சிறிது வலித்தது.

படுத்துக்கொண்டு படிக்கத் தொடங்கினான்.

இடையிடை படிப்பை நிறுத்தி எவராவது வருகிறார் களா என்று செவிகளைக் கூர்மையாக்கிக் கொண்டான்.

நூல் முடியப்போகிறது. அதன் பின்னர் என்ன செய்வது?.

தியாகு எப்பொழுது வரப்போகிறான்?

வந்துவிட்டால் ஏதாவது வேலை செய்யலாமே; விவா திக்கலாமே; இங்குள்ள விவசாயிகள் பற்றிய விவரம் யாவும் அவனது கண்ணோட்டத்தில் அறிந்து விடலாமே.

எப்படியும் புத்தகத்தை முதலில் முடித்து விடுவோம்.

உடலும் கண்களும் மீண்டும் சோர்ந்து கொண்டு வந்தன.

படிப்பகம்

www.padippakam.com



மெல்லிய குரலில் முணுமுணுத்தான்.

''இதெல்லாம் ஒரு கஷ்டமா? இங்கே தங்கியிருக்கும் வரை வேண்டியதையெல்லாம் உரிமையோடு கேட்க வேணும். இப்படி உங்கடை தேவைகளை மறைத்து நசிவாகப் பேசிறது எங்களுக்கெல்லாம் பிடிக்காது''

சொல்லியபடியே வாசலை மறைத்திருந்த சாக்கை தள்ளிக்கொண்டே வெளியே சென்றாள்.

அவளின் நறுக்கான தோடி வார்த்தைகள் மாதவனை உலுப்பிவிட்டன. அறியாத பெண் ஒருத்தி கன்னத்தில் அறைந்ததுபோல உணர்ந்தான்.

யாரடா இவள்? வந்ததும் வராததுமாக இப்படியெல் லாம் பேசுகிறாளே?

மாதவன் சிறிதுநேரம் அசந்துபோய் அப்படியே இருந் தான்.

அவள் ஒரு பானைத் தண்ணீரையும் அலுமினியக் குவளை ஒன்றையும் வாயிலுக்கே கொண்டுவந்து விட்டாள்.

அடுத்த வேலையை எதிர்பார்ப்பவள் போல் நின்றாள். அவளைத் திருப்திப்படுத்தவாயினும் வேலை கொடுக்க விரும்பினான்.

''பல்லு விளக்க வேப்பங்குச்சி அல்லது கரிக்கட்டி ஏதேன்...''

மனக்கூச்சத்தோடு இழுத்தான்.

அவள் தன் வெற்றிப் புன்னகையை உதிர்த்துவிட்டு வெளியே சென்றாள். சிறிது நேரத்தில் கையில் வேப்பங் குச்சியும் கரிக்கட்டித் துண்டு ஒன்றும் கொண்டு வந்தாள்.

அவன் வேப்பங்குச்சியைப் பெற்று பற்களைத் தீட்டத் தொடங்கினான்.

www.padippakam.com



அவள் ஒரு வாழையிலைத் துண்டு கொண்டு வந்தாள். பின்னர் சிறுகுடில் போலிருந்த குசிக்குள்ளே சென்று தகரப் 'பேணி ஒன்றையும் கொண்டு வந்தாள்.

''இடியப்பம் காய்ஞ்சு போயிருக்கும். வாழைப் பழத் தோடை பேணிக்குள் சீனியும் எடுத்து பிசைந்து போட்டு சாப்பிடுங்கோ. பொழுது படுமட்டுக்கும் வெளியை தலை காட்ட வேண்டாம். நான் போக வேணும்''

எதையோ நினைந்தவள் போல அவசரப் பட்டாள். அவள் உடலிலும் பேச்சிலும் சுறுசுறுப்பு விளையாடிக் கொண் டிருந்தது.

''உங்க உதவிக்கெல்லாம் நன்றி...''

தயக்கத்தோடும் நன்றி உணர்வோடும் மாதவன் சொன்னான்.

''அப்பிடியெல்லாம் இங்கே சொல்ல வேண்டியதில்லை. நானே உங்களுக்குச் சாப்பாடு போட்டு சாப்பிடு மட்டும் நின்று உதவ வேணும். எனக்கு அவசர வேலை இருப்பதால் போக வேண்டியிருக்கு. அதுதான் வருத்தமாயுமிருக்கு''

அவளது முகம் வாடுவது போலிருந்தது.

''இவ்வளவு உதவியுமே போதுமே. எனக்கும் இரண்டு கையிருக்கு. செய்வதற்கு வேலையில்லாமல் தூங்கிக் கொண் டிருக்கிறேன்''

மாதவனின் தயக்கம் சிறிது நீங்கி வந்தது.

''இரவெல்லாம் தூக்கம் விழித்திருப்பீங்கள். உங்கள் தூக்கத்தைப் பார்த்துக் கொண்டே நின்றேன். முதலில் எழுப்பத் தயங்கினேன். எனக்கு அவசர வேலையிருக்கு. அதனால்தான் உங்களை உலுப்பி எழுப்பினேன்''

''அதிலேயென்ன''

www.padippakam.com



''மூண்டு மணிக்கு மேலை ஆகியிருக்கும். நீங்களும் பகலெல்லாம் பட்டினியாயிருப்பதென்றால்...''

''அதெல்லாம் பழக்கமாகி விட்டுது. இரண்டு மூன்று நாட்களுக்கே சாப்பாடில்லாமல் என்னால் இருக்க முடியும்''

மாதவன் சிரித்தபடியே சொன்னான். அதில் தற்பெருமையும் கலந்திருந்தது.

அவளும் பதிலுக்குச் சிரித்தாள். அச்சிரிப்பில் இதயபூர்வமான மகிழ்ச்சி இருக்கவில்லை.

# 4

பல் தீட்டி முகம் கழுவிவிட்டு மாதவன் எரிந்து கொண்டிருந்த வயிற்றுப் பசியைத் தணிக்க ஆரம்பித்தான். அப்போதும் அந்தப் பெண்ணின் முகமும் பேச்சும் அசைவுகளும் அவன் கண்முன்னே தோன்றின. அவளது பெயர், குடும்பம் ஆகியவற்றை விசாரிக்கத் தவறியமைக்காக வருந்தினான்.

அவள் சொன்னபடியே இடியப்பத்தைப் பிசைந்து சாப்பிட்டான். கோதுமை மாவில் அவித்த இடியப்பம். அவள் சொன்னபடி அத்தனை மோசமாய் காய்ந்து விடவில்லை.

சாப்பிட்ட இலையை தன்புறச் சுவர் வழியாக வெளியே வீசிவிட்டு கையைக் கழுவினான். தண்ணீரால் மிகுதி வயிற்றை நிரப்பினான். பானையில் கிடந்து குளிர்ந்த நீர் வரண்ட நாவிற்கு சுவையாகவும் இருந்தது.

படிப்பகம்

www.padippakam.com



மீண்டும் பாயில் உட்கார்ந்து படித்து முடித்த அறிஞர் அண்ணாவின் 'ஜமீன் இனாம் ஒழிப்பு' என்ற அந்நூலைப் புரட்டிப் பார்த்தான். பென்சிலால் அடையாளம் செய்திருந்த பகுதிகளை மட்டும் மீண்டும் படித்துப் பார்த்தான்.

சொல்லுக்கும் செயலுக்குமுள்ள முரண்பாடுகள், பிரச்சனையை அணுகும் முறைகள், தீர்வுகாண விரும்பும் போக்குகள் யாவும் அவன் மனதில் பல்வேறு சிந்தனைகளை எழுப்பின.

''பயிரிடுபவனைப் பாடுபடுத்தாதே''

''நியாயமான வாரம் கொடு''

17-ம் பக்கத்தில் இவ்வரிகளைப் படித்துவிட்டு மெல்லிய புன்னகையோடு 31-ம் பக்கத்தில் அடையாளமிட்ட பகுதியை உரத்து வாசித்தான்.

''ஜெயிலிலே தள்ளுவார்கள்!''

''ஏன்? நியாயத்தைக் கேட்டால் தண்டிக்கும் ராஜாங்கமா இது?''

இவற்றிற்கும் எமது நாட்டு நிலைக்கும் உள்ள தொடர்பு என்ன? உறவு எது?

எமது பிரச்சனை வாரமா? நிலமா? அரசா?

வாரத்தைக் கட்டுப்படுத்தும் சட்டம் இங்கும் உண்டு தானே? அது செயல்படுகிறதா? ஏன் செயல்படவில்லை? காரணம்? நிலமானிய சமுதாய அமைப்பா? சட்டங்களைக் கூட கண்துடைப்பாகவா ஆக்குகிறார்கள். செயல் முறையில் வெற்றி பெறுமா என்பதை இவர்கள் ஏன் ஆராய்வதில்லை?

# 5

''வணக்கம், நான்தான் தியாகராஜன் தெரிகிறதா?''

திடீரென சாக்குத்திரையை நீக்கியபடி தியாகன் வந்து நின்றான்.

''ஓ, நல்ல நினைவிருக்கிறது. உன்னைத்தான் பார்த்துக் கொண்டேயிருக்கிறேனே. முன்னர் பழங்குடிக்கு வந்ததெல்லாம் நல்ல நினைவிருக்கு. படிப்பெல்லாம் விட்டிவிட்டாய் என்று முத்துவேலு சொல்லியே தெரியும்''

மாதவன் எழுந்து தியாகராஜனின் ஒல்லியான உருவத்தை அணைத்துக் கொண்டான்.

''நான் கந்தாவளை வரை ஒரு அலுவலாகச் சென்றிருந்தேன். பிந்தித்தான் செய்தி வந்தது. உடனே புறப்பட்டு வந்தேன்''

சுருண்ட மயிரை மேலே தடவிவிட்டுக்கொண்டே சொன்னான். அடுக்கில்லாத பல் வரிசை; கரிய உதடுகள்; கழுத்திலே வியர்வைபடிந்து பூத்துப்போயிருந்தது. சேட்டின் காலரில்-ஊத்தை கோடாகப் படிந்து கிடந்தது. விளைந்த நெற்கதிரின் நிறம்; ஒல்லியான உடற்கட்டு.

''என்ன மெலிஞ்சு எலும்பாகி விட்டாய்?''

தன் வெற்றிலைக்காவி ஏறிய பல் வரிசை தெரிய சிரித்தபடியே மாதவன் சொன்னான்.

''இரவு பகலாக சயிக்கிள் ஓட்டந்தானே''

''பகலிலும் ஓடித்திரிகிறாயா?''

''இரவிலும் பார்க்க பகல்தான் இங்கே வெளியே திரிய பாதுகாப்பானது. இரவிலே யாழ்ப்பாணம் கண்டி றோட்டில் ஒவ்வொருவரையும் நிறுத்திப் பார்க்கிறார்கள்''

www.padippakam.com



''அப்பிடியா? இப்பவே அரசகாவலர்கள் உங்களுக்குப் பயப்பிடத் தொடங்கி விட்டார்கள் போலையிருக்கு''

மாதவன் சிரித்தபடியே சொன்னான்.

''தாடிக்காரர் சிலபேர் கிளிநொச்சிப் பகுதியில் இருக் கிறார்கள் என்றொரு வதந்தி. அதுக்காகத்தான் கொஞ்சம் உசாராயிருக்கிறார்கள்.''

''அப்பிடியா?''

''அதெல்லாம் சரி, நீங்க சாப்பிட்டீங்களா? சைக்கிளிலை போய் ஏதேனும் வாங்கிவரட்டா?''

''இப்பதான் சாப்பிட்டனே, முத்து அனுப்பியிருந்தார். இனி பொழுதுபட்ட பிறகு பார்ப்பமே''

''பொழுதுபட எல்லாரும் வந்துவிடுவாங்கள். அதுக்குப் பிறகுதான் எல்லா வீட்டிலும் புகைக்கத் தொடங்கும்''

தியாகு சொன்னான்.

''இங்கென்ன, விவசாயிகள் வாழும் எல்லாக் கிராமங் களிலும் அப்படித்தானே''

மாதவன் கூறினான்.

''ஆனால் வயலில் வேலை இல்லாவிட்டாலும் இப்படித் தான்''

''ஏன் கூப்பனரிசி கிடைக்காதா?''

அங்குள்ள நிலைமையை அறிவதற்காக மாதவன் கேட் டான்.

''தலைக்கு ஒரு கொத்தரிசி. ஒரு நேரமாக்கவே போதாதே. அதைவிட கூப்பன்களையெல்லாம் பெரும் பாலும் அடைவு வைத்து விடுவார்கள்.''

தியாகு சொன்னான்.

www.padippakam.com



''இங்கும் அப்பிடியா? ஏழைகளிடம் இதெல்லாம் சகஜம்தான். நான் பார்த்த கிராமங்களிலெல்லாம் நிலமை ஒன்றேதான்''

மாதவன் அங்குள்ள விவசாயிகளின் நிலமைகளைப் பொதுமைப்படுத்தினான். தியாகு சொன்னான்:

''ஆனாலும் இங்கே நீங்கள் படிப்பதற்கு அதிகமுண்டு. வேறு அவசர வேலை ஒன்றும் இல்லைத்தானே''

''தற்போது இல்லை. இனிமேல் வந்தால்தான். மக்களோடு பழகும்வரை பாதுகாப்புத்தான் முக்கியம்''

''அதைப் பற்றி அதிக கவலை வேண்டாம். முத்தண்ணை கண்ணை மூடிக்கொண்டு அழைத்து வரமாட்டார். அதனால் காட்டிக் கொடுக்கத் தக்கவர்கள் இங்கே இல்லை என்று நான் கூறவில்லை. கவனமாகத்தான் உலாவ வேண்டும். ராத்திரி வழியில் ஒரு அசம்பர்விதமும் நடக்கவில்லைத் தானே.''

தியாகு எதையும் உத்தரவாதமளிக்காத விதமாகப் பேசினான். எதிரிகள் பற்றி எல்லோரும் எப்பொழுதும் விழிப்பாயிருப்பது நல்லது என்பதே அவனது கருத்தாகவும் இருந்தது.

''வழியிலே முத்துவேலுவுக்குத் தெரிந்தவர்கள் இடைமறித்து 'என்னை யார்?' என்று விசாரித்தார்கள். அவர், 'பக்கத்துக் கிராமம். துணைக்காக அழைத்து வந்தேன்' என்று ஒரு மாதிரி கதைத்து சமாளித்துக்கொண்டே வந்தார்''

பதில் கூறிவிட்டு தியாகுவை கிணற்றடிக்குச் சென்று புதுத்தண்ணீர் எடுத்து வரும்படி மாதவன் வேண்டினான். தியாகு உள்ளே இருந்த அலுமினியப் பாத்திரம் ஒன்றையும் குவளை ஒன்றையும் எடுத்துச் சென்றான்.

www.padippakam.com

# 6

சிறிது நேரத்தில் தியாகன் தண்ணீருடன் வந்தான். தண்ணீர் குவளையை மாதவனிடம் கொடுத்தான்.

''எப்படி, இங்கே நல்ல தண்ணீர் கிடைக்குதா?'' மாதவன் கேட்டான்.

''மலேரியா, வயிற்றுளைவு, கொழுக்கிப்பூச்சி, மற்றும் குடல் நோயெல்லாம் இங்கே சர்வ சாதாரணம். நீங்கள் தண்ணீரைக் கொதிக்க வைத்துக் குடிப்பதுதான் நல்லது''

''பரவாயில்லை. உதெல்லாம் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? இங்கே மற்றவர்களுக்குப் பிடிக்கும் நோய் துன்பமெல்லாம் எனக்குந்தான் வரட்டுமே. நானும் அனுபவித்துப் பார்த்து விடுகிறேன்''

''உங்களுக்கு நோய் வந்தால் ஆஸ்பத்திரிக்கும் அழைத்துச் செல்ல முடியாதே. உப்படியெல்லாம் நீங்கள்...''

''இதுவும் ஒரு அசட்டுத் துணிச்சலாகத்தான் இருந்தாலும் இருந்திட்டுப் போகட்டும். என் உயிர் மட்டும் என்ன பெரிசா?''

''இரவிலே நுளம்புக்கடி தாங்க முடியாது''

''அப்பிடியா. இதுகூட ஆச்சரியமில்லை. விடியப்புறம் தான் வந்தேன். அப்படியே தூங்கி விட்டேன். எதுவும் தெரியவில்லை என் உடம்பெல்லாம் நுளம்புக் கடிக்கு பழக்கம். நுளம்பின் கீதம்தான் எனக்குக் கொஞ்சமும் பிடிக்காது அதற்காக சிலவேளை காதை மூடிக்கொண்டேதான் படுப்பேன். ஆனால் இரவிலே தூக்கம் விழிப்பதற்கும் நுளம்பு உதவி செய்யும்''

ம—2

www.padippakam.com



''உங்க தூக்கமெல்லாம் பகலில்தானே''

''அதுவும் உண்மைதான்''

மாதவன் சிரித்தான்.

''எழுந்து அதிக நேரமாகி விட்டுதோ''

''மத்தியானமே எழுந்துவிட்டேன். இந்தப் புத்தகத்தைப் படித்துவிட்டு மற்றொரு தடவை பூனைத் தூக்கம் போட்டேன். இது உன் புத்தகந்தானே?''

பாயில் கவிட்டிருந்த அறிஞர் அண்ணாவின் சிறு நூலைக் காட்டியபடியே மாதவன் கேட்டான்.

''அடுத்த கிராமத்திலே அழகேசன் என்றோர் தம்பி இருக்கிறார். அவர் அறிஞர் அண்ணாவையே பெரிய புரட்சிவாதியாகவும் கம்யூனிஸ்டாகவும் சொல்லி வாதிடுவார்''

''இந்தப் புத்தகத்தில் அடையாளம் செய்ததெல்லாம் அவன்தானா''

''அவனேதான். என்னிடம் படிக்கத் தந்தான். நான் தான் முத்தண்ணாவிற்கும் கொடுத்தேன்''

தியாகன் புத்தகத்தைத் தன் கையில் வாங்கிக்கொண்டே சொன்னான்.

''இளம் வயதில் கொஞ்சம் துடிப்போடு எழுதினது அப்படியே தெரிகிறது. புள்ளி விபரங்களையெல்லாம் அழகாகக் கையாண்டிருக்கிறார்''

''இதைக் கேளுங்கோ'' என்று சொன்னபடியே புத்தகத்தின் ஒரு பகுதியைப் பிரித்து தியாகன் படித்தான்:

''பிரிட்டிஷார் ஆளவந்ததும், தங்களுக்கு 'ஆமாம் சாமிகள்' வேண்டும் என்பதற்காக, இந்தப் பிரபுக்களை உண்டாக்கிக் கொண்டனர். தொப்பி போட்ட துரையைச்

www.padippakam.com



சுற்றி ஜரிகைக் குல்லாய் அணிந்த ஜெமீன்தாரன்; 'இருவரும் நீடூழிகாலம் வாழணும்னு பரந்தாமனைத் தோத்தரிக்கிறேன்' என்று கூறி ஜெபமாலையும் கையுமாக நிற்கும் புரோகிதன்; முதுகெலும்பு முறியப் பாடுபட்டு, இந்த மூன்று ரகத்துக்கும் சுக வாழ்வு அளிக்க, விவசாயி! இதுவே முதலாளித்துவமுறை. இதைப் படித்துக்காட்டி ஏகாதிபத்தியம் எவ்வாறு நிலப் பிரபுத்துவத்தைப் பாதுகாத்து வந்தது என்பதை எப்படி அறிஞர் அண்ணா அழகாக உதாரணத்துடன் விளக்கியுள்ளார் என்று நண்பர் விளக்கம் கூறுவார்.'

தியாகன் விரலிடையே புத்தகத்தை மூடியபடி சொன்னான்.

''நண்பர் நம்பிக்கையானவரென்றால் ஒரு நாளைக்கு அழைத்து வா. இதிலும் பார்க்க சிறந்த இடங்களை நான் அவருக்குப் படித்துக் காட்டுவேன்.''

''எதைப் படித்துக் காட்டப் போகிறீங்கள்?''

புத்தகத்தை வாங்கி மாதவன் படித்தான்:

'பயிரிடுபவனைப் பாடுபடுத்தாதே.'

'நியாயமான, வாரம் கொடு'

'நிலத்தை, முதலாளித்துவ மாக்காதே?'

'ஜமீன், மிட்டா, மிராசு, பண்ணை, பாத்யதை ஆகியவைகளைக் கலைத்து விடு'

மாதவன் நிமிர்ந்து தியாகுவைப் பார்த்துவிட்டு மீண்டும் தொடர்ந்தான்:

''எப்படி அழகாக எழுதியிருக்கிறார் பார்த்தாயா?''

''பேச்சில்கூட மிக அழகாக, அடுக்காகப் பேசுவாராம். அழகேசன், தானே நேரில் பேச்சும் கேட்டிருக்கிறானாம்.''

படிப்பகம்

www.padippakam.com



'''நியாயமான, வாரம் கொடு'—என்ற உரத்த குரல் ஒன்றுடனேயே அண்ணாவின் புரட்சி உச்சநிலை அடைந்து விடுகிறது. இல்லையா?''

அதை ஆமோதிக்குமுன் தியாகன் ஏதோ அரவம் கேட்டு வெளியே சென்றான்.

## 7

வயலிலிருந்து வேலையாட்கள் திரும்பத் தொடங்கி விட்டனர். வியர்வை வடிந்த முகத்தோடும் களைத்துச் சோர்ந்த நடையோடும் ஒற்றையடிப் பாதை வழியே இடையிடை கதைத்துப் பேசியபடி, மாலையில் கலகலக்கும் குருவிகள் போலக் கூடுகளை நோக்கிப் போய்க் கொண்டிருந்தனர்.

கிராமத்திலே நடக்க முடியாத கிழடுகள், குழந்தைகள் தவிர எவருமில்லை. நோயாளர்கள்கூட தமது வருத்தத்தைப் பற்றியே கவலைப்படாது வயலுக்குச் சென்று இயன்றளவு உழைப்பர். வேலை கிடைக்கக்கூடிய ஓரிரு வாரத்தை அவர்கள் இழந்துவிட முடியாது.

பொழுது கருகிக் கொண்டிருந்தது.

சிறிது நேரத்தில் முத்துவேலு வீட்டாரும் வந்து சேர்ந்தனர். முத்துவேலுவின் மனைவி, மூன்று பிள்ளைகள், மாமிக் கிழவி யாவருமே ஒவ்வொருவராக வந்து சேர்ந்தனர்.

முத்துவேலு ஆர்வத்தோடும் மன்னிப்புக் கோரும் மனோபாவத்தோடும் மாதவனிடம் வந்து பேச்சுக் கொடுத்தான்:

படிப்பகம்

www.padippakam.com



''நல்லாய் தூங்கினீங்களா? எப்படி பொழுது போச்சா? தியாகு, நீ எப்ப வந்தாய்?''

மாதவனும் தியாகனும் பதில்கூறிக் கொண்டிருக்கும் போது திடீரென நினைவு வந்தவனாக முத்துவேலு மீண்டும் கேட்டான்:

''சாப்பாடு அனுப்பினேனே. சாப்பிட்டீங்களா?''

மாதவனுக்கு உடனே சாப்பாடு கொண்டு வந்து கொடுத்து, சில நிமிடங்களிலேயே அவன் மனதில் கேள்விக் குறியை எழுப்பிவிட்டுச் சென்ற அப்பெண்ணின் நினைவு வந்தது.

''முன்பின் தெரியாத ஒரு பெண்ணிடம் கொடுத்து சாப்பாடு அனுப்பிறீங்களே. நான் முதலில் பயந்தே போய் விட்டேன். எப்பிடி நம்பிக்கையான பெண்ணா?''

மாதவன் முத்துவேலுவைப் பார்த்துக் கேட்டான்.

''எந்தப் பெண்?''

தியாகனும் முத்துவேலுவையே பார்த்துக் கேட்டான்.

''நீங்க பட்டினிதான் கிடந்தாலும் அப்பிடி நம்பிக்கை யில்லாத ஆளிடம் கொடுத்து அனுப்புவேனா? அதெல்லாம் புடம் போட்ட இரும்பு...''

''மூன்று நாலு நிமிஷமே யிருக்காது. குடுகுடுடென்று தன் வீட்டில் நுழைபவள் போலவும் என்னை நல்லாய் தெரிந்தவள் போலவும் கேட்டதெல்லாவற்றையும் முடித்து விட்டு ஓடினாள்...''

''பாவம் அவள் குழந்தைக்குப் பால் கொடுக்க ஓடி வந்தவள். அவளைப்போல வேறு நம்பிக்கையானவர் கிடைக்கவில்லை. அதுதான் அவளிடம் சொல்லியனுப் பினேன்...''

www.padippakam.com



னாள். பின்னர் தந்தையிடம், புறப்பக்கம் சீவி மெருகாக்கிய கரிய சிரட்டையைக் கொடுத்து தேநீரை நிரப்பினாள். நிமிர்ந்து நின்றபடி சிறிது நாணத்தோடு மாதவனைப் பார்த்தாள்.

''ஆடு கோழியைப் பார்க்கிறாங்களாக்கும். சுந்தரி நீ போய் வரச்சொல்லு.''

''அண்ணை கடைக்குப் போட்டார். சின்னண்ணை ஆடு கட்டிப் போட்டு வாய்க்காலுக்குக் குளிக்கப் போட்டார்.''

சுந்தரி சொல்லிவிட்டு வாசல் பக்கமாகத் திரும்பினாள்.

''இங்கே வா சுந்தரி''

மாதவன் வாஞ்சையோடு அழைத்தான்.

''விளக்குக் கொளுத்திக் கொண்டு வாறன்''

சுந்தரி வெளியே ஓடினாள்.

''அவள் விவேகமான பெட்டை''

தியாகன் தேநீரை சுவைத்தபடியே சொன்னான்.

''இங்கே விவேகம் புத்திசாலித்தனமெல்லாம் இருந்து தான் என்ன பயன்? படிக்க வசதியான பள்ளிக்கூடமிருக்கா. அல்லது வெளியே அனுப்பிப் படிப்பிக்க வசதியிருக்கா. அப்படித்தான் படித்தாலும் வேலை கிடைக்கப் போகுதா?''

முத்துவேலு கூறினான்.

''புதுக்கல்வி ஒன்றுதான் வழி''

மாதவன் தேநீரைக் குடித்தான்.

சுந்தரி கண்ணாடி லாந்தருடன் உள்ளே வந்தாள். உள்ளே தொங்கிக்கொண்டிருந்த வளைந்த கம்பி ஒன்றில் விளக்கின் கைப்பிடியை மாட்டினாள்.

www.padippakam.com



மாதவன் அவளை அழைத்து அருகே பாயில் உட்காரச் செய்து பள்ளிக்கூடம், படிப்பு, பாடசாலை ஆசிரியர் பற்றி எல்லாம் விசாரித்தான்.

''நாத்து நடுகைக்காக பள்ளிக்குப் போகாமல் விட்டால் வாத்தியார் ஏசமாட்டாரா?''

மாதவன் சுந்தரியின் முதுகை வருடியபடியே வாஞ்சை யோடு கேட்டான்,

''ஏசுறதென்ன. அடியும் விழும். எங்கடை வாத்தியார் தெடுகப் பேசுவார். படிக்கிறதென்றால் ஒழுங்காக வந்து படிக்கவேணும். இல்லாவிட்டால் ஒரேயடியாய் கூலியாளாய் போய்விடவேணும். ரண்டு தோணிலை கால் வைக்க வேண்டாமென்று...''

சுந்தரி சொன்னாள். முத்துவேலு இடையில் புகுந்து சொன்னான்:

''போன போகம் அருவிவெட்டு முடிந்துபோன பெடியங்க ளெல்லாருக்கும் தலைமை வாத்தியார் பிரம்பாலை குண்டி யிலை தலைக்கு மூன்று அடி போட்டாராம். சின்னவன் அதன் பிறகு பள்ளிக்குப் போகமாட்டன் என்று நின்றான். வாத்தியாரை வரப்பிலை ஒருநாள் கண்டு விஷயத்தை விளக்கமாய் சொன்னன். என்ன வாத்தியார் இங்கை வாங்கின வயலைச் செய்யப் போகிறீர்களோ அல்லது எங்கேன் மலை நாட்டுப் பக்கமாய் போய் படிப்பிக்கப் போறீங் களோ என்று கேட்டன். மறுநாளே வீட்டுக்கு வந்து சின்ன வனைச் சமாதானப்படுத்தி பள்ளிக்கு அழைத்துச் சென்றார். இப்ப அடிக்கிறதையும் குறைத்துப் போட்டாராம்.''

''தலைமை ஆசிரியர் அரசியலில் எப்படி இருக்கிறார்?'' மாதவன் கேட்டான்.

''அதிகமாக ஈடுபடமாட்டார்.''

தியாகு பதில் கூறினான்.

www.padippakam.com



''ஈடுபடாதவர் என்று எவருமில்லை. வெளியே காட்டிக் கொள்ள விரும்பாதவர்கள் தற்போதைய அரசை ஆதரிப்ப வர்களே. எவ்வித மாற்றத்தையும் விரும்பாதவர்கள். இராமராஜ்யம் நடைபெறுவதாக எண்ணிக்கொள்பவர்கள். அப்ப நிலம் கொஞ்சமாவது சேர்த்திருப்பாரே.''

மாதவன் சொன்னான்.

''பத்து ஏக்கருக்குக் குறையாமல்...''

முத்துவேலு பதில் கூறினான்.

''அதுதானே கேட்டன். இனி இருபது ஆக்கிவிட வேண்டுமென்று அவர் அங்கலாய்ப்பார். பண மூட்டை களைக் காணும்போதெல்லாம் அவருக்கு நா ஊறும். பயந்தாங்கொள்ளி ஆகிவிட்டார். அரசாங்க அதிகாரிகளுக் கும் அஞ்சுவார். உங்களுக்கும் பயப்படுவார்''

''சரியாய் சொன்னீங்கள்''

முத்துவேலு ஆமோதித்தான்.

''வெளியே இருட்டிவிட்டுது. இனி நீங்க புறப்பட லாமே...முன்னிலவு மங்கலாய் இருக்கும், வாய்க்காலுக்குக் கதைத்துக்கொண்டே போவோம்.''

தியாகு நினைவூட்டினான்.

# 8

மாதவன் எழுந்து துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு விறைத்துப் போயிருந்த காலை நிலத்தில் உதைத்து இரத்த ஓட்டத்தைச் சீர் செய்தான்.

www.padippakam.com



மூவரும் வெளியே முற்றத்திற்கு வந்தனர். மெல்லிய குளிர்காற்று வீசிக்கொண்டிருந்தது. அதன் இனிய தழுவலை மாதவன் அனுபவித்தான். சிறிய சிறைக்கூடத்திலிருந்து வெளியே வந்து காற்றுவாங்கும் உணர்வு.

முத்துவேலு நடைபாதையைப் பார்க்க சென்றுவிட்டான். மூத்தவன் காந்தன் அவ்வேளை கையிலே ஒரு பையுடன் வந்தான். தியாகன் அவனை மாதவனுக்கு அறிமுகப்படுத்தினான்.

வரண்டு வாராத தலை, கரிய உருவம்.

''காலையில் உங்களைப் பார்த்தேன். நித்திரையாயிருந்தீர்கள்''

காந்தன் கதைத்தான்.

''படிப்பெல்லாம் விட்டிட்டியா?''

மாதவன் கேட்டான்.

''அது எந்தக் காலமோ, பள்ளிக்கு முழுக்குப் போட்டு''

''உடையார் கமத்திலைதான் வேலை செய்யிறியா?''

''ஓம். அங்கைகூட எங்கே ஒழுங்காய் வேலை கிடைக்குது. அதுவும் தகராறுக் காறங்கள் என்று எங்களையெல்லாம் ஒதுக்கி வைத்திருக்கிறார், ஒருவரும் கிடைக்காத ஆத்தாக் கடைசியிலைதான் சமாதானம் பேசிக்கொண்டு எங்களிடம் வருவார். என்ன செய்யிறது. நாங்களும் வேறை வழியில்லாமல் ஒட்டிக் கொள்கிறாம். ஒழுங்காயிருந்தால் அடுத்த வெட்டுக்கு காவல்வேலை தாறதென்று சொல்லியிருக்கிறார்.''

காந்தன் சொன்னான்.

''காவல் வேலையை எடுத்துப்போடு. எங்களுக்கு மிகவும் நல்லது''

www.padippakam.com



மாதவன் சொன்னான். அவ்வேளை முத்துவேலு வந்து சொன்னான்:

''நடமாட்டம் குறைஞ்சிட்டுது, வாய்க்காலுக்குப் போவோம்''

மூவரும் மங்கிய நிலவொளியில் நடைபாதை வழியே சென்று வயல் வரப்பில் ஏறினர்.

''காந்தன் நல்லாய் வளர்ந்திருக்கிறான். நான் சின்னப் பெடியனாய் இருப்பானென்று நினைச்சன்''

மாதவன் சொன்னான்.

''வளர்ந்தென்ன, முரடன்''

''அப்பிடிச் சொல்ல வேண்டாம். படிச்சவங்கள்தான் மாற்றத்தையே விரும்பாமல் பழைய முரட்டுக் கொள்கைகளையெல்லாம் விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டு பணத்தைக் கும்பிட்டுக் கொண்டு திரியிறாங்கள். படிக்காதவர்களே உண்மையை விரைவில் உணர்ந்து கொள்கிறார்கள். சரியான சிந்தனை பிடிபட்டதும் செயலாற்றத் துணிந்து விடுகிறார்கள்.''

மாதவன் சொன்னான்.

தியாகன் பேச்சை மாற்றி சுற்றிவர இருந்த கிராமத்துப் பகுதிகளைக் காட்டினான். வறிய, நிலமற்ற விவசாயிகள் வாழும் குடிசைப் பகுதிகள், வயல்வெளி, சிறு காட்டுப் பக்கம், கோயில், பள்ளிக்கூடம் இருக்கும் திசைகள், அயல் கிராமங்களின் பெயர்கள் யாவையும் கையால் சுட்டிக்காட்டிச் சொன்னான்.

ஆறாம் பிறைச்சந்திரன் காட்டு மரங்களிடையே இடையிடை தலைகாட்டிக் கொண்டிருந்தான்.

மாதவனும் தியாகனின் பேச்சில் ஆர்வம் காட்டி கிராமத்தின் அமைப்பு, மறைவிடங்கள், வயற்பரப்பின் பிரிவு

படிப்பகம்

www.padippakam.com



கள் பற்றியெல்லாம் இடையிடை கேட்டுத் தெரிந்து கொண்டான்.

மாதவன் காலைக்கடன்களை வயற்பரப்பின் ஒதுக்குப் புறமாகச் சென்று முடித்து வந்தான். மாலையில் பவளம் கொடுத்த கரிக்கட்டியைக் கடித்து சுட்டுவிரலால் பற்களைத் தீட்டினான். வாய்க்கால் வழியே ஓடிக் கொண்டிருந்த நீரிலேயே வாய் முகத்தைக் கழுவினான். பின்னர் தியாகன் வழிகாட்ட குளிர்ந்த வாய்க்கால் நீரில் இறங்கி நீராடினான்

நீர் குளிராகவே இருந்தது. பகலெல்லாம் அடைந்து புழுங்கியிருந்த உடலுக்கு அந்நீர் இதமாக இருந்தது.

நீரின் ஆழம் இடுப்பிற்குக் கீழாகவேயிருந்தது. மாதவன் நீரில் கால்களை மடக்கி கழுத்தளவிற்கு நீர் தடவிச் செல்லத்தக்கதாக முடங்கிக் கொண்டான். நீரை விட்டு வெளியேறவே மனம் வரவில்லை, பரண்ட தலைமயிரையும் வியர்வை படிந்த உடலையும் கைகளால் உராய்ந்தான்.

''புதிய இடம். தண்ணீர் குளிராக இருக்கு. சளி பிடிச்சாலும் பிடிச்சிடும்.''

முத்துவேலு எச்சரித்து விரைவில் வெளியேறும்படி வேண்டினான். தியாகன் விரைவாகவே எழுந்து ஈரம் துடைத்துவிட்டு கைகளை தோள்மேல் போட்டுக்கொண்டே மாதவனைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

மாதவன் அரை மனதோடு எழுந்து ஈரத்தை உலர்த்தினான்.

வேட்டியைக் கட்டிக்கொண்டே தலை ஈரத்தை துண்டினால் உலர்த்தியபடி மாதவன் அவர்கள் பின்னே நடந்தான்.

படிப்பகம்

# 9

குடிசையை அடைந்தபோது அங்கே அவர்களுக்காக இருவர் காத்திருந்தனர். தான் செய்தி அனுப்பி வந்ததாக அவர்களை முத்துவேலு அறிமுகப்படுத்தினான்.

''சுந்தரமூர்த்தி, துரைரத்தினம்''

''சாப்பாடு முடிந்ததும் ஓய்வாகப் பேசலாம்''

முத்துவேலு அவர்களிடம் தெரிவித்தான்.

''பேசுவதற்கென்று ஒரு நேரமா? எந்த வேளையும் பேசலாம்''

மாதவன் கூறிக்கொண்டே அவர்களது தொழில், வாழ்க்கைநிலை பற்றியெல்லாம் விசாரித்தான்.

குடிசைக்குள் யாவருக்கும் இலை போடப்பட்டது. மாதவனின் அருகே முத்துவேலுவின் இரண்டாவது மகன் குமரன் இருந்தான். தியாகன் மாதவனிடம் அறிமுகப்படுத்தினான்.

''குமரன், நல்லபெயர். உன்னிடம் வேலிருக்கா?''

மாதவன் வேடிக்கையாக அவனுடன் உரையாடினான்.

மரக்கறி உணவு. மாதவனுக்கு நல்ல பசி. அதனால் யாவும் சுவையாகவே யிருந்தது.

முற்றத்துப் பாயில் வந்திருந்தபோது மாதவன் முத்துவேலுவைப் பார்த்துச் சொன்னான்:

''அரிசி நல்லாயிருக்கு. இது என்ன அரிசி? இங்கே விளையிறதுதானே?''

www.padippakam.com



''இது ஒருவகை கோரா சம்பா. எங்க அப்பாவிடம் கொஞ்ச நிலமிருந்தது. அதில் இந்த நெல்லுத்தான் சாப் பாட்டுக்காக அப்பா போடுவார். இப்ப அந்த நிலமெல்லாம் போட்டுது. உங்களுக்காக இன்றைக்கு விலைக்கு வாங்கி னோம். இந்த அரிசி சாப்பிட எங்களுக்கெல்லாம் கட் டாது''

''எனக்காக விசேட அரிசி வாங்கிச் சமைப்பதெல்லாம் எனக்குப் பிடிக்காதே. சில விஷயத்தில் நான் மிகவும் கண்டிப்பாயிருப்பேன். அந்த நிலமெல்லாம் உடையாருக்குத் தானே உங்கப்பா வித்தார்''

''விக்கிறதென்ன! ஈடுவைச்சார். பிறகு மீளமுடியாமல் அவனுக்கே அறுதியாகப் போய்விட்டது''

''அப்படியானவர்களுக்குத்தானே அவனும் ஈட்டுக்குப் பணம் கொடுப்பான்''

மாதவன் சொல்லிவிட்டுச் சிரித்தான். யாவரும் அவனது கேலிப்பேச்சில் ஈடுபட்டனர்.

''நாங்கள் உங்களுக்கு எந்த விதமான உதவியை உடனடியாகச் செய்யலாம்''.

வந்திருந்த இருவரில் ஒருவனான மூர்த்தி மாதவனிடம் கேட்டான்.

மூர்த்தி நெட்டையான உரமான இளைஞன். அழுக்கான வேட்டியும் சேட்டும்.

''உங்களுடைய நம்பிக்கை, நாணயம் அறிந்துதான் முத்துவேலு அழைத்திருப்பார். முதலில் தேவையானது பாதுகாப்பு. பழங்குடியிருப்பு கேஸில் என் பெயரும் மாட்டுப் பட்டிருப்பதை அறிந்திருப்பீர்கள். பொலீசார் அரெஸ்ட் வாரண்டோடு தேடித் திரிகிறார்கள்''

''முத்தண்ணை எல்லாம் சொன்னார். உங்களுக்கு கொஞ்சம் வசதியாகத் தங்கவும் பாதுகாப்பாக இருக்கவும்

www.padippakam.com



ஒரு வாத்தியார் விடு இருக்கு. அங்கே அழைத்துச் செல்ல விடுவீங்களா அண்ணை''

துரை ரத்தினம் முத்துவேலுவைப் பார்த்துச் சொன்னான். கட்டையான கரிய உருவம், பரந்த மார்பு, அரையிலே மடித்துக் கட்டிய சாரம், தோளிலே ஒரு துண்டு.

''நான் ஒரு விஷயத்தில் மிகவும் கண்டிப்பாயிருப்பேன். நான் எங்கே தங்குவதாயினும் ஏழை, நிலமற்ற விவசாயிகளுடன்தான் தங்குவேன். இந்த நாட்டில் நான் முதலில் நம்பிக்கை வைப்பதும் அவர்கள்மேல்தான். கடைசியாக நம்புவதானாலும் அவர்களைத்தான்''

மாதவனின் கண்டிப்பான வார்த்தை துரை ரத்தினத்திற்கு எடுத்தவுடன் சிறிது தயக்கமாகவே இருந்தது. ஆயினும் உடனே சமாளித்துக்கொண்டே பதில் கூறினான்:

''இந்த நாட்டில் மட்டுமென்ன, இந்தக் கிராமத்திலேயே அவர்கள்தானே தொண்ணூற்றைந்து வீதமும். நாளுக்கொரு வீடாகத் தங்கலாமே''

''அதுதான் என் விருப்பமும். எனக்குப் பாதுகாப்புத் தர விரும்பும் ஏழைகள் வீடுகளிலெல்லாம் தங்கப்போகிறேன். இந்த வீட்டில்கூட இரண்டு நாட்களுக்கு மேல் தங்கப் போவதில்லை''

மாதவன் விசுவாசமாகச் சொன்னான். முத்துவேலுவுக்கும் குடும்பத்தவர்களுக்குமே அது ஆச்சரியமாயிருந்தது.

''நாங்களே நிலமில்லாத கூலி விவசாயிகள்தான். எங்க வீட்டிலேயும் வந்து தங்க வேண்டும்''

மூர்த்தி சொன்னான்.

''எனக்குப் பாதுகாப்புத் தருவதிலுள்ள ஆபத்தையும் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும். என்மேல் சாட்டப்பட்டிருக்கும் குற்றங்கள் என்னவென்று தெரியுமா?''

படிப்பகம்

www.padippakam.com



மாதவன் கேட்டான்.

''நானும் அப்போது கேட்க இருந்தேன், மறந்து விட்டேன்''

தியாகனும் மாதவனைப் பார்த்துச் சொன்னான்.

''சதி, கொலை, கொள்ளை, கற்பழிப்பு நாலும் மிகவும் பயங்கர குற்றங்கள். அப்படியான பயங்கர மனிதனுக்குப் பாதுகாப்புத்தரப் பார்க்கிறீர்கள். இதற்கு மேலால் வேறோர் குற்றமும் இருக்கிறது. அதைப் பின்னர் தெரிவிக்கிறேன்''

''இதெல்லாம் எதற்காகக் கொண்டு வரப்படுகின்றன என எங்களுக்குத் தெரியாமலில்லை. பொலிஸ், சட்டம், நீதிமன்றமெல்லாம் அவங்கடை கையில்தானே''

மூர்த்தி சொன்னான்.

''உஷ் உஷ்...'' மெதுவாகப் பேசு. அப்படி உரத்துப் பேசினாலே ஆபத்து''

துரைரத்தினம் கேலிபோல முணுமுணுத்தான்.

''இந்த நாட்டில் வாய் திறந்து எதையும் பேச ஜன நாயகமேயில்லையா?''

மூர்த்தி உணர்ச்சியோடு கேட்டான்.

''பூஷ்வா ஜனநாயகமாவது இருந்தால் எங்கள் போராட்ட வழியே வேறாகியிருக்கும்''

மௌனமாக யாவையும் கூர்மையாகக் கேட்டுக் கொண்டிருந்த தியாகன் பதில் கூறினான்.

நாய் குரைக்கும் சத்தம் கேட்டது. தியாகனும், முத்து வேலுவும் எழுந்து நடைபாதைவரை சென்றனர்.

பவளம் தன் தம்பி செல்லத்தம்பியுடன் ஒற்றையடிப் பாதை வழியே வந்துகொண்டிருந்தாள். செல்லத்தம்பியின்

ம—3

www.padippakam.com



கையிலே சிறிய 'ரோச்லையிட்' ஒன்று இருந்தது. ஆட்களை இனங்கண்டதும் தியாகன் முற்றத்திற்குத் திரும்பிவிட்டான்.

''எங்கே இன்னும் காணவில்லை என்று பார்த்துக் கொண்டிருந்தோம்''

முத்துவேலு வரவேற்றான்.

''இப்பதான் பெடியன் தூங்கினான். நித்திரை வந்தால் அவன் பக்கத்தில் ஆரேன் இருக்கவேணும். அல்லது கத்திக் கொண்டேயிருப்பான்''

பவளம் பதில் சொன்னாள்.

பவளமும் செல்லத்தம்பியும் முற்றத்திற்கு வந்ததும் இருவரையும் முத்துவேலு மாதவனுக்கு அறிமுகப்படுத்தினான்.

''இந்த அம்மாவைத்தானே பகலிலேயே பார்த்துப் பயந்தேனே''

மாதவன் பகிடியாகச் சிரித்தபடி சொன்னான். பகலில் நடந்தவையும் பவளத்தைப்பற்றி மற்றவர் பின்னர் சொன்னவையும் அவன் நினைவில் வந்தன.

''நான் குழந்தையின் நினைவில் அவசரப்பட்டுக் கொண்டிருந்தேன். வேறை பயப்படும்படியாய் என்னிலை என்ன கண்டீங்களோ தெரியேல்லை''

பவளம் சொன்னாள். குடிசையின் பத்திப்பக்கமாக இருந்த குந்தில் சென்று உட்கார்ந்தாள்.

''என்னையும் ஒரு குழந்தையாக்கி உறுக்கினீங்களே. நினைவிருக்கா?''

''பின்னையென்ன, எங்கடை விருந்தாளியாக வந்திருக்கிறீங்கள். வேண்டியதைக் கேட்டுப் பெறுவதுதானே. அதை விட்டு நன்றி சொல்லுவதும் தேவையானதைக் கேட்கத்

www.padippakam.com



தயங்குவதும் எங்களுக்குப் பிடிக்குமா? முத்தண்ணை ஏன் பேசாமல் இருக்கியள்: நீங்க சொல்லுங்கோவன்.''

''நீ சொல்வது சரி''

முத்துவேலு மொழிந்தான்.

## 10

மாதவன் ஒவ்வொருவரிடமும் அக்கிராமத்தைப்பற்றிய பல்வேறு விபரங்களையும் கேட்டறிய முயன்றான். பெருநிலவுடைமைக்காரர், அவர்களிடமுள்ள நிலங்களின் பரப்பு, தண்ணீர் வசதிகள், விளைச்சல். விவசாய உபகரணங்கள் பற்றியெல்லாம் நுணுக்க விபரமாகக் கேட்டறிந்தான். அடுத்து மத்தியதர, கீழ் மத்தியதர விவசாயிகள் பற்றியும் அவர்களது பலத்தையும் பற்றிக் கேட்டான்.

மாதவன் பிரித்துக் காட்டும் வர்க்கப் பிரிவுகள் பற்றி யாவரும் வினா எழுப்பி தமது சந்தேகங்களைத் தீர்த்துக் கொண்டே பதில் கூறினர். இறுதியில்பாட்டாளி வர்க்கத்தில் விவசாயிகளைப் பிரிக்க முனைந்தபோது கேள்விக் கணைகள் யாவரிடமிருந்தும் பாய்ந்தன.

''நீங்கள் பிரித்துக் காட்டுவதில் அரைப் பாட்டாளி வர்க்கம். பாட்டாளி வர்க்கம் என்ற பிரிவுகளில் எத்தகைய விவசாயிகள் இடம் பெறுவர்?''

மூர்த்தி கேட்டான்.

''அரைப் பாட்டாளி வர்க்கத்தில் அரை உடைமை விவசாயிகளையும், வறிய விவசாயிகளையும் எடுத்துக்

www.padippakam.com



கொள்ளலாம். அரை உடைமை விவசாயிகள் என்னும்போது பிறரிடமிருந்து குத்தகைக்குப் பெற்ற நிலத்தில் அரை வாசியும் தமது நிலத்தில் அரைவாசியுமாக உழைக்கும் ஏழைமைக்குள்ளாக்கப்பட்ட விவசாயிகளையே கருது கிறேன். வறிய விவசாயிகளுக்கு நிலமிருக்காது; வருடம் முழு வதும் பாடுபடுவதற்கு அறுவடையில் ஒரு பங்கு கிடைக்கும். இத்தகையோர் இங்கு குறைவுபோல் தெரிகிறது. அடுத்தது கூலி விவசாயிகள். நிலமோ, கருவியோ, சிறிய தொகை பணமோ தானும் இல்லாதவர்கள். வேலை கிடைக்கும் வேளை உழைப்புச் சக்தியை மட்டும் விற்று உயிர் வாழ்ப வர்கள். உங்களில் பெரும்பாலோர் இத்தகையவர் எனவே தெரிகிறது. புள்ளி விபரமாக இவற்றை நான் சேகரிக்க விரும்புகிறேன். தியாகு இதற்கு எனக்கு உதவ வேண்டும். இது எமது முதல் வேலையாக இருக்கும்.''

''நான் எதற்கும் தயாராக உள்ளேன். இந்த மூன்று பிரிவினரிலும் போராட்டத்திற்கு முன்னிற்கக் கூடியவர்கள். நீங்கள் அதிகம் நம்பிக்கை வைத்திருப்பவர்கள் யார் என்ற உங்கள் கருத்தையும் ஆரம்பத்திலேயே அறிய விரும்பு கிறோம்''

தியாகன் மாதவனிடம் கேட்டான்.

'இதிலென்ன சந்தேகம். கூலி விவசாயிகள், வறிய விவசாயிகள் முதல் தரமான போராட்டக்காரர் என்பது அனுபவ உண்மைதானே. அடுத்ததாக அரை உடைமை விவசாயிகள். இவற்றைவிட நிலமிழந்த விவசாயிகள். வேறு வேலை எதுவுமே பெற முடியாத — எல்லோரையும்விட மிக நிலையற்ற வாழ்க்கையுடையவர்களும் இருக்கிறார்கள். இவர்களெல்லோரும் துன்பத்தில் உழல்பவர்கள். உண் மையை உணர்ந்து யாவரும் ஒன்றுபட்டால் மிகப் பெரிய சக்தியாகி விடுவார்கள்''

''பின்னர் உடையார் தூங்கவும் மாட்டார்.''

www.padippakam.com



மாதவனின் சிந்தனை பூர்வமான விளக்கத்தை இடை மறித்து தியாகன் சொன்னான்.

''இப்பொழுதே அவருக்கு அரைத் தூக்கந்தானாம்.''

மூர்த்தி சொன்னான்.

''அவன் செய்த கொடுமைகளெல்லாம் இரவில் நினைவில் வந்து பயப்படுத்துகிறதாயு மிருக்கலாம்.''

துரை ரத்தினம் கூறினான்.

''நமசிவாயம் பேயாக உலாவித் திரிகிறான் என்றும் அவருக்குப் பயமாம்''.

மூர்த்தி சொன்னான்.

நமசிவாயத்தின் பெயரை எடுத்தாலும் பவளத்தின் முகம் ஒரு கணம் கருகியது. பின்னர் கண்களிலே தீயே வீசியது. இருளைப் பார்த்தபடி சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள்.

''நமசிவாயத்தின் கொலை பற்றி முத்துவேலு வழியிலே சொல்லிக் கொண்டு வந்தார். என்னால் முழுசாக கிரகிக்க முடியவில்லை''

''அக்காவையே கேட்டால் எல்லாம் சொல்லுவா''

நீண்ட நேரம் மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்த செல்லத்தம்பி சொன்னான்.

''நானே ஓய்வாகக் கேட்டு அறிய வேண்டும் எனவே நினைத்துக்கொண்டிருந்தேன். இதுமட்டுமல்ல, உடையான் சும்மா இருந்து இந்த நிலைக்கு உயர்ந்திருக்க மாட்டான். அவன் செய்த கொலைகள், கொள்ளைகள், சதிகள், கற்பழிப்புகள் பற்றியெல்லாம் விபரமாக அறிய விரும்புகிறேன். அவற்றை யெல்லாம் எம்மவர்கள் மறந்துவிடப் பாடது. அடிக்கடி நினைவூட்டி அவன் கருதிக்கொண்டிருக்கும் இவ்வீரச் செயல்களை அவனுக்கு எதிரான ஆயுதம்

www.padippakam.com



களாக நாம் பயன்படுத்த வேண்டும். உடையான் மட்டுமல்ல அவனுக்கு அடுத்தபடியிலுள்ளவர்களையும் பற்றி நாம் நன்கு தெரிந்திருக்கவேண்டும்''

''இப்ப பார்த்தால் அவனுக்கும் உங்களுக்குமே வித்தியாசமில்லையே. உங்கள் மேலும் கொலை, கொள்ளை, சதி கற்பழிப்பு குற்றமெல்லாம் இருக்கு. நீங்கள் ஒளித்துத்திரிகிறீர்கள், அவன் இவற்றையெல்லாம் தொழிலாகவே செய்து கொண்டு பெரிய மனிதனாக காரிலேயே உலாவித் திரிகிறான். பொலிஸ் சுப்பிரின்டன் வீட்டுக்கும் நீதவான் வீட்டுக்கும் விருந்துக்குப் போகிறான்''

மூர்த்தி இடைமறித்துச் சொன்னதும் யாவரும் சிரித்தனர்.

''இந்த இரு முரண்பாடுகளும் கண்முன்னே எப்படி நிலவுகின்றன? இந்த உண்மையை உணர்ந்து கொள்வதில் தான் எமது போராட்ட சித்தாந்தமே அடங்கி யிருக்கிறது''

''அவன் கையில் அரசியல் அதிகாரம் இருக்கிறது. எம் கையில் இல்லை''

துரைரத்தினம் மாதவனின் வார்த்தைகளைத் தொடர்ந்து சொன்னான்.

''உடையானைக் காக்கும் நண்பர்களிடம் துப்பாக்கி இருக்கிறது. எங்களிடம் தற்பாதுகாப்பிற்கும் இல்லையே''

மூர்த்தி மேலும் தொடர்ந்து கூறினான்.

யாவரும் உண்மையை உணர்ந்தவர்போல சிரித்தனர். அதன் பின்னர் சிறிது நேரம் மௌனம் நிலவியது.

படிப்பகம்

www.padippakam.com

# 11

மௌனத்தை மாதவன் கலைத்தான்.

''நான் சாப்பிட்டுவிட்டு தூங்கி அரட்டை அடிப்பதற்காக வரவில்லை. என்னால் அப்படி வாழவும் முடியாது. இங்குள்ளவர்களுக்கெல்லாம் நான் எப்படியெப்படி உதவ முடியுமோ அவ்வாறு உதவி செய்ய விரும்புகிறேன். வயல் வேலையாயின் சில காலத்திற்கு இரவிலேயே உதவமுடியும். வேறு என்னென்ன வழிகளில் உதவி புரிந்து மக்களின் நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் பெறமுடியும் என்பதை நீங்களே யோசித்துச் சொல்லித் தரவேண்டும்''

''தாராளமாக உதவலாம். இங்கே ஏழைகளுக்கு ஒரு கடிதம் எழுவதென்றாலும் எவராவது பட்டணத்திலுள்ளவன் ஏமாற்றிப் பணம் பறித்து விடுகிறான்''

மூர்த்தி சொன்னான்.

''என் கையெழுத்தில் இருப்பது நல்லதல்ல. தியாகு அல்லது வேறு எவரைக்கொண்டாவது நான் சொல்லி எழுதச் செய்து விடுகிறேனே''

''வெள்ளைக்காரன் போனாலும் இன்னும் இங்கிலீசில் தான் பதில் அனுப்ப வேண்டும் என்று கிராமத்து விவசாயிகளே விரும்புவதுதான் விசித்திரமாயிருக்கு''

செல்லத்தம்பி கூறினான்.

''ஏழைகள் நினைப்பதுதான் சரி. வெள்ளைக்காரன் போனாலும் அவனது தரகர்களே இன்னும் அரசாங்க அதிகாரத்தில் இருக்கிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். தமிழிலே எழுதினால் அவர்கள் இங்கிலீசில் அல்லது சிங்களத்

www.padippakam.com



தில் அதை மொழி பெயர்த்தே படித்து பதில் அனுப்புவார்கள். தமிழைப் படித்துப் புரியாது கிழித்து எறிந்து விட்டாலும் என்று விவசாயிகள் சந்தேகப்படுவதும் நியாயந்தானே''

மாதவன் கூறிய பதிலையும் விளக்கத்தையும் மற்றவர் புரிந்து நயந்தனர். அவனது பேச்சிலும் கருத்திலும் இருந்த தெளிவு அவர்களுக்கும் தன்னம்பிக்கை யூட்டியது. அவன் மேலிருந்த மதிப்பும் உயர்ந்தது.

இரவு கழிந்து கொண்டிருந்தது. அரசங்குடிக் கிராமமே இருளில் மூழ்கியிருந்தது. குப்பி விளக்குகள் குடிசைகளில் அணைந்துவிட்டன. ஆங்காங்கே தூரத்தில் இடையிடை நாய்களின் ஊளையிடும் ஓசை தவிர வேறு ஒலி எதுவும் இல்லை. காந்தன். குமரன், சுந்தரி யாவரும் ஆங்காங்கே தூங்கி விழுந்துவிட்டனர். மறுநாள் வயலில் வேலை இருப்பது பற்றி முத்துவேலு யாவருக்கும் நினைவூட்டினான்.

மாதவனை விட்டுச்செல்ல அவர்கள் எவருமே விரும்பவில்லை.

பழங்குடியிருப்புக் கொலை பற்றி பத்திரிகையில் படித்தது தவிர வேறு சில செய்திகள்தான் முத்தண்ணை மூலமும் மற்றவர் மூலமும் தெரியவந்தது. எல்லாம் கயிறு திரித்த செய்திகள் என்பதும் தெரிந்தது. அதன் உண்மை விபரங்களை நாங்களும் அறியவேணும்''

மூர்த்தி மாதவனைப் பார்த்துச் சொன்னான்.

''அது பற்றி பல சந்தேகங்களும் இருக்கின்றன. அது ஆறுதலாக விவாதிக்க வேண்டிய விஷயம் கூட''

துரைரத்தினம் தொடர்ந்தான்.

''அது உண்மைதான். ஓய்வாக ஒரு நாளைக்கு நான் நடந்தவற்றைச் சொல்லுகிறேன். அதிலிருந்து கற்க வேண்டியவை பல உள்ளன. அதை இப்போது தொட்டால் நாளைக்கு வேலை செய்யவும் முடியாது போய்விடும் ஆகவே

www.padippakam.com



மற்றொரு நாளைக்கு தனிய அந்தக் கொலை பற்றி ஆராய்ந்து பார்ப்போம்''

மாதவன் சாவதானமாகச் சொன்னான்.

யாவரும் கலைந்துபோக எழுந்தனர்.

''நாளைக்கு எங்கே சந்திப்பது? தங்கல் எங்கே?''

மூர்த்தி கேட்டான்.

''முத்தண்ணையைக் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கோ. உங்களில் ஒருத்தர் வீட்டிற்கு வந்துவிடுகிறேனே.''

''வீடா, எங்கள் குடிலுக்கு வரலாம்''

''எங்க வீட்டுக்கு வரலாம்.''

துரைரத்தினம் கேட்டதும் செல்லத்தம்பியும் கேட்டான்.

''நாளைப் பிரச்சனையை நாளைக்குப் பார்ப்போம். உங்க பக்க நிலவரங்களை அறியவேணும். ஒரு அசுமாத்தமுமில்லாமல் இருக்க வேண்டும்.''

முத்துவேலு யாவரையும் எச்சரித்தான்.

தியாகன் தவிர மற்ற நால்வரும் விடைபெற்றுப் பிரிந்தனர்.

முத்துவேலுவைத் தூங்கும்படி மாதவன் வேண்டினான். வள்ளிப்பிள்ளையும் தாயாரும் ஏற்கெனவே குசினிக் கொட்டிலில் படுத்துவிட்டனர்.

குடிசைக்குள் நுழைந்த தியாகன் தொங்கிக்கொண்டிருந்த லாந்தரை எடுத்து பாயின் அருகே வைத்தான். முத்துவேலுவிடம் பெற்று வைத்திருந்த அப்பியாசக் கொப்பியை மாதவன் தியாகனிடம் கொடுத்தான்.

மாதவன் சுவரோடு சாய்ந்தபடி பாயில் உட்கார்ந்தான். அவன் சொன்னவற்றை தியாகன் அவ்வப்போது கொப்பியில் குறித்துக் கொண்டான்.

www.padippakam.com



இரவு நீண்ட நேரம் இருவரும் விழித்திருந்தனர். விளக்கில் எண்ணெய் தீர்ந்து, திரி எரிந்து, ஒளி மங்கிக் கொண்டு வந்தது. சிமிளியில் புகையும் படிந்துவிட்டது. விளக்கை அணைத்துவிட்டு இருவரும் படுத்துக்கொண்டனர்.

## 12

குழந்தையின் வீரிட்ட அழுகைச் சத்தமே மாதவனை விழிக்கச் செய்தது. காலைச் சூரியனின் கதிர்கள் தலைவாசலின் முன்புறத்தைச் சூடாக்கிக் கொண்டிருந்தன. எழுந்து சுற்றுமுற்றும் பார்த்தான். வீட்டில் எவருமில்லை.

பவளத்தின் மகனையும் காணவில்லையே, எங்கே சென்றிருப்பான் என்ற நினைவோடு குழந்தையருகே சென்றான். தலைவாசல் மூலையில் அழுக்குத் துணிமேல் மலமும் சலமும் கழித்துவிட்டு தவழ்ந்தபடி குழந்தை அழுதுகொண்டிருந்தது. முதல் நாள் படித்த பத்திரிகையில் ஒரு பகுதியைக் கிழித்து, குழந்தையை இடது கை பலத்துடன் நிற்கச் செய்து, ஓரளவு சுத்தம் செய்தான். பின்னர் தூக்கி தலைவாசல் குந்துவரை வந்து குழந்தையை பிட்டியில் பிடித்து நிற்கச் செய்துவிட்டு தண்ணீர் தேடினான். குழந்தை மாதவனைப் பார்த்து மேலும் மேலும் வீரிட்டழுதது.

அவ்வேளை கையில் ஒரு சிறு குவளையில் பாலுடன் சந்திரன் வந்தான். மாதவன் இரவில் மங்கிய ஒளியில் அவனைத் தூக்கத்திலேயே பார்த்திருந்தான்.

''நீ சந்திரன்தானே''

''ஓம்''

www.padippakam.com



அவனும் மாதவனை ஏறிட்டுப் பார்த்தான். அரையிலே அழுக்கடைந்த சாரம். எண்ணெய் காணாத் தலை. வெய்யிலில் காய்ந்து வளர்த்த கரிய தோல்.

''எங்கே பால் வாங்கி வாறாய்?''

''அங்கே மருதடியிலை முத்தம்மாக் கிழவியிட்டை.''

''குழந்தையைத் தனிய விட்டிட்டுப் போனியா?''

மாதவன் சிறிது உரமாகச் சொன்னான்.

''அவன் தனியவே இருப்பான். இண்டைக்கு நீங்களும் இருந்தீங்கதானே.''

''காலையிலை என்னைப் பார்த்தியா?''

''அம்மா வயலுக்குப் போகமுந்தி உங்களைக் காட்டினா''

''வேறை என்ன சொன்னா?''

''நீங்க இருக்கிறதெண்டு ஒருத்தருக்கும் சொல்ல வேண்டாமென்றா''

''சரி, தண்ணி கொண்டுவா. குழந்தையைக் கழுவுவம்''

பாலை மூலையில் வைத்துவிட்டு சிறு வாளியில் தண்ணீர் கொண்டு வந்தான். மாதவன் குழந்தையைத் தூக்கிப் பிடிக்க சந்திரன் கழுவினான். ஒரு அழுக்குத் துணியைக் கொண்டு வந்து குழந்தையைத் துடைத்தான். பின்னர் தேங்காய் முடித் தும்பு கொண்டுவந்து நிலத்திலிருந்த மலத்தைத் துடைத்து எடுத்துச்சென்று குப்பையில் வீசினான்.

மாதவன் குழந்தையைத் தோளில் போட்டு முதுகில் தடவிக்கொடுத்து ஆராட்டினான். அப்போதும் குழந்தை அவன் முகத்தை இடையிடை பார்த்து 'அம்மா—அம்மா' என்று சத்தமிட்டு விசித்து விசித்து அழுதது.

சந்திரன் உள்ளே சென்று ஒரு தகரப் பேணியை எடுத்துக்கொண்டு வந்து திறந்தான். சிறு அளவு சீனியை எடுத்து பாலில் போட்டுக் கலக்கினான்.

படிப்பகம்

www.padippakam.com



''காய்ச்சின பாலா தந்தாங்கள்''

''ஓம். அவங்கடை வீட்டிலையும் குழந்தையொன்றிருக்கு''

சந்திரன் குழந்தையை மாதவனிடமிருந்து வாங்கி தன் தோளில் போட்டு ''வாடா குஞ்சு, பசிச்சுதாடா, அழாதை, இந்தாடா பால் கொண்டந்திருக்கிறன்'' என்று வாஞ்சையோடு கன்னத்தில் முத்தமிட்டு கண்ணீரைத் துடைத்தான். தலைவாசல் குந்தோடு சாய்ந்து இருந்தபடி குழந்தையை மடியில் வைத்துக்கொண்டு பால் குவளையை அவன் வாயில் திணித்தான். குழந்தையின் அழுகை ஓய்ந்து பாலைக் குடிக்கத் தொடங்கியது. ஆயினும் இடையிடை விட்டுவிட்டு விம்மியது

''போத்திலிலை விட்டுக் கொடுக்கிறேல்லையா?''

''எத்தினை போத்தில் உடைச்சான். இப்போ போத்தில் விட்டாச்சு. வயிறு பசிச்சால் எப்பிடிக் கொடுத்தாலும் குடிக்காமலா விடப்போறான்''

''உனக்கு என்ன வயசு?''

''பத்து''

''என்ன வகுப்புப் படிக்கிறாய்?''

''நாலாம் வகுப்பு.''

''இண்டைக்குப் பள்ளிக்குப் போகேல்லையா?''

''இப்ப ஒரு கிழமையாய் போகேல்லை''

''ஏன்?''

''அம்மா, மாமா எல்லாருக்கும் இப்ப வேலை. இவனைப் பார்க்கிறதுக்காக நான் நிக்கவேண்டியிருக்கு.''

''உனக்கும் கள்ளம்படுத்த விருப்பந்தானே...''

''இல்லை, எனக்குப் பள்ளிக்குப் போகத்தான்விருப்பம். அம்மா ஒழுங்காய் போகவிட்டாத்தானே. இனி அடுத்த கிழமைபோய் வாத்தியாரிட்டை அடி வாங்கவேணும்''

www.padippakam.com



சந்திரனின் முகத்தில் கவலை குடிகொண்டிருந்தது. எண்ணெயும் சீப்பும் படாது குழம்பிய மயிரிடை நகத்தால் அடிக்கடி விறாண்டிக்கொண்டிருந்தான்.

''குழந்தையை நான் பார்த்துக் கொள்ளுகிறேனே, நீ பாடசாலைக்குப் போவன்''

''அதெப்படி போறது. அம்மா உங்களையும் பார்த்துக் கொள்ளச் சொல்லிப்போட்டு போனா''

''நான் என்ன உன் தம்பிபோலை குழந்தையா?''

மாதவன் கேட்டான். பவளம் செய்த ஏற்பாட்டை நினைத்தபோது அவனுக்கும் சிரிப்பே வந்தது. சந்திரனும் சிரித்துவிட்டு பதில் சொன்னான்.

''என்னவோ அம்மா அப்படித்தான் சொன்னா? அவ சொன்னபடி கேட்காட்டால் எனக்கெல்லோ ஏச்சும் அடியும் விழும்''

குழந்தை பால் குடித்து ஆறியது. மிகுதிப் பாலை உள்ளே ஒரு மூலையில் மூடிவைத்துவிட்டு சந்திரன் வந்தான். குழந்தை நிலத்திலிருந்து தவழ்ந்து சிரித்து விளையாடியது.

''நீ சாப்பிடேல்லையா?''

மாதவன் கேட்டான்.

''எனக்குப் பழஞ்சோறு இருக்கு; நீங்கள் என்ன சாப்பிடுவியள்? புட்டா, இடியப்பமா?''

''நீயே சமைப்பாய் போலிருக்கு''

''இல்லை. முத்தம்மா கிழவியிட்டை வாங்கிவந்து உங்களுக்குக் கொடுக்கச் சொல்லி அம்மா சொன்னா''

சந்திரன் ஒரு கூட்டுமாறை எடுத்து தலைவாசலைக் கூட்டத் தொடங்கினான்.

''நானும் பழஞ்சோறே சாப்பிடுவனே. அதுதான் எனக்கு நல்லாய் பிடிக்கும்''

படிப்பகம்

www.padippakam.com



''இருக்கிறது போதுமோ தெரியேல்லை. உங்களுக்குப் பழஞ்சோறு பிடிக்குமெண்டால் எனக்கென்ன, சாப்பி டுங்கோ. பிறகு அம்மாவிட்டை நான் ஏச்சுக் கேட்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்''

''அது நான் பார்ப்பன். நீ சோத்தைச் சாப்பிடன். நான் தண்ணீரையே குடிப்பனே''

''ஐயோ அப்பிடி வேண்டாம். பிறகு பார்த்துப் பயிர்ந்து சாப்பிடுவமே. இப்ப உங்களுக்குப் பசிக்குதா''

மாதவன் சிரித்துக் கொண்டான்.

''பிறகு சாப்பிடுவம், இப்ப பல்லுத் தீட்ட குச்சி முறிச்சுக் கொண்டா''

''அம்மாவே முறிச்சு வைச்சிட்டே போனா. அந்தா குந்து மூலையிலேயே குச்சியும் கரிக்கட்டியும் இருக்கே''

மாதவனின் நெஞ்சம் ஒரு தடவை அழுந்தியது. முதல் தடவை அவளைச் சந்தித்த காட்சிகள் நினைவில் வந்தன.

மாதவன் எழுந்து சென்று வேப்பங்குச்சியை எடுத்துப் பல்லைத் தீட்டினான்.

# 13

பவளத்தின் சிறு வீடு முத்துவேலுவின் குடிலிலும் பார்க்க சிறிது விரிவாக இருந்தது. வீட்டு உடைமைகள் யாவும் கொண்ட மண்சுவர் எழுப்பப்பட்ட ஒரு அறை. அதற்கு ஒரு சிறு யன்னல், ஒரு கதவு. அதன் முன்புறமாக சிறிது நீளமான தலைவாசல். பவளத்தின் கணவன் நமசிவாயத்திற்கு சொந்த நிலம் இரண்டு ஏக்கர் இருந்தது.

www.padippakam.com



அத்தோடு மூன்று ஏக்கர் உடையானிடம் வாரத்துக்கு எடுத்துச் செய்யும் அரை உடைமை விவசாயியாயிருந்தான். தற்போது எல்லாம் போய் அரை ஏக்கர் நிலமே பவளத்தின் பெயரில் எஞ்சியிருந்தது. கூலி விவசாயியின் நிலைக்கு அவள் மாறி வந்து விட்டாள். குடியிருக்கும் நிலமே நடராச பிள்ளை உடையானுக்கே சொந்தமானது.

மாதவன் பல் தீட்டிக்கொண்டே உள்ளே உலாவியபடி குழந்தையின் விளையாட்டையும் சந்திரனது வேலையையும் பார்த்துக் கொண்டிருந்தான்.

''உங்கப்பா எங்கை?''

நமசிவாயத்தைப்பற்றி ஓரளவு தெரிந்திருந்த போதும் தந்தைபற்றி சந்திரனுடைய அறிவை அளந்து பார்க்க விரும்பியவன்போல மாதவன் கேட்டான்.

''அப்பாதானே செத்துப் போனார். அம்மா சொல்லேல்லையா?''

''எப்பிடிச் செத்தார்?''

''இங்கை நடராசபிள்ளை என்று ஒரு உடையான் இருக்கிறான், நீங்கள் கேள்விப்படேல்லையா? அவன்தான் கொலை செய்து போட்டான்''

''எப்பிடி உனக்குத் தெரியும், அவன்தான் கொலை செய்ததென்று''

''எனக்கென்ன ஊரெல்லாம் தெரியுமே. அவன் அம்மாவிட்டையே ஒருநாள் சொன்னானாம், அப்பா கவனமாய் நடக்காட்டால் தாலி அறுப்பன் என்று. உடையான் கூலியைக் குறைக்கிறதுக்காக டிராக்டர் வாங்கி வந்தான். அதை எதிர்த்து அப்பா, மாமா, முத்துமாமா எல்லாரும் போராட்டம் நடத்தினார்கள். அதுக்காகத்தான் கொலை செய்தான்''

''எங்கை வைச்சுக் கொலை செய்தார்கள்?''

மாதவன் கேட்டான்.

படிப்பகம்

www.padippakam.com



''அண்டைக்கு இராத்திரியெல்லாம் வயலிலையிருந்து அப்பா வரேல்லை என்று விளக்கும் கையுமாய் தேடித் திரிஞ் சம். பிறகு காலையிலை போனால் வயல் சேத்துக்கை இரத் தத்தில் தோய்ந்துபோய் கிடந்தார். அதை நினைச்சாலே பயமாயிருக்கு. இரவிலைகூட நான் வாய் புலம்பி கத்திற னான் எண்டு அம்மாவும் மாமாவும் சொல்லுவினம்''

ஒருகையில் விளக்குமாறுடன் வேலையை மறந்து சந்திரன் தான் அனுபவித்த பயங்கரக் கதையைச் சொன் னான். அவனது கண்கள் விரிந்து போயிருந்தன.

''பொலிஸ்காரரெல்லாம் வரேல்லையா? உடையா னைப் பிடிச்சு விலங்கு மாட்டேல்லையா?''

''அவன் பெரிய ஆள், அவனைப் பொலிசாலை பிடிக்க முடியுமா? இராமன் எண்டு ஒருத்தனைப் பிடிச்சு மறியலிலை வைச்சாங்கள் இப்ப அவனையும் விட்டிட்டாங்களாம்''

''அப்பாவுக்காக் நீ என்ன செய்யப் போறாய்?''

''நான் வளர்ந்தபின் உவனுக்குப் பாடம் படிப்பிக்கா மலா விடப்போறன்''

''என்ன பாடம் படிப்பிக்கப் போறாய், சரித்திரமா பூமிசாத்திரமா?''

''அவன்ரை பெட்டை ஒருத்திகூட எங்கடை பள்ளிக் கூடத்திலைதான் படிக்கிறாள்''

''ஒவ்வொரு நாளும் புதுப்புதுச் சட்டை போட்டு, செருப்புப் போட்டு, வெள்ளையாய் பவுடர் தடவி, பொட்டு வைச்சு நிமிர்ந்த நடையோடு வருவாள் இல்லையா?''

''ஓம். உங்களுக்கெப்பிடித் தெரியும்?''

''எனக்குத் தெரியும். ஆனா நீ சொல்லு பார்ப்பம். அவளுக்கு மட்டும் எப்பிடி நல்ல சட்டையெல்லாம் போட்டுக் கொண்டுவர முடியுது. நீ அழுக்கு வேட்டியோடை பள்ளிக்கு8 போறாய்?''

www.padippakam.com



''உடையானுக்கு கனக்க நிலமிருக்கு''

''நிலமிருந்தால்...''

''ஆளிருக்கு, வயலிலை நெல்லு விளைஞ்சால் லொறி லொறியாய் ஏத்துவாங்கள்''

''அதெல்லாம் வயலிலை வேலை செய்து ஆரு உழைச்சது''

''நாங்கதான்...''

''நீங்கள் உழைக்க அதெப்பிடி அவன் மட்டும் மூட்டையெல்லாம் ஏத்திக்கொண்டு போறான். உங்களுக்குச் சாப்பிடவே அரிசிக்குத் தட்டுப்பாடு. அவன் பிள்ளை நாளுக்கொரு சட்டை போடுகிறாள். நீ ஒரே அழுக்கு வேட்டியோடை பள்ளிக்குப் போறாய். படிப்பிலைகூட அவள்தான் கெட்டிக்காரியாயிருப்பாள். ஏனென்றால் வீட்டிலே வேலை செய்ய வேண்டியதில்லை. கிடைக்கும் நேரத்திலை படிப்பாள். வீட்டிலை பாடஞ் சொல்லித்தரவே வாத்தியார் இருப்பார். நீ இங்கே பிள்ளை பார்க்கிறாய், வயலுக்கு சாப்பாடு கொண்டு போக வேணும்''

''நீங்க சொல்லுறது எல்லாம் சரி. வாத்தியாரே எங்களைப் பார்த்து 'மக்குகளே, உங்களுக்கு என்ன படிப்பு! போய் உடையாருக்கு மாடு மேயுங்கடா' என்று சொல்லித்தான் அடிப்பார்''

''உங்களையும் அவன் மாடுகளை மேய்ப்பதாகத்தான் நினைச்சு அடிக்கிறான். இனிமேல் அப்படி அடிச்சால் நீங்களும் கம்பைப் பிடுங்கி அவனுக்கு அடிக்கிறதுதானே''

''எனக்கும் அப்பிடித்தான் கோபம் வாறது. அவன் பெரிய ஆள், பெலசாலி என்று பேசாமல் ஏச்சையும் அடியையும் வாங்கிக் கொண்டு வருவன்''

''உண்மையில் அவன்தான் கோழை. உன் கையில் எதுவும் இல்லாதபோது அடிக்கிறான். ஒருமுறை நீ திருப்பி

ம—4

www.padippakam.com



அடி. அதன்பிறகு அப்பிடி ஒருத்தருக்கும் சொல்லவும் மாட்டான். ஒருபோதும் அடிக்கவும் மாட்டான்''

''படிப்புப் போனாலும் மற்றமுறை அப்பிடித்தான் செய்ய வேணும்''

''பயப்பிடாதை. படிப்புப் போகாமல் நாங்கள் பார்த்துக்கொள்ளுவம்''

சந்திரன் கண்களில் ஒருவகைப் புதுஒளி வீசியது. அவன் சிந்தனை பலமாக வேலை செய்தது. வேலைகளையே மறந்து போய் சிறிது நேரம் நின்றான். பின்னர் ஓடிச் சென்று வாளியும் தண்ணீரும் கொண்டுவந்து வாசலில் வைத்தான். மாதவன் வாய், முகம் கழுவினான்.

''சாப்பாட்டை எடுக்கட்டா?''

சந்திரன் எதிரே இருந்த சிறு குசினியின் படலையை அவிழ்த்தான். உள்ளேயிருந்து ஒரு பானையையும் கறிச்சட்டியையும் எடுத்துவந்து தலைவாசலில் வைத்தான். சோற்றை வடித்தெடுத்து கறிச்சட்டிக்குள் போட்டு குழம்பு கறியோடு பிரட்டினான்.

''காகம் வராமல் பார்த்துக்கொள்ளுங்கோ. இலை கொண்டு வாறன்''

கையைக் கழுவிவிட்டு ஓடிச்சென்று வாழையிலைத் துண்டு வெட்டி வந்தான். மீண்டும் குசினிக்குள் சென்று பச்சை மிளகாய் இரண்டு கொண்டு வந்தான். பின்னர் அறைக்குள் சென்று ஊறுகாய் போத்தில் ஒன்றை எடுத்து வந்தான்.

சந்திரனின் சுறுசுறுப்பையும் செய்யும் வேலைகளையும் பார்த்து மாதவன் உள்ளூறச் சிரித்தான்.

சட்டியில் ஒரு அகப்பையை வைத்து இலைத்துண்டை மாதவனிடம் நீட்டினான்.

சோறு இருவருக்கும் பசியாறும் அளவாக இருந்தது.

www.padippakam.com



குழந்தை தவழ்ந்து வந்து குந்தி உட்கார்ந்திருந்த சந்திரனின் முதுகைப் பிடித்துக்கொண்டு நின்றது. மாதவன் கையலம்பிவிட்டு குழந்தையைத் தூக்கினான். முதலில் அடம் பிடித்து அனுங்கிய குழந்தை மாதவனின் தோளில் சாய்ந்து சிரித்து மழலைக் குரல் எழுப்பினான்.

## 14

அன்று காலை எழுந்த நேரம் தொடக்கமே மாதவனுக்கு அடிக்கடி வீட்டு நினைவும் குழந்தைகள் பற்றிய எண்ணமும் எழுந்து கொண்டிருந்தன. தன் மூத்த பையன் சந்திரனுக்கு இளமையாயிருந்தபோதும் அவனோடு ஒப்பிட்டுப் பார்த்தான்.

தன் மகனிலும் பார்க்க சந்திரனே விவேகமும் சுறுசுறுப்பும் செயலாற்றும் திறனும் உள்ளவனாகத் தோன்றியது. அவன் மகனுக்கு உணவுகூட சில வேளைகளில் தாயே ஊட்டி விடுவாள்.

மாதவன் வீட்டைவிட்டுப் புறப்பட்டபோது அவன் பெண்ணுக்கு வயது நாலு. இளைய பையன் பவளத்தின் குழந்தைபோலிருந்து அவனது தோளிலும் முதுகிலும் ஏறி விளையாடினான். இனி அவர்களை நினைத்தென்ன? காலம் வரும்வரை மறக்க வேண்டியதுதான்.

''இவனுக்கு என்ன பெயர்?''

மாதவன் தன் வீட்டுச் சிந்தனையை அறுத்துவிட்டுக் கேட்டான். வழமையாகவே அவன் வீட்டு நினைவுகளை மறக்கவே விரும்பினான். கிராமத்து ஏழைகள்போல் அவர்கள் கஷ்டப்பட வேண்டியதில்லை. அது ஒன்றே போதாதா-

www.padippakam.com



''ஆனந்தன்''

''நல்ல பெயர்''

''ஆனா இவன்தான் அப்பாவைக் கொன்றவன் என்று ஊரெல்லாம் சொல்லுறாங்கள்''

''நீ அதை நம்பிறியா?''

''இல்லை''

''உடையானே விதி, கிதி, தகப்பனைக் கொல்லி என்றெல்லாம் தன் பெயரைச் சொல்லாமலிருக்கிறதுக்காக கதை கட்டிவிடுவான். அதிலெல்லாம் ஏமாறப்படாது''

''நான் ஏமாறமாட்டன்''

''நான் குழந்தையை வைத்திருக்கிறன். நீ பாடப் புத்தகமெடுத்துக் கொஞ்ச நேரம் படி''

மாதவன் சொன்னான்.

''நீங்க தெரியாத பாடம் சொல்லித் தருவீங்களோ''

''சரி''

சந்திரன் உள்ளே சென்று அட்டை கிழிந்த தன் பாடப் புத்தகத்தை எடுத்து வந்தான். தலைவாசல் குந்திலிருந்த படி தான் முன்னர் படித்த பாடம் ஒன்றைப் பிரித்துப் படிக்கு முன் மாதவனைப் பார்த்துக் கேட்டான்:

''திருக்குறளுக்கு கருத்துச் சொல்லித் தருவீங்களா?''

''படி, தெரிந்தளவில் சொல்லித் தருவன்''

''தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சிதன் மெய் வருத்தக் கூலிதரும்''

சந்திரன் மெதுவாக எழுத்துக்களைத் தனித்தனியே எழுத்துக்கூட்டி குறளை ஒருவகையாகப் படித்து முடித்தான்.

''வாத்தியார் சொல்லித்தந்திருப்பாரே. கருத்தை நீயே சொல்லன்''

www.padippakam.com



மாதவன் கூறினான்.

''தெய்வம் என்பதற்கு ஊழ் என்றும், பென்சிலால் எழுதிவைக்கும்படி வாத்தியார் சொல்லி எழுதிவைத்திருக்கிறன். ஊழ் என்றால் என்ன மாமா?''

சந்திரன் கேட்டான்.

''அதைப் பிறகு பார்ப்பம். இப்ப முதலில் நீ படிச்ச கருத்தைச் சொல்லு''

''கடவுளால் முடியாவிட்டாலும் விடாமுயற்சியானது உடம்பு வருத்திய கூலியைக் கொடுக்கும், சரிதானே?''

சந்திரன் சொல்லிவிட்டு மாதவனைப் பார்த்தான்.

''உடம்பை வருத்தித்தானே ஏதோ கூலி அம்மா, மாமா எல்லாருக்கும் கிடைக்குது. உடம்பை வருத்தாமலே எப்படிப் பல பேர் செல்வமே சேர்த்து வைச்சிருக்கிறாங்களே என்று நீ வாத்தியாரைக் கேட்டுப் பார்த்தியா?''

''உப்பிடியெல்லாம் கேட்டால் அடிதான் விழும்''

''ஏன், இது உண்மையில்லையா? உங்கடை உடையானை பழைய விதானையைப் பார்த்திருக்கிறியா? அவங்களெல்லாம் உடம்பை வருத்தி உழைக்கிறாங்களா? உங்க மாமாவைப்போல ஒல்லி உடம்பா?''

''இல்லையே! கொழுத்த, கேப்பை மாடுமாதிரி உடையான் இருப்பான். வண்டியும் தொந்தியும். அவன் ஏன் அம்மா, மாமாபோலை கஷ்டப்படவேணும். அவனுக்குத் தானே நிலமிருக்கே. கூலிக்கு ஆளிருக்கே.''

''சரி கூலிக்கு ஆளிருக்கு. கூலியாட்கள் உடலை வருத்துகிற அளவிற்காவது உடையான் கூலி கொடுக்கிறானா? அப்படிக் கொடுத்திருந்தால் இப்பிடியான வறுமை உங்களுக்கு வருமா? அப்ப இரண்டு உண்மை தெரியுது. ஒன்று உடலை வருத்திற அளவுக்கு கூலி கிடைப்பதில்லை. மற்றது

www.padippakam.com



கடவுளால் முடியாவிட்டாலும் உடலை வருத்தாமலே சிலர் செல்வமே சேர்க்கிறார்கள். சரியா?''

''நீங்க சொல்லிறது சரிபோலத்தான் தெரியுது. மற்றத் தடவை வாத்தியாருக்கு உதைச் சொல்லப்போறன். கஷ்டப் படுற அளவுக்கு கூலி கிடைக்காது என்று ஏன் அவர் பாடேல்லை?''

''அவர் நிலமுள்ளவர் பக்கத்தில் நின்று பாடியிருக் கிறார். நிலமில்லாதவர்களே பயப்படவேண்டாம், கடவுளால் முடியாவிட்டாலும் உங்கள் உடலை வருத்திற அளவிற் காயினும் கூலி கிடைக்கும் என்று. நிலமுள்ளவன் பாதிக் கூலியைக் கொடுத்து பட்டினி போடுவான் என்பதை அவர் மறந்துவிட்டாரோ அல்லது மறைத்திருப்பாரோ''

''அவர் பெரிய மனுஷர். சிலவேளை மறந்து போயிருப் பார்''

சந்திரன் பரிதாபப்பட்டுச் சொல்வது போலிருந்தது. மாதவனுக்கு அவன் நிலையைப் பார்த்து சிரிப்பே வந்தது குழந்தையை கீழே இறக்கிவிட முயன்றான். மீண்டும். தோளிலேயே இருக்க அடம் பிடித்தது குழந்தை.

சந்திரன் மேலும் தொடர்ந்து பாடம் படித்தான். மாதவன் இடையிடை வினாக்கள் எழுப்பி அவன் சிந்தனை யைத் தூண்டினான்.

## 15

சில நேரம் கழித்து குழந்தையைக் கீழே இறக்கிவிட்டு சந்திரனைப் பார்க்கும்படி கூறிவிட்டு உள்ளே சென்று ஒரு பையை எடுத்துவந்தான். அதனுள் இருந்து புத்தகம், பத்திரிகைகளை எடுத்து மாதவன் படித்தான்.

www.padippakam.com



''நீங்க ராத்திரி வந்ததே எனக்குத் தெரியாது. காலையிலை பார்க்கும்போதுதான் அம்மாவும் மாமாவும் அந்த வாசற் பக்கமாய் வெளியாலை படுத்திருந்தினம். நீங்கள் ஓடி விடாமல் காவலுக்குப் படுக்கிறதுபோலை இருந்துது''

''இப்ப நீதானே காவல். நான் ஓடேல்லையே''

''பகலாய் போச்சே, எப்பிடி ஓடுவியள். நாங்கள் பிடிச்சுப் போடுவமே. சரி மாமா. நீங்க இனிமேல் இங்கை தானே இருப்பியள்''

''சரி, பார்ப்பமே''

''பார்க்கிறதென்ன நீங்க இருந்தால் நான் ஒழுங்காய் பள்ளிக்குப் போகலாம். வீட்டிலை பாடம் படிக்கலாம்''

''பார்ப்பமே''

மாதவன் தன் வேலையில் கருத்தைச் செலுத்தினான்.

நண்பகல் கழிய தியாகன் வந்து சேர்ந்தான். அவன் கையில் ஒரு பார்சல் இருந்தது சந்திரனுக்கும் சாப்பாடு கொடுப்பதற்காக மாதவன் அதை அவிழ்த்தான்.

''நீங்களே சாப்பிடுங்கோ. அம்மா இனி வந்திடுவா சோறு வடிச்சதும் நான் கஞ்சி குடிச்சு வயிற்றை நிரப்புவன்''

''பரவாயில்லை. இப்ப இந்த இடியப்பத்திலேயும் சாப்பிட்டுப் பார்''

மாதவன் வற்புறுத்த அவனும் வந்து சேர்ந்துகொண்டான்.

தியாகன் செய்திகள் சொன்னான். பையிலிருந்து பத்திரிகைகள் எடுத்துக் கொடுத்தான்.

சர்வதேச அரசியல் நிலைமை பற்றி இருவரும் பேசினர். வியத்நாம், மேற்காசியா பிரச்சனைகள் அதிக இடம் பெற்றன. உள்நாட்டு அரசியல், விரைவில் வர இருக்கும்தேர்தல் பற்றியும் பேச்சு எழுந்தது.

படிப்பகம்

www.padippakam.com



சந்திரன் அதிகம் புரியாதவனாகக் கேட்டுக்கொண்டிருந்தான். டட்லி செனநாயகா என்ற பெயர் அவனுக்குப் புரிந்தது. இலங்கையில் பசுமைப் புரட்சியை ஏற்படுத்திய பிரதமர் என்பதை பலதடவை பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் கூறக் கேட்டிருந்தான். அவருடைய படமொன்றும் பள்ளிக்கூடத்தில் தலைமை ஆசிரியர் அறையில் தொங்குவதைப் பார்த்திருக்கிறான்.

''பசுமைப் புரட்சி என்றால் என்ன மாமா''

அவர்களது உரையாடலுக்கிடையே புகுந்து சந்திரன் கேட்டான்.

''பசுமையென்றால் பச்சை. நெற்பயிர் பச்சையெல்லே. நெல் உற்பத்தியில் புரட்சி செய்து விட்டார்களாம்''

''அப்படியென்றால்...''

''முன்னையதிலும் பார்க்க ஏராளமாக நெல் விளைவதைக் கூட்டியிருக்கிறார்களாம்''

''அதாலை ஆருக்கு நன்மை''

''விவசாயிகளுக்கு, நாட்டுக்கு...''

''எங்களுக்கு நன்மை ஏதேன் வந்திருக்கா...''

''உங்க உடையான், பழையவிதானை, விவசாயக் கமிட்டித் தலைவர் தர்மலிங்கம் எல்லாரும் முன்னையதிலும் பார்க்க நல்லா யிருக்கிறாங்களில்லையா?''

''ஓமோம், உண்மைதான். எல்லாரும் டிராக்டர், லொறியெல்லாம் வாங்கி வைச்சிருக்கினம். உடையார் புது வீடெல்லாம் கட்டியிருக்கிறார். அங்கை இரவிலை மெஷினிலை வெளிச்சம் எரியுதாம். நான் தூர நிண்டுதான் பார்த்தன். அப்ப எங்களுக்கு ஒண்டுமில்லையா?''

''அம்மா, மாமாவுக்கெல்லாம் வேலை குறைஞ்சிருக்கெல்லே. முந்தி அவங்க செய்த வேலையெல்லாத்தையும் டிராக்டரே செய்யுதே''

www.padippakam.com



''அந்த டிராக்டரெல்லாம் எங்கையிருந்து வருகுது''

''இங்கிலாந்து, அமெரிக்கா...''

''அதை வாங்க கனக்க காசு வேணுமே''

''அரசாங்கமே கடனாக வாங்கிக் கொடுக்குது''

''எங்களுக்கு அரசாங்கம் அப்பிடிக் கடன் தர மாட்டுதா?''

''உங்களுக்கு நிலமிருக்கா?''

''இருந்த கொஞ்ச நிலத்தையும் உடையானே எடுத்துப் போட்டானாம். அதைப் பறிச்சு எடுக்க முடியாதா?''

''நீ வளர்ந்த பிறகு பறிச்செடன்''

சந்திரன் எதுவும் பேசாமல் சிந்தனையில் ஆழ்ந்தான். அவன் மனம் குழம்பிப் போயிருந்தது.

காலையில் குழந்தை குடித்துவிட்ட எஞ்சிய பாலையும் குழந்தைக்குக் கொடுத்துவிட்டான். இனிக் குழந்தை அழுதால் பனங்கட்டித் தண்ணீர்தான். அதற்குமுன் அம்மாவந்து பால் கொடுத்துவிடுவாள் என எதிர்பார்த்து இடையிடை முற்றத்துக்குச் சென்று தூரத்தே நோட்டம் விட்டுப்பார்த்தான். மாட்டு வண்டில் ஒன்று பாதை வழியே அசைந்தசைந்து போய்க்கொண்டிருந்தது.

## 16

சிறிது நேரத்தில் பதட்டத்தோடு பவளம் வந்து சேர்ந்தாள். குழந்தையைப் பற்றியே அவள் கவலைப்படவில்லை. மாதவனின் வசதிகள், சாப்பாடு பற்றியே முதலில் விசாரித்தாள்.

www.padippakam.com



குழந்தை அவளைக் கண்டதும் அவள்மேல் பாய்ந்து அழத்தொடங்கியது. பவளம் உலையை வைத்து அடுப்பை மூட்டிவிட்டு பால் கொடுப்பதற்காக அறைக்குள்ளே குழந்தையைக் கொண்டு சென்றாள். சந்திரன் அடுப்பு தூர்ந்து போகாது மூட்டி எரித்துக் கொண்டிருந்தான்.

தியாகனும் மாதவனும் தமது பழமையான வேலைகள், விவாதங்களில் ஈடுபட்டனர்.

மாலைப்பொழுது மங்கி வந்தது. செல்லத்தம்பியும் வயலிலிருந்து வந்துவிட்டான்.

முத்துவேலு, மூர்த்தி, துரைரத்தினம் யாவரும் ஒருவரைத் தொடர்ந்து ஒருவராக வந்து சேர்ந்தனர்.

தலைவாசல் நடுப்புறத்தில் தொங்கிய கம்பியில் பவளம் லாந்தரைக் கொண்டுவந்து மாட்டிவிட்டாள். சுற்றிவர யாவரும் உட்கார்ந்தனர்.

''பொழுது எப்படிக் கழிந்தது?''

முத்துவேலு விசாரித்தான்.

''சந்திரனும் குழந்தையும் என்னைத் தூங்கவே விடவில்லை. குழந்தையோடு விளையாடினேன். சந்திரன் பாடங்கேட்டுப் படித்தான்''

''என்ன பாடம் சொல்லிக்கொடுத்தீங்க?''

மூர்த்தி கேட்டான்.

''பள்ளிப்பாடந்தான். திருக்குறளிலை 'மெய்வருத்தக் கூலிதரும்' என்பதைப் பற்றி ஆராய்ந்தம். நடராசபிள்ளை உடையார், புழையவிதானையெல்லாம் உடம்பை வருத்தாமலே பணக்காரரானார்கள்; டிராக்டர், லொறி, ஜீப் எல்லாம் வைத்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் சந்திரன் ஒப்புக்கொண்டான் நிலமுடையவர் பக்கமே வள்ளுவர் நின்றார். இப்போதைய அரசாங்கமும் நிற்கிறது என்பதையும் அறிந்து கொண்டான்''

www.padippakam.com



''நிலமுடையவர் பக்கம் நின்றாலும் வள்ளுவர் ஏழைகளைப் பட்டினி போடாதை, பகுத்துண், தர்மம் செய் என்று அறங்களெல்லாம் போதித்து சமரசம் பேசியிருக்கிறாரே''

தியாகன் கூறினான்.

''இரண்டு பிரிவினருக்கு மட்டுமல்ல; அதற்கும் மேலாக அரசுக்கே அறிவுரை கூறியிருக்கிறார். ஏழைகள் அழுதால் நீ அழிந்துவிடுவாய் என்று கூட அச்சுறுத்தி வைத்திருக்கிறார். 'ஏழைகளின் கொதிப்பு, துன்பம், துயர் பற்றியெல்லாம் எச்சரித்திருக்கிறார். அதனால்தான் நிலவுடைமைச் சமுதாயம் வள்ளுவர் எழுதி இரண்டாயிரம் வருடத்திற்குப் பின்னும் அசைக்க முடியாது இன்றும் வலுப்பெற்று நிற்கிறது போலும்''

மாதவன் கூறினான். பல்வேறு குறள்களை எடுத்து வள்ளுவரின் 'சமரசத்திற்கு உதாரணமாகக் காட்டினான். நிலவுடைமைக்காரரையும் அவர்களைச் சார்ந்து காப்பாற்றும் அரசையும் வள்ளுவர் எச்சரித்திருப்பதை ஆதாரபூர்வமாக விளக்கினான்.

# 17

தன் சமையல் ஆறிவிடப்போகிறதே என்று பவளம் அடிக்கடி நினைவூட்டிக்கொண்டிருந்தாள். பசியைப் பற்றியே கவலைப்படாதபோதும் அவளின் விருப்பை நிறைவேற்ற மாதவன் உடன்பட்டான். தலைவாசலிலேயே மாதவனோடு தியாகனுக்கும் செல்லத்தம்பிக்கும் சந்திரனுக்கும் சேர்த்து இலை போட்டாள். சாப்பிடும்போதும் மாதவன் கலகலவென்று பேசிக்கொண்டேயிருந்தான்.

www.padippakam.com



மாதவன் பவளத்தின் எளிமையான உணவை மிக்வும் சுவைத்து ரசிப்பவன் போலக் காட்டிச் சாப்பிட்டான். அவ்வேளை மருதமனைக் கிராமத்திலிருந்து அவனை அன்றிரவு அழைத்துச் செல்ல தில்லைநாதன் வந்திருந்தான். வீடுகாட்ட அவனைக் காந்தன் அழைத்து வந்தான்.

தில்லைநாதனுக்கு நல்ல சாரீரம். எங்கு சென்றாலும் கையில் பாட்டுப் புத்தகத்துடனேயே செல்வான். 'பாடு' என்றால் தயக்கமேயில்லை. மாதவனும் தியாகனும் தூபம் போட்டனர். உடனே விளக்கை இறக்கிக் கீழே வைத்து விட்டு 'போராட்டத் தீ' என்ற பாடல் நூலை எடுத்துப் பாடத் தொடங்கினான்; தோட்டத் தொழிலாளரின் அரசியல் வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் பாடல்கள்:

கிளர்ச்சி செய்வது சரியென்று சொன்னார்

கேவல வாழ்வை அழித்திடச் சொன்னார்...

மக்களை ஓரணி திரண்டிடச் சொன்னார்

மக்கள் படையை அமைத்திடச் சொன்னார்...

தூசியும் துடைக்காமல் போகாது—நம்

துன்பமும் தானாக தீராது—

நூலிலுள்ள பாடல்கள் யாவையுமே படித்து முடித்தான். ஒரு மணி நேரம் யாவரும் உணர்வும் உரமும் பெற்றனர்.

அவனது பாடல் முடிந்த பின்னரும் யாவ்ரும் சிறிது நேரம் மௌனமாக இருந்தனர். எவராலுமே பேச முடியவில்லை. பாடல்கள் அவர்களது நெஞ்சை ஈர்த்து வீர உணர்வு ஊட்டின. அடுத்து, தியாகன் தன் பையிலிருந்த திருக்குறள் போன்ற சிறு நூலை எடுத்துப் படிக்கத் தொடங்கினான்.

''ஒவ்வொருவரும் பொது மக்களை நேசிக்க வேண்டும்; பொது மக்களின் குரலைக் கவனமாகக் கேட்க வேண்டும்;

www.padippakam.com



எந்த இடத்திற்குச் சென்றாலும் அந்த இடத்துப் பொது மக்களுடன் தன்னை ஒன்றாக இணைத்து, தன்னைப் பொது மக்களுக்குமேல் வைக்காமல் அவர்கள் மத்தியில் மூழ்கித் திளைக்க வேண்டும். அவர்களது இன்றைய உணர்வுத் தரத் தின் பிரகாரம், அவர்களைத் தட்டி எழுப்பி, அவர்களது அரசியல் உணர்வை உயர்த்த வேண்டும்...''

மகாத்மாவின் மணிமொழிகள். போன்று அவை ஒலித்தன. தியாகனின் குரல் ஒலித்த போதும் சிந்தனை மாதவனை ஒட்டியே வட்ட மிட்டது. மாதவன் இவ்வார்த்தை களையே வாழ்வில் கடைப் பிடித்து ஒழுக முயல்கிறானா? உலகத்து அறிஞர்களெல்லோரும் மக்களுக்காக சேவை செய்; தொண்டு செய்; உயிரைத் தியாகம் செய்; அதுவே மரணத்திலும் மலைபோன்றது என்று கூறும் அதே குரலே அவன் படித்தவற்றிலும் எதிரொலிக்கக் கேட்டான்.

இடையில் அவன் நிறுத்தியதும் அவன் படித்தவற்றைப் பற்றி விவாதம் எழுந்தது. மாதவன் யாவையும் மனனம் செய்து வைத்திருப்பவன் போல விடை கூறிக் கொண்டிருந் தான்.

''பொது மக்களின் உற்பத்தி, பொது மக்களின் நலன் கள், பொது மக்களின் அனுபவங்கள், பொது மக்களின் உணர்வுகள்—இவற்றிலெல்லாம் நாம் இடைவிடாத கவனஞ் செலுத்த வேண்டும்.. பொது மக்களின் நல்வாழ்வில்—நிலப் பிரச்சினை, உழைப்புப் பிரச்சனை முதல், விறகு, அரிசி, சமையல் எண்ணெய், உப்பு வரையில்—நாம் ஆழ்ந்த கவனம் செலுத்த வேண்டும்...''

மாதவன் தொடர்ந்து தேர்தலுக்குத் தயாராகும் அரசியல்வரதிபோல சொன்னான். மனனம் செய்த பாடத்தை ஒப்புவிப்பது போல் இருந்தது.

நள்ளிரவின் பின்னரே மாதவன் தில்லைநாதனுடன் புறப்பட்டான்; யாவரிடமும் சொல்லி விடை பெற்றான்.

www.padippakam.com



அவர்களை வேடிக்கையாகப் பார்த்துக் கொண்டிருந்த சந்திரனும் தூங்கி விட்டான்.

''இங்கேதான் எனக்கு வேலையிருக்கிறது. இரண்டு நாளில் வந்து விடுவேன்''

மாதவன் கூறினான். மங்கிய ஒளியிலும் அவனது கண் களின் கூர்மையை அவர்களால் காணமுடிந்தது.

வெளியே பூரணையை அண்டிய நிலவு காய்ந்து கொண் டிருந்தது. இரவின் அமைதி. ஆங்காங்கே நாய் ஊளையிடும் சத்தம். காட்டுப் பூச்சிகளின் ஒலி தொடர்ந்து கேட்டுக் கொண்டேயிருந்தது.

யாழ்ப்பாணத்தில் நிலவும் சாதிப் போராட்டம் பற்றி இருவரும் உரையாடியபடி நடந்தனர்.

தெருவில் ஏறிச் சென்றபோது தில்லைநாதனைப் பாடும்படி மாதவன் வேண்டினான். அவன் பாடத் தொடங் கினான்:

''இருட்டறையில் உள்ளதடா உலகம்
ஜாதி இருக்கின்றதென்பானும் இருக்கின்றானே...''

# 18

அரை உடைமை விவசாயியான அம்பலவாணர் பற்றி மூர்த்தியின் வீட்டில் அன்று ஆராயப்பட்டது. அவர் இரண்டு ஏக்கர் சொந்த நிலமும் மூன்று ஏக்கர் வார நிலமும் பயிரிட்டார். மழையைக் காத்திருந்து கடைசியில் புழுதியில் விதைத்தார். சரியாக பரந்து பயிர் முளைக்கவில்லை. குவிந்து முளைத்த இடங்களில் பிடுங்கி பரவலாக நாற்று நடவும் பயிர் போதாது. உடையார் நடராச பிள்ளை மேல்

www.padippakam.com



அவருக்கு நல்ல நம்பிக்கை. அவரின் கண்பார்வையுடன் தானும் காணி நிலமுள்ளவராக வளர்ந்து விடலாம் என்று மனப்பால் குடித்திருந்தார். அத்தனை ஆசை. ஆனால் தானே ஏர் பிடித்து உழ வேண்டிய நிலை. மிகவும் கஷ்டத்தோடு தன் மகனைப் படிக்கவைத்து பல்கலைக் கழகத்திற்கும் அனுப்பிவிட்டார். ஏழை விவசாயி என்று மணியகாரனிடம் கடிதம் பெற்று படிப்பிற்கு அரசாங்க உதவிப் பணமும் பெற்றார்.

திடீரென அவர் நோய்வாய்ப்பட்டு விட்டார். விதைப்பின் முன்னர் மழை பெய்த போதும் அவரால் மாடு பூட்டி உழ முடியவில்லை. அவரது மாடு ஒன்று கிழமாகிவிட்டது. அதனால் சேற்றில் விரைவாக நடக்கவே கிழ மாட்டால் முடிவதில்லை. அம்பலவாணர் அடித்து அடித்து அதன் முதுகே புண்ணாகிவிட்டது.

உடையார் அம்பலவாணரைக் காணும் போதெல்லாம் நளினமாகப் பேசுவார்:

''என்ன வாணர், மேனைக்கூட யூனிவசிட்டிக்கு அனுப்பிப் போட்டீர். அவனாவது சொல்லித்தரேல்லையா? இது யந்திர உலகம். டிராக்டராலை ஆழ உழுதால்தான் விளைச்சல் இருக்கும். உந்தக் கலப்பையாலை நிலத்தைக் கீறி நீர் என்ன விளைச்சலைப் பார்க்கப் போறீர்''

நடராச பிள்ளை உடையார் தன் வேலைகள் முடிந்தால் டிராக்டரை சும்மா வைத்திருப்பதில்லை. கூலி பேசி மற்றவர் நிலங்களையும் இரவு பகலாக வேலையாட்களை வைத்து உழுவிப்பார். கையில் காசு கொடுக்க முடியாதவர்களுக்கு கடனாகவே உழுவார். கூலியை மட்டும் வட்டியோடு நெல்லாகக் கணக்குப் பார்த்துமுன் கூட்டியே சொல்லிவிடுவார். அடுத்த பெரும் போகத்திற்கு மேலும் இரண்டு புது டிராக்டர்கள் வாங்க அவர் திட்டமிட்டிருந்தார்.

அம்பலவாணரும் தன்னை அறியாமலே நடராசபிள்ளையின் வலையில் விழுந்தார். உடல் நலக்குறைவு, கிழட்டு

www.padippakam.com



மாடு, ஆள்பிடித்து உழுதாலும் கூலியும் சாப்பாடும் கொடுக்க வேண்டும். அவனும் திட்டி விழாமல் என்னைப்போல் ஆழ உழுவான் என்பதற்கு என்ன உத்தரவாதம்? நடராசபிள்ளை அறிவுரை கூறியதைப்போல ஒரு தடவையாயினும் அந்த அசுர யந்திரத்தைக் கொண்டு உழுது பார்த்தால்தான் என்ன? விளைச்சலும் கூடத்தானே செய்யும்.

நிலத்தை உழ அம்பலவாணர், மனைவி மூலம் உடையாரிடம் சொல்லி அனுப்பினார். கணவனின் உடல்நிலையையும் கஷ்டத்தையும்கூட பொன்னாச்சி இரக்கமாகச் சொன்னாள். உடையார் பணம் கையில் கொண்டு வந்தால் உடனே உழுதுதர முடியுமென்றார். தன்னளவில் உடையார் இத்தனை கண்டிப்பாய் இருப்பார் என அம்பலவாணர் எதிர்பார்க்கவேயில்லை. டிராக்டர் வருவதை கூலி விவசாயிகள் ஒன்று திரண்டு எதிர்த்துப் போராட்டம் நடத்தியபோதும் அவர் மௌனமாக இருந்து தன் ஆதரவை உடையார் பக்கமாகவே காட்டினார்.

அவன் ஒரு மனுஷனா என்று பொன்னாச்சியின் மனம் வெந்தது.

''அவர் சாகக் கிடக்கிறார். இப்ப உழவுகாசுக்கு எங்கை போறது''

பொன்னாச்சி உடையார் மனதில் இரக்கத்தை ஏற்படுத்துவதற்காகச் சொன்னாள்.

''செத்துப்போனால் பிறகு நான் எங்கை போய் காசு வாங்கிறது?''

பொன்னாச்சியின் நெஞ்சில் கொதிநீர் பட்டது போலிருந்தது.

''உங்களுக்கு மனுஷரிலும் பார்க்க பணந்தான் பெரிசு''

''ஓம், பணங் கொடுத்துத்தானே இந்த டிராக்டரையே வாங்கினேன். அதுக்கு எதிராய் எத்தினை ஆர்ப்பாட்டம் போட்டாங்கள். உன் புருஷனும் பார்த்துக் கொண்டுதானே

www.padippakam.com



யிருந்தான். இப்ப அதே டிராக்டரைக்கொண்டு தன் நிலத்தை உழக் கேட்கிறான்''

உடையாரின் பேச்சுகளை அப்படியே அம்பலவாணரிடம் சொல்லி அவரது மனதை நோயுள்ளவேளை துன்புறுத்த பொன்னாச்சி விரும்பவில்லை. தான் இனி உடையானிடம் எதற்கும் போகமாட்டேன் என்று தன் எதிர்ப்பை மட்டும் சொல்லி வைத்தாள்.

விவசாயக் கமிட்டியில் அங்கத்தவராயிருந்த தன் நண்பர் நாகலிங்கத்தை வரவழைத்து உடையாரிடம் நெல்லில் பேரம் பேசி அம்பலவாணர் உழவை முடித்தார். ஐந்து ஏக்கர் விளைச்சலில் ஒரு ஏக்கரில் விளையக் கூடியது உழவிற்குப் போய்விடுமோ என அஞ்சினார். எப்படியும் டிராக்டர் உழவினால் விளைச்சல் அதிகரிக்கும் என்ற நம்பிக்கையால் மனதைத் தேற்றிக் கொண்டார்.

சிறிது உடல் நலமடைந்ததும் புழுதி விதைப்பிற்கு தானே கிழட்டுமாடுகளைப் பூட்டி நிலத்தைக் கீறிவிட்டார்.

பின்னரும் நோய் வந்து படுக்க நேரிட்டது.

அவர் எதிர்பார்த்தபடி பரவலாக பயிரும் முளைக்க வில்லை. பிடுங்கி நடவும் நாற்றில்லை. நடராச பிள்ளை யிடம் தன் நண்பனை தூதனுப்பினார். அவர் கையை விரித்துவிட்டார்.

''அவனும் பயிரை நட்டு விளைந்தால்தானே உன் உழவு காசும் கிடைக்கும்''

தூதுசென்ற நாகலிங்கம் நயமாகச் சொன்னான்.

''உழவுகாசை வாங்கவா எனக்கு வழி தெரியாது. அவனிட்டை இன்னும் இரண்டு ஏக்கர் நிலமிருக்கு''

நாகலிங்கம் வந்து தன் நீண்டநாள் நண்பனான அம்பல வாணரிடம் மறைமுகமாகக் கூறினான்:

ம—5

www.padippakam.com



''வாணர், நான் சொன்னதென்று மட்டும் ஒருத்தருக்கும் சொல்லிவிட வேண்டாம். உம்மடை காதிலை போட்டு வைக்கிறன். உம்மடை சொந்த நிலத்திலை 'உடையாருக்கு ஒரு கண் இருக்கு' '

## 19

நாற்று நடக் கூலிக்கே காசில்லை; நாற்றில்லை, எழுந்து நடமாடி காரியம் பார்க்க உடல் நலமில்லை. இதய வேதனையோடு நிலமே பறிபோய் விடுமோ என்று மன வேதனைவேறு பட்டுக் கொண்டிருந்தார் அம்பலவாணர். வயல் வரை நடக்க இரண்டு நாளில் தெம்பு வந்துவிடுமோ என்பதைப் பார்க்க வண்டில் பாதைவரை தளர்ந்த நடையோடு வந்தவர் எதிரே முத்துவேலுவைக் கண்டார்.

அம்பலவாணரின் நிலையைப்பற்றி ஓரளவு அறிந்திருந்த போதும் முத்துவேலு அவரின் முன்னைய பச்சோந்தித்தனத்தை நினைந்து ஆத்திரமே யடைந்திருந்தான்.

''என்ன வாணர் வயல் பக்கமே காணவில்லை. சுகமில்லையோ''

முத்துவேலு கேட்டான்.

அம்பலவாணர் தன் மனவேதனை முழுவதையும் முத்துவேலுவிடம் கொட்டினார். அவர் நிலைக்காகப் பரிதாபப் பட்டபோதும் வெளியே காட்ட விரும்பாதவனாக முத்துவேலு சொன்னான்:

''உங்களுக்குத்தானே இப்பிடியான ஆபத்து வேளையெல்லாம் உதவ உடையார் நடராசபிள்ளை இருக்கிறாரே''

www.padippakam.com



''அவனா? அவனைப் போல கொடியவன், அயோக்கியன்...மிருககே இந்த உலகத்திலை கிடையாது. நான் அவனை நம்பின்து உண்மைதான். முத்துவேலு. நல்ல பாடம் படிச்சிட்டன். ஆனால் இதோடை அழிஞ்சே போய் விடுவனோ என்றுதான் பயமாயிருக்கு. நான் இந்தக் கஷ்டத்தில் இருந்து எழும்பி விட்டனென்றால் எண்டைக்கோ உவனுக்கு என்ரை உயிரைக் கொடுத்தென்றாலும் வஞ்சம் தீர்க்காமல் விடமாட்டேன்''

அம்பலவாணரின் சோர்ந்து, வாடி, பலமிழந்த முகத்திலும் உடலிலும் கோபத்தால் ஏற்பட்ட உரமும் உக்கிரமும் எழுந்ததை முத்துவேலு கண்டான். இவர்களெல்லாம் அனுபவப்பட்டுத்தானா எம்பக்கம் சேரவேண்டும்? முன்னர் பச்சோந்தியாயிருந்தவர்கள் இப்போது எம்பக்கம் தலை காட்டிவிட்டு பின்னர் காரியமானதும் அப்பக்கம் சாரமாட்டார்களா? இவர்களை எத்தனை தூரம் நம்பலாம்? இவர்களை நிரந்தரமாக எப்படி உண்மையின் பக்கம் வைத்திருக்கலாம்?

முத்துவேலு நடந்தவற்றைக் கூறியபோது மூர்த்தியின் வீட்டில் விவாதம் நடந்தது. கிராமத்தில் அம்பலவாணரைப் போன்ற நிலையிலுள்ள அரை உடைமை விவசாயிகளின் வரலாறுகளையெல்லாம் ஒவ்வொருவரும் இருபக்கத்திற்கும் எடுத்துக்காட்டாகக் காட்டினர்.

யாவற்றையும் ஆழ்ந்து கேட்டுக் கொண்டிருந்த மாதவன் ஒரு நூலை எடுத்துப் பக்கங்களைப் பிரித்தான்:

''விவசாயிகளைப் பற்றிய இந்த ஆய்வு நூல் கருத்துகள் எமது நாட்டிற்கும் பொருந்துகின்றனவா என்பதை முதலில் பாருங்கோ- எமது பிரச்சனைக்கே இது தக்க வழியும் காட்டலாம்''

மாதவன் முதலில் சொன்னான். பேச்சுகள் ஓய்ந்ததும் மாதவன் படித்ததை ஆர்வமாக யாவரும் கேட்டனர்.

www.padippakam.com



''மிகப் பெரும்பான்மையான அரை உடைமை விவசாயிகள் வறிய விவசாயிகளுடன் ஒன்று சேர்ந்து கிராமியப் பொதுமக்களின் மிகப் பெரும் பகுதியாகின்றனர். விவசாயப் பிரச்சினை பிரதானமாக இவர்கள் பற்றிய பிரச்சினையாகும்...அரை உடைமை விவசாயிகள் உடைமை விவசாயிகளைவிட மேலும் தாழ்ந்த நிலையில் உள்ளனர்; ஏனென்றால் ஒவ்வொரு வருடமும் இவர்களுக்கு வேண்டிய உணவிற் பாதி குறைவாயிருக்கும்; ஆகவே இந்தப் பற்றாக்குறையை பிறரிடமிருந்து நிலத்தைக் குத்தகைக்குப் பெறுதல், தமது உழைப்புச் சக்தியின் ஒரு பகுதியை விற்றல், அல்லது மிகச் சிறிய வர்த்தகத்திலீடுபடல் ஆகியவற்றின் மூலம் நிவர்த்தி செய்ய வேண்டியவராயுள்ளனர். வசந்தகால இறுதியிலும் கோடைகால ஆரம்பத்திலும் தானியம் கதிரிலேயே இருக்கும் போதும் கையிருப்பு முடியும் சமயத்திலும் இவர்கள் மிகக் கடும் வட்டிக்குக் கடன் வாங்கி உயர்ந்த விலைக்குத் தானியம் வாங்குகின்றனர். இவர்களுடைய நிலைமை பிறர் உதவி தேவைப்படாத உடைமை விவசாயிகளின் நிலைமையைவிட இயற்கையாகவே கஷ்டமானது. ஆனால் இவர்கள் வறிய விவசாயிகளைவிட நல்ல நிலைமையிலிருக்கின்றனர். காரணம், வறிய விவசாயிகளுக்கு நிலமுமில்லை. வருட முழுவதும் பாடுபடுதற்கு அறுவடையிற் பாதியோ, அதற்குக் குறைவானதோ பெற்றபோதும் தமது சொந்த நிலத்துத் தானியம் முழுவதையும் தாமே வைத்திருக்கலாம். ஆகவே அரை உடைமை விவசாயிகள் உடைமை விவசாயிகளைவிடப் புரட்சிகரமானவர்களா மிருக்கின்றனர்...''

மாதவன் தலையை நிமிர்த்தினான்.

''அம்பலவாணர் நிலையையும் அப்படியே சொல்லியிருக்கிறமாதிரி யிருக்கு.''

துரை ரத்தினம் சொன்னான்.

''இப்படியாக அம்பலவாணர் போன்றவர்களின் கதைகளை அண்ணாதுரையே பல இடங்களில் அழகாக எழுதியிருக்கிறார். மூர்த்தி நீ 'ஜமீன் இனாம் ஒழிப்பு' படிச்சியா?''

www.padippakam.com



தியாகன் மூர்த்தியைப் பார்த்துக் கேட்டான்.

''புத்தகமிருந்தால் கொடு. படித்துப் பார்ப்பம்.''

''இப்போது அம்பலவாணர்பற்றி நாம் ஒருமுடிவு எடுத்து உடனே செயலாற்ற வேணும்''

துரைரத்தினம் விஷயத்திற்கு வந்தான்.

அம்பலவாணருக்கு உதவுவது என்று தீர்மானிக்கப் பட்டது. மறுநாள் பகல் நாற்றுப் பிடிக்கக்கூடிய இடங் களை நோட்டம் போட்டு வைத்திருந்தனர்.

## 20

பூரணை கழிந்த மூன்றாம் நாள் நிலவு. வானத்தில் முகிலோட்டம் குறைவு. அம்பலவாணரின் வயலில் ஆண் களும் பெண்களுமாக குனிந்த தலை நிமிராது வேகமாக நாற்று நட்டனர்.

மாதவனும் வந்து சேர்ந்துகொண்டான். எல்லோர் மனத்திலும் புதிய வைராக்கியம்.

மாதவன் வரப்புகளில் நடந்து ஆங்காங்கே நாற்றுக் கட்டுகளை வீசிக்கொண்டிருந்தான்.

தமது உதவியைத் தொடர்ந்து நடைபெறக்கூடிய நிகழ்ச்சிகளையெல்லாம் மாதவனின் சிந்தனை ஆராய்ந்து கொண்டிருந்தது.

அம்பலவாணரின் மனைவி பொன்னாச்சியும் வந்து பயிர் முளைக்கத் தவறிய முக்கியப் பகுதிகளைக் காட்டினாள்.

படிப்பகம்

www.padippakam.com



பொன்னாச்சி பானையில் தேநீர் தயாரித்துக் கொண்டு வந்தாள். சிரட்டைகளும் கொண்டு வந்தாள். வரப்பிலே நின்று நாலு நாலுபேராக அழைத்து பவளம் தேநீரை ஊற்றிக் கொடுத்தாள்.

''நான் போய் சாப்பாடு சமைக்கப் போகிறேன்.''

பொன்னாச்சி பவளத்திடம் தெரிவித்தாள். பொன்னாச்சுக்கு ஏன் வீண் சிரமமும் செலவும் ஏற்படுத்துவான் என பவளம் எண்ணினாள். ஆயினும் அண்மையில் நின்ற முத்துவேலுவிடமும் சென்று ஆலோசனை கேட்டாள்.

''பொன்னாச்சியிடம் இத்தனை பேருக்கும் சாப்பாடு போட அரிசியே இருக்குமோ தெரியாது''

பவளம் இரக்கத்தோடு அருகே நின்ற மாதவனின் செவிகளிலும் விழத்தக்கதாகச் சொன்னாள்.

''சோறில்லாவிட்டாலும் கஞ்சியாவது காய்ச்சட்டும். நாங்களெல்லாம் அங்கேதான் போய் சாப்பிட வேண்டும்.''

மாதவன் கண்டிப்பாகச் சொன்னான்: அதை எதிர்க்கந் தக்க சக்தி அவளுக்கேயில்லை. அவள் பொன்னாச்சியிடம் அப்படியே சொன்னாள். ஓரளவு வேலை முடிந்ததும் சமையலில், தான் உதவ வருவதாகவும் பவளம் தெரிவித்தாள்.

இரவில் பார்வைக்குத் தவறி விடுபடும் சிறு இடங்களை மறுநாள் தானும் பொன்னாச்சியுமாக பார்த்து நாற்று நட முடியும் என பவளம் அனைவருக்கும் சொல்லி பரவலாக பயிர் இல்லாத இடங்களை மட்டுமே நடும்படி யாவரிடமும் தெரிவித்தாள். இரவு வேளை நிலவு இருந்தபோதும் பயிர் முளைக்காத சிறு இடங்களை மதிப்பிடுவது சிரமமாயிருந்தது. பல இடங்களில் பயிர்போல களைகளே முளைத்திருந்தன.

www.padippakam.com

# 21

வேலை முடிந்தபோது நிலவு உச்சிக்கு வந்துவிட்டது. வெய்யிலிலேயே பெரும்பாலும் வேலை செய்து பழக்கப்பட்டவர்களுக்கு இரவில் குளுமையும் இதமான மெல்லிய காற்றும் களைப்பை மறைத்தன.

வேலை முடிந்ததும் யாவரும் அம்பலவாணரின் வீட்டுக்கே சென்றனர்.

பலவீனத்தோடு படுத்திருந்தபோதும் அம்பலவாணர் எழுந்துவந்து முதலில் முத்துவேலுவை கட்டி அணைத்தார். அவருக்கு கண்களில் நீரே அரும்பிவிட்டது. நெஞ்சு அடைத்து வார்ந்தைகளே வெளிவரவில்லை.

''உங்களுக்கு உடம்பு நல்லாயில்லை. போய்த் தூங்குங்சோ.''

முத்துவேலு அவரின் தோள்களைப் பிடித்து நிமிர்த்திச் சொன்னான்.

அம்பலவாணரால் பேசவே முடியவில்லை. தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திச் சமாளிக்க முயன்றார். முடியவில்லை. நெஞ்சு அடைத்துக்கொள்ள விம்மினார். பின் அப்படியே உட்கார்ந்துவிட்டார். அவரை எழுந்து சென்று படுக்கும்படி மூர்த்தியும் அருகே சென்று வற்புறுத்தினான்.

''நான் நித்திரைகொண்டு எத்தனையோ நாளாகிவிட்டது. இப்போது மட்டும் தூங்காவிட்டால்...''

அதன்மேல் அவரால் சிறிது நேரம் பேசவே முடியவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



''நான்தான் முட்டாள்; பெரிய மடையன். கடவுள் என்னையே மன்னிக்கமாட்டார். உங்களையெல்லாம் பொல் லாதவங்கள், கொலைகாரர் என்றெல்லாம் நினைச்சிருந் தன். எத்தனை பெரிய தவறு. நீங்கள் தெய்வம்போலை வந்து என்ரை கவலையெல்லாத்தையும் ஒரு இரவிலையே போக்கிவிட்டீங்கள். உங்களுக்கு நான் என்ன கைமாறு செய்யப் போறன்...''

அம்பலவாணர் மீண்டும் சொல்லிக்கொண்டேயிருந்தார்.

பொன்னாச்சியும் பவளமும் கதிர்ப்பாய் ஒன்றைக் கொண்டுவந்து முற்றத்தில் விரித்து விட்டனர். உச்சி நிலவு வெளிச்சத்தில் யாவருக்கும் இலை போடப்பட்டது. பொன்னாச்சியும் பவளமும் சாப்பாடு பரிமாறினர்.

அவர்கள் உண்பதை வாஞ்சையோடு அம்பலவாணர் பார்த்துக் கொண்டிருந்தார்.

சாப்பிட்டு எழுந்ததும் மூர்த்தியும் மாதவனும் அம்பல வாணரை எழுந்திருக்கச் செய்து அழைத்துச் சென்று படுக்கையில் விட்டனர். மாதவனைக் கூர்ந்து பார்த்து அம்பலவாணர் சொன்னார்.

''இந்தத் தம்பியை ஆரெண்டு தெரியேல்லை, புதுமுக மாயிருக்கு''

''நானும் ஒரு பயங்கரமான கொலைகாரரைச் சேர்ந் தவன். இப்ப புதிசாய் இங்கை வந்திருக்கிறன்''

மாதவன் சாவதானமாகச் சொன்னான்.

''எனக்குப்புத்தி வந்திட்டுது. அப்பிடியெல்லாம் இனி மேல் சொல்லி என்னைப் பரிகசிக்க வேண்டாம் தம்பி''

''உண்மையாய் நான் கொலைகாரன் என்று பொலிஸ் விறாந்து, ஓடி இங்கை வந்து ஒளிச்சிருக்கிறன்''

www.padippakam.com



''உன்ரை முகத்தைப் பார்த்தால் தம்பி, கடவுள்தான் வந்து 'நீ கொலைசெய்தாய்' என்றாலும் நான் நம்ப மாட்டன்''

அம்பலவாணர் மெல்லிய குரலில் சொன்னார். மாதவனின் கூரிய விழிகளை அவர் அடிக்கடி பார்த்தார். அவனது புன்னகை அவரை மயக்கியது.

மாதவன் அவர் வார்த்தைகளைப் பொருட்படுத்தாதவனாக அவரிடம் விடைபெற்றுவிட்டுத் திரும்பும்போது சொன்னான்:

''உடையான் மாடுகளை விட்டே உங்கடை பயிரை அழிச்சும் போடுவான். இல்லாட்டால் வீட்டுக்கே நெருப்பு வைப்பான். இனிமேல்தான் நீங்கள் கவனமாயிருக்க வேணும்''

''இனிமேல் அவன் செய்து பார்க்கட்டன், நானே அவனைக் கொலை செய்துபோட்டு தூக்குக்குப் போறன்''

அம்பலவாணரின் குரலில் வேகமும் ஆத்திரமும் தொனித்தது.

''அப்பிடியான துணிச்சல் வாதம் பயன்தராது. உங்களுடைய உண்மையான நண்பர்கள் யார்? எதிரிகள் யார்?' என்பதை சரியாக அறிந்திருந்தாலே போதும். நீங்கள் அவசரப்பட்டு எதுவும் செய்யவேண்டியதில்லை. ஒன்றை மட்டும் நம்புங்கள், உங்கள் உண்மையான நண்பர்கள் எந்தத் துன்பத்தின்போதும் உங்களைக் கைவிட மாட்டார்கள்''

மாதவன் சொன்னான்.

''தம்பி நீ உண்மையை சரியாய் சொல்லுகிறாய். உன்னோடை கனக்கப் பேசவேணும். எங்கே தங்கியிருக்கிறாய்? இங்கே நேரமிருக்கும்பொழுது ஒருக்கால் வந்து போவியா?''

''ஒருக்கால் என்ன, இங்கேயே ஒரு நாள் பகல், இரவெல்லாம் தங்கவே வந்து விடுகிறேனே''

மாதவன் சொல்லிவிட்டு விடைபெற்றான்.

www.padippakam.com

# 22

அரசங்குடிக் கிராமத்தில் பல விஷயங்கள் தன் திட்டத்திற்கு முரண்பாடாக நிகழ்வதை நடராச பிள்ளையால் விரைவிலேயே அறிந்துகொள்ள முடிந்தது. ஆரம்பத்தில் சிறு விஷயம்தானே என விட்டவை வளர்ந்து வருவதைக் கண்டார். நாடாளுமன்றத் தேர்தல் வேறு விரையில் வர இருந்தது. அதற்கும் கிராமத்தவரின் வாக்குச் சீட்டுகள் தன் கையில் இருக்கவேண்டும். இடையில் குழப்பிக் கெடுத்து விடப் படாது என்று மனதைச் சாந்தப்படுத்திக் கொண்டார்.

தன் கையாட்கள் மூலம் மாற்றத்தின் காரணத்தையும் ஓரளவு அறிந்துகொண்டார்.

தன் நண்பர்கள் என நம்பியிருந்த சிலரின் செயல்கள், பார்வை யாவும் மாறியிருப்பதையும் கண்டு சினங் கொண்டார்.

தேர்தலின்போது வேண்டுமானால் காசும் சாராயமும் கொடுத்தால் போகுது. இப்பொழுதும் ஒரு கை பார்க்க வேண்டும் எனவும் முடிவு கட்டினார்.

பழையவிதானையார் கந்தையா, விவசாயக் கமிட்டித் தலைவர் தர்மலிங்கம் ஆகியோரிடமும் கலந்து பேசினார்.

கிட்டிய பொலிஸ் நிலையம் பன்னிரண்டு மைல்களுக் கப்பால் இருந்தது. அவர்கள் தக்க ஆதாரமான செய்தி இல்லாவிடின் வரமாட்டார்கள் என்பதை அவர் அறிவார். வந்து ஏமாந்தால் புலி, புலியென்று புலி வரும் வேளை பயன்படாதும் போகலாம் என்று தன் வீட்டில்

படிப்பகம்

www.padippakam.com



விருந்து. முயல் வேட்டை என்று இன்ஸ்பெக்டரையும் சில பொலிஸ்காரரையும் வரவழைத்தார்.

பொழுதுபோக்கு, விருந்து, போத்தல் யாவும் முடிவுறும் மகிழ்ச்சியான வேளையிலேயே கிராமத்துச் செய்திகளை நடராச பிள்ளை பொலிசாரிடம் சொன்னார்.

''என்ன உடையார் இதையெல்லாம் அப்பவே சொல்லியிருக்கலாமே. இந்தக் கொலைக்காரனை நாங்களே தேடித் திரிகிறோமே. ஒரு கல்லிலே இரண்டு குருவி, இப்பவே அறெஸ்ட் பண்ணுறோமே. உங்களுக்கு ஒரு ரிவார்ட் வாங்கித் தருவோமே''

இன்ஸ்பெக்டர் சொன்னான். உடனே யாவரும் புறப்பட்டனர். உடையார் வீட்டிலேயே தங்கிவிட்டார். அவர் தேடவேண்டிய குடிசைகள் பற்றியெல்லாம் விபரம் கொடுத்தார். தன் கையாளில் ஒருவனை துணையாகவும் அனுப்பினார்.

பொலிசார் வளைந்து வந்து குடிசை குடிசையாக நுழைந்து தேடினர்.

''எங்கே அவன்? மாதவன் என்ற கள்ளப் பெயரோடு ஒளிந்திருப்பவன்''

ஒவ்வொரு குடிசையிலும் அதட்டி வெருட்டினர்.

யாவரும் பொலிசாரை வெறுப்போடு தமது எதிரிகளைக் காண்பதுபோல் பார்த்தனர். வெறுப்புணர்ச்சியின் கனல் யாவர் கண்களிலும் விசியது. மதுவெறியில் நின்ற பொலிசாருக்கே அவர்களது பார்வை ஓரளவு அச்சமும் தந்தது. ஆயினும் தமது குரலை அதிகாரத்தோடு எழுப்பினர்.

பவளத்தின் குடிசை வாசலில் தியாகன் நின்றான்.

''எங்கே அவன்?''

www.padippakam.com



''யாரைக் கேட்கிறாய்?''

''அந்தக் கொலைக்காரன்''

''இங்கே அப்படி ஒருத்தருமில்லை, உடையானைத் தவிர''

''என்ன சொன்னாய்?''

இன்ஸ்பெக்டர் உறுமினான்.

பொலிசார் பவளத்தின் குடிசையின் உள்ளே தேட நுழைந்தனர்.

''ஆளைத்தேட அரெஸ்டு வாரண்டு ஏதாவது இருக்கா? காட்டிவிட்டு உள்ளே போ''

தியாகன் சட்டம் பேசினான்.

அவனது கையை ஒரு பொலிஸ்காரன் பின்புறமாக வளைத்து முன்னே தள்ளிக்கொண்டுபோய் வேட்டையாடிய முயல்களோடு ஜீப்பிலே ஏற்றினான். பவளம் ஒரு உலக்கையை எடுத்துக்கொண்டு ஓடினாள். பின்புலமாக வந்த பொலிஸ்காரன் ஓடிச்சென்று அவளைத் தள்ளிவிட்டான். விழுந்த பவளம் எழுவதற்கிடையில் ஜீப் புறப்பட்டுவிட்டது.

சந்திரன் ஓடிவந்து ஒரு கல்லை எடுத்து ஜீப்பை நோக்கி எறிந்தான்.

செல்லத்தம்பி அப்போது வீட்டில் இல்லை.

மறுநாள் மாலையில் அடியும் உதையும் வாங்கிய நோவுடன் தியாகன் வந்து சேர்ந்தான். தன் நோவையும் வலியையும் மறைத்துப் பேச முயன்றான். முடியவில்லை. சிரிக்க முயன்றபோதும் நாடிப்பக்கம் வலித்தது.

தன்னை அணைத்தும் பின்னர் அடித்தும் மாதவனைப் பற்றிய செய்திகளை அறிய முயன்றது பற்றியெல்லாம் தியாகன் சொன்னான். நகக் கண்களிடையே ஊசிகளைக் குத்திய

படிப்பகம்

www.padippakam.com



காயங்களைக் காட்டினான். கொச்சி மிளகாய் பட்டு எரிந்த நாவையும் காட்டினான்.

தியாகனைப் படுக்கச் செய்து விங்கிய இடங்களில் வெந்நீர் ஒத்தடம் கொடுத்து வலித்த இடங்களில் நோ எண்ணெய் போட்டு உருவினர்,

மாதவனே முன்னின்று யாவையும் கவனித்தான். முதல் நாள் பொலிசாரின் முயல் வேட்டை, விருந்து பற்றி அறிந்ததுமே அவன் மறைவிடம் தேடியிருந்தான்.

அன்றிரவு நடராசபிள்ளையின் விழிப்புப் பற்றியும் அவர் தொடர்ந்து எடுக்கக்கூடிய நடவடிக்கைகள். போலிசார் செய்யக்கூடிய கொடுமைகள் பற்றியெல்லாம் ஆராய்ந்தனர். அவற்றிற்கு தாங்கள் எடுக்கவேண்டிய பதில் நடவடிக்கை பற்றியும் கலந்து பேசினர்.

## 23

வீடுமுறையின் போது அம்பலவாணரின் மகன் சிவபாலன் வந்திருந்தான். தந்தையும் தாயும் கூறிய செய்திகளைக் கேட்டு அவன் அன்றிரவு துரைரத்தினத்தின் குடிசைக்கு வந்திருந்தான். அவனை தியாகன் மாதவனுக்கு அறிமுகப்படுத்தினான்.

தன் வீட்டுக்குச் செய்த உதவிகளுக்காக சிவபாலன் நன்றி கூறினான்.

''யூனிவ்சிட்டியில் என்ன படிக்கிறாய் தம்பி?''

''பைனல் இயர்''

''ஆர்ட்சா, சயன்சா?''

www.padippakam.com



''ஆர்ட்ஸ்''

''படித்து முடித்து விட்டு என்ன செய்யப் போறீர்?''

மாதவன் கேள்விக்கு எதுவும் சொல்லாமல் சிவபாலன் மௌனமாயிருந்தான்.

''வேலையில்லாத பட்டதாரி என்ற புதுப்பட்டம். அப்பிடித்தானே''

மாதவன் சொன்னான்.

''வேலை கிடைச்சால்...''

துரைரத்தினம் சொன்னான்.

''கிராமத்தையே மறந்திடுவார். பிறகு சீதனத்தோடு ஒருபெண். பாவனைப் பொருட்கள், வீடு தேடும் படலம். பாங்கில் கடன் பெற்று ஒரு வீடு. கடனுக்காக உழைச்சி பாங்குக்கு கட்டறது...அதே வாய்ப்பாடு வாழ்க்கை, அப்பிடித்தானே.''

மாதவன் நளினத்தோடு சொன்னான்.

''ஏன் அப்பிடியெல்லாம் கணிக்கிறீர்கள். நானும் அங்கை இடதுசாரி இயக்கத்திலைதான் சேர்ந்திருக்கிறன்''

''எந்த இடதுசாரி? தாடி இயக்கம், தீவிர வாதம்''

''ஏன் அப்பிடியெல்லாம் பேசுகிறீங்க. நான் படிப்பு முடிஞ்சதும் உங்களோண்டைதான் சேரப்போறன்''

''நல்லதாச்சே''

தியாகன் சிரித்தான்.

''படிப்பு முடிஞ்சால் சேரமாட்டாய் தம்பி. வேலை தேடத் தொடங்கிவிடுவாய். வாறதெண்டால் இப்பவே வா. இங்கை கிராமத்திலேயே எத்தனை வேலையிருக்கு. உங்க நிலத்தையே உடையான் பறிக்கப் பார்க்கிறான். தியாகுவைப் பார்: அவனும் பரீட்சை எழுதாது வந்ததால் தான் இப்போது எங்களுக்கெல்லாம் பயன்படுகிறான்''

www.padippakam.com



மூர்த்தி சொன்னான்.

''நீ படிச்சிட்டு வாறதற்கிடையிலை கட்டாயம் நிலத்தை அவன் பறிச்சுப் போடுவான். உன்ரை அப்பாவுக்கு நிலம்தான் உயிர். அவர் அந்த நினைவிலையே போய் விடுவார். இப்பவே நீ படிக்க எப்பிடித்தான் காசு அனுப்பிறாரோ தெரியாது. அங்கை தாற தர்மக்காசு படிக்கப் போதுமா?''

தியாகன் கேட்டான். சிவபாலனின் சிந்தனை குழம்பிக் கொண்டிருந்தது.

''தம்பி பாவம். தம்பியின் மூளையைப் போட்டு ஒருமிக்க எல்லாரும் குழப்ப வேண்டாம் விடுதலை இரண்டு மூன்று கிழமையென்றாலும் இருக்குந்தானே. ஆறுதலாய் யோசிக்கட்டும். வேறை விஷயம் பேசுவம்''

துரைரத்தினம் சிவபாலனுக்கு ஆதரவு கொடுத்தான்.

மாதவன் வெள்ளைக்காரன் நிலைநாட்டிய கல்விமுறை எவ்வாறு இன்றும் ஏகாதிபத்தியத்திற்குச் சேவை செய்யப் பயன்படுகிறது என்பதை விரிவாக விளக்கினான்.

துரைரத்தினத்தின் குடிசை சிறிதானாலும் முன்புறத்தில் உயர்ந்த பத்தி இறக்கி மூன்று புறமும் வாங்குபோல குந்து கட்டியிருந்தான். அது அவன் கட்டிய மூன்றாவது குடிசை. முதலிரண்டையும் உடையான் கையாட்கள் எரித்து விட்டனர். கூரையின் குறுக்குத் தடிகளில் பல, பாதி எரிந்திருந்தன.

அவனுக்கு மூன்று வளர்ந்த பெண்களும் ஒரு பையனும். மூத்த பெண் தாயோடு சேர்ந்து குசினிக்குள் சமைத்துக் கொண்டிருந்தாள். மற்ற இருவரும் முற்றத்தில் நின்று அவர்கள் உரையாடுவதை வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றனர்.

www.padippakam.com

# 24

தேர்தலிலை யாருக்கு வெற்றி கிடைக்குமென்று அங்கை பேசிறாங்கள்''

மாதவன் சிவபாலனைக் கேட்டான்.

''ஐக்கிய தேசீயக் கட்சிதான் மீண்டும் வரலாமாம்''

சிவபாலன் சொன்னான்.

''உதுதானே பத்திரிகைச் செய்தி. நாள்தோறும் படிக்கிறமே. கழிந்த ஐந்து வருடத்திலை நாட்டின் பாதியைத் தான் ஈடு வைச்சாங்கள். அடுத்த ஐந்து வருடமும் ஆள்வதானால் முழுவதையுமே ஈடுவைத்து முடித்துவிடப் போறாங்களே''

''யூனிவசிட்டியிலை இடதுசாரிக் கட்சிகளுக்குத்தான் ஆதரவு''

''அவங்களுக்கு வோட்டு இல்லாமலிருக்கும்''

மூர்த்தி கேலியாகச் சொன்னான்.

''இதே ஆட்சி மீண்டும் வந்தால் உடையான்பாடு மீண்டும் வேட்டைதான். பசுமைப் புரட்சியின் அடுத்த கட்டம் தொடங்கிவிடும்''

தியாகன் சொன்னான்.

''உடையான் இன்னும் இரண்டு டிராக்டர், நாலு லொறி கடனிலை வாங்கி விடுவான். யு. என். பி. அரசே தரகர்தானே. வெளி நாட்டில் விற்க முடியாத பொருட்களுக்கெல்லாம இங்கே தேவையை ஏற்படுத்தி மார்க்கெட் தேடிக் கொடுக்கிறார்கள். கடன் என்ற பெயரில் எல்லாம் வந்து குவியும். எங்கடை தேயிலையையும் ரப்பரையும் வாங்கும்

www.padippakam.com



பொருட்களுக்காக கண்டிப்பாக இருந்து இவர்களுக்கு விற்கத் தெரியாது''

மாதவன் சொன்னான்.

''இடதுசாரி கூட்டாட்சி வந்தால் ஈடுவைப்பது நின்று எமக்கெல்லாம் நன்மை வரும் என்பது மட்டும் என்ன உறுதி?''

தியாகு கேட்டான்.

''இரண்டுமே எங்கள் பிரச்சனையைத் தீர்க்கப் போவதில்லை. நாம்தான் போராடி எம் கையில் அரசியல் ஆதிக்கத்தைத் தேடிக்கொள்ள வேண்டும்''

மாதவன் கூறினான்.

''என். பி. வந்தால் புது மொடல்காரெல்லாம் இறக்குமதி செய்ய விடுவார்கள். அமெரிக்காபோலை நாட்டிலை செல்வம் கொண்டு வருவார்கள் என்று உடையான் பாடசாலையிலை வாத்திமாருக்குச் சொன்னானாம்''

மூர்த்தி சொன்னான்.

''அவங்களெல்லாம் அமெரிக்காவைப் பார்த்துக் கும்பிட்டு வாழுபவர்கள் தானே. எங்களுக்கெல்லாம் காரா வேண்டும். வசதியாக மலிவாக வேண்டிய இடத்திற்கு கூடிய விரைவில் சென்று திரும்புவதற்கேற்ற பொதுப் போக்குவரத்தெல்லா மக்களுக்குத் தேவை. அமெரிக்காவிலையே எத்தனை வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் நிலவுது என்பதைப் பற்றி எவனும் பேசமாட்டாங்கள். மனிதர்களுக்கு வசதியாக வாழ வீடில்லை. காரை உற்பத்தி செய்துவிட்டு ஆசை காட்டி லாபம் சேர்க்க முதலாளிகள் விற்கிறாங்கள். காரை நிறுத்த ஓடத் தெரு போதாது. வாரந்தோறும் கார் விபத்தில் ஆயிரக் கணக்கில் சாகிறார்கள். அதைப் பற்றியெல்லாம் உற்பத்தி செய்பவர்கள் கவலைப்படுவதில்லை, வியத்நாமிலை குண்டு போட்டு மக்களைக் கொல்வது பற்றியோ, தம் நாட்டவரே விமானம் சுட்டு வீழ்த்து

ம—6

www.padippakam.com



சாவதைப் பற்றியோ, அவர்களுக்கெல்லாம் கவ்லையில்லை. அழிந்தால் மீண்டும் போர்த்தளவாடங்களை உற்பத்தி செய்து லாபம் சேர்க்கலாம் என்று ஒரு கூட்டம் அரசையே தன்கையில் போட்டு வைத்திருக்கிறது. அரசியல் அதிகாரமே யுத்த தளவாடங்களை உற்பத்தி செய்பவர்கள் கையில்தான் அங்கு இருக்கிறது. அவற்றில் கிடைக்கும் லாபம் உணவுப் பொருட்களையோ வேறு பாவனைப் பொருட்களையோ உற்பத்தி செய்வதில் கிடைக்கமாட்டாது. அதனால்தான் அவர்கள் கொலை செய்வதையே தொழிலாக்கிக் கொண்டிருக்கிறார்கள்''

மாதவன் உணர்ச்சியோடும் ஆத்திரத்தோடும் சொன்னான். அவன் பேச்சை யாவரும் ஆர்வத்தோடு கேட்டுக் கொண்டிருந்தனர். தனியார் கையில் அகப்படும் மூலதனத்தால் ஏற்படும் கொடுமைகளை யாவரும் உணர்ந்தனர். உடையான் கையில் நிலமும் பணமும் டிராக்டர்களும் குவிந்திருப்பதால் தமக்கு நாள்தோறும் ஏற்பட்டு வரும் சிறுமையையும் எண்ணிக் கொண்டனர்.

ஆளுக்கு ஒரு கார் என்ற கண்மூடித்தன்மான பேராசையின் விளைவுகளையும் சிந்தித்துப் பார்த்தனர். மாதவன் இந்த முடிவில்லாத ஆசை பற்றியும் அதனுள் மறைந்திருக்கும் சுரண்டலின் கொடுமை பற்றியும் எளிதாகப் புரியும்படி சொன்னான் டிராக்டரின் இறக்குமதி அதனுள் மறைந்திருக்கும் பொருளாதாரச் சுரண்டல்களை அவர்களது கிராமத்து அனுபவங்கள் மூலமாகவே விளக்கிக் கூறினான்.

## 25

தன் ஆதிக்கத்தை மிஞ்சி கிராமத்தில் விஷயங்கள் நடைபெறுவதை நடராசபிள்ளை நன்கு உணர்ந்தார். விவசாயிகளை பிரித்து வைத்து மேசதவிட்டுப் பார்த்தார்.

www.padippakam.com



அத் தந்திரம் நீண்டநாள் பலிக்கவில்லை. தான் மோதவிடும் கையாட்களே தமக்கு அறிவுரை கூற வருவதை அவரால் தாங்க முடியவில்லை.

அறுவடைவேளை கூலித் தகராறு வந்தது. வெளியூரி லிருந்து அவர் கொண்டு வந்த கூலியாட்களும் மறுநாளே ஓடி விட்டனர். கூலியைக் குறைக்க அறுத்த நெல்லை போராகக் குவித்து வைப்போமா என்றும் சிந்தித்தார்.

'திருட்டுப் போய்விடும், யானை வந்து விடும்' என்றெல் லாம் பழைய விதானையார் கந்தையா எச்சரித்தார்.

இத்தடவை போகட்டும், மறுதடவை கூலிகளுக்கெல் லாம் பாடம் படிப்பிக்க வேண்டும் என்று அவர் மனம் எரிந்தது.

''அறுவடை செய்து போரடித்து நெல்லை வேறாகப் பிரிக்கும் ஒரு யந்திரத்தை அமெரிக்காவிலிருந்து வர வழைத்து இவர்கள் கொட்டமெல்லாவற்றையும் அடக்க வேண்டும்''

நடராசபிள்ளை கந்தையாவிடம் தன் மனக்கொதிப்பைக் கூறினார்.

' அரசாங்கத்தால் 'விவசாய மன்னன்' என்ற பட்டமே வழங்கப்பட்ட நீங்கள் மந்திரியைக் கேட்டால் காசில்லாமல் கடனாகவே மெஷின் வந்து விடுமே. எங்களுக்கும் ஆபத் துக்கு உதவியாயிருக்கும்''

பழைய விதானை கந்தையா, உடையாரை உயர்த் தினார்.

' மந்திரியென்ன பிரதம்மரையே என்னால் பிடிக்க முடியும். தேர்தல் வருகுதெல்லே''

''கிராமத்து வோட்டெல்லாம் உங்கள் கையில் என்று சொல்லுவியள் போலையிருக்கு''

''சொல்லுறதென்ன வாங்கியே கொடுப்பனே. இதாலை தான் இந்தக் கூலிப் பிரச்சனையிலைகூடப் பேசாமலிருக் கிறன்''

www.padippakam.com



நடராசபிள்ளை தன் கைத்தடியை நிலத்தில் ஊன்றிய படி சொன்னார்.

''நீங்கள் உவங்க்ளை எதிர்த்துப் பேசாமல் இருக்கிற தாலை நாங்களும் நட்டப்பட வேண்டியிருக்கு''

எல்லாம் இன்னும் இரண்டு மாதத்துக்குத்தானே. பிறகு பாரன் உவங்கடை கொழுப்பெல்லாம் அடக்கிறன். கிட்டவே ஒரு பொலிஸ்ரேசனே கொண்டுவந்து போட ஏற்பாடு செய் யிறனோ இல்லையோ பார்''

''நல்ல யோசினை உடையார் விட்டிடாதையுங்கோ''

''இப்ப வளர்ந்து வாற நிலைமைகளைப் பார்த்து இரவு பகலாய் எனக்கு இதுதானே சிந்தனை. காவல்காரர் பெயர் களிலையெல்லாம் லைசென்ஸ் பெற்று துப்பாக்கி வாங்கி வைச்சிருக்கிறன்''

''ஆட்களெல்லாம் நம்பிக்கையானவங்களா?''

''நம்பிற மாதிரித்தான் காட்டிக் கொள்ளுறேன். வேறே என்ன செய்யிறது. முத்துவேலன்ரை காந்தன்கூட ஒரு காவல்காரனென்றால் பிறகு பாரன். எண்டாலும் நான் விழிப்பாய்தான் இருக்கிறன். அவங்கள்ளை வேண்டின நேரம் பணிய வைக்கிறதுக்காகத்தான் அவனுக்கும் காவல்வேலை கொடுத்து வைச்சிருக்கிறன்''

''அப்ப இரவிலை நித்திரையே இல்லைப் போலிருக்கு''

கந்தையா நளினமாகச் சொன்னார்.

''நித்திரை குறைவுதான். இத்தனையையும் கட்டி ஆளுறதெண்டால் சும்மாவா? அதுதான் வேண்டின நேரம் நித்திரை கொள்ள மாத்திரை வாங்கி வைச்சிருக்கிறேனே''

www.padippakam.com

# 26

மாதவன் கிராமத்தில் தாராளமாக விவசாயிகளுடன் சேர்ந்து நடமாடினான். அரை உடைமை விவசாயிகள், வறிய விவசாயிகள், கூலி விவசாயிகள் யாவரையும் ஒற்றுமைப் படுத்தினான். அறுவடையின்போது உதவி தேவைப் பட்ட விவசாயிகளுக்கு ஓய்வுள்ள வேளை யாவரும் ஒன்று திரண்டு உதவினர். முத்துவேலுவைத் தலைமையாக வைத்து உதவி வேண்டியோருக்கு உதவுவதை மாதவன் கவனித்தான்.

நடராசபிள்ளையும் சும்மா இருந்துவிடவில்லை. மாதவன் மேல் பலதடவை குறிவைத்து அம்பு எய்தார். ஆனால் ஒவ்வொரு தடவையும் ஏமாற்றமே ஏற்பட்டது; அதுமட்டுவல்ல, அதே அம்புகள் அவருக்கு எதிராகவும் பாய்ந்தன. அவ்வேளைகளில் தன் காலில் தானே தவறுதலாகக்கல்லைத் தூக்கிப்போட்டு விட்டேனோ என்றும் கவலைப்பட்டார். மறுகணம் கவலை சீற்றமாகவும் பழிவாங்கும் வெறியாகவும் மாறியது.

கிராமத்தில் குடிசைகள் பரவலாக இருந்தன. மாதவன் நாளுக்கு ஒரு குடிசையாகத் தங்குவதால் உடையாரோ, பொலிசாரோ தாம் தாக்கும் நாள் அவன் எந்தக் குடிசையில் தங்கியிருப்பான் என்பதை கணிக்க முடியவில்லை. தம் குடிசையில் ஒரிரவு தங்க அழைத்தவர்களும் அவனைக் காப்பாற்றத் தம் உயிரையே கொடுக்கவும் தயாராயினர். விவசாயிகளின் குடிசைகள் மிகவும் பரவலாக இருந்ததால் பொலிசாரால் கிராமம் முழுவதையுமே வட்டமாக முற்றுகையிட்டு மாதவனைக் கைது செய்ய முயலவும் முடியவில்லை.

# 27

அறுவடை காலம் முடிந்தது. உடலை வருத்தியதன் பயனாக ஏதோ கூலி கிடைத்தது. வயிற்றை நிரப்பியபின் எஞ்சிய சில ரூபாக்கள் விவசாயிகளின் கைகளில் புரண்டன. கடன்காரன், சில்லரைக் கடைக்காரன் மற்றும் சுரண்டல்காரர் ஆகிய வல்லூறுகள் பெரும் பகுதி பணத்தைப் பிடுங்கின. கடின உழைப்பால் உடலில் எடை குறைந்த அளவிற்கு ஓய்வுகாலத்தில் உணவு உண்டு இழந்த எடையை நிவிர்த்தி செய்ய முடியவில்லை.

இரவில் பனி. பகலில் வெப்பம். கூலி வேலையே கிடைப்பது அரிதாயிருந்தது. உள்ளவர்களிடம் இல்லாதவர் கடன் வாங்குவது. இதுவும் சில வாரமே. அதன்பின் சிறுபோக உழைப்பை நம்பி கடன். பழைய வல்லூறுகள் 'எங்காவது ஓடியாவிடப் போகிறார்கள்; வட்டிக்கு வட்டியாக முதலை முன்னரே பெற்றுவிட்டோம். இப்போது முன்பெற்ற வட்டியில் கடன் கொடுப்போம்' என்ற நெஞ்சோடு. வெளியே இரக்கம் காட்டிக்கொடுப்பதாக நடித்துக் காட்டிக் கடன் கொடுத்தனர்.

கிராமத்துப் போராட்டம் யாவும் உணவோடுதான். அதன்மேல் எவ்வித செலவுக்கும் வழியில்லை.

நிலம் வானத்தைப் பார்த்து ஏமாந்து வெப்பத்தால் பிளவுபடத் தொடங்கியது.

சிறுபோகத்திற்கு தண்ணீர் கட்டுப்பாடு; நடராச பிள்ளைக்கே பெரும்பங்கு. ஆயினும் அவருக்குத் திருப்தி யில்லை. யந்திரங்களுக்கெல்லாம் போதிய வேலை வேண்டுமே என்று அங்கலாய்த்தார்.

www.padippakam.com



தண்ணீர் உரிமை பெற்ற பிறர் நிலங்களுக்குப்பேரம் பேசினார்.

கிராம மக்கள் எதிர்பார்த்தளவிற்கு கூலி வேலையில்லை.

அரை உடைமை விவசாயிகளும் ஏழை விவசாயிகளும் கிணற்று நீரை நம்பிய அளவிற்கு மாற்றுப் பயிர் செய்ய முயன்றனர். உரத்திற்கு பணமில்லை. நிலத்தைச் சுரண்டிக்கொண்டேயிருந்ததால் பட்ட கஷ்டத்திற்கு ஏதேன் பயன் கிடைக்கும் என்ற நம்பிக்கை.

சிறுபோக அறுவடைக்கு முன்னர் தேர்தல் வருவதை நடராச பிள்ளை வாய்ப்பாகக் கருதினார். தேசீய அரசாங்கத்தை ஆதரிக்கும் வேட்பாளரின் வெற்றிக்கு அவரும் உறுதி கூறியிருந்தார்.

'விவசாய மன்னன்' என்ற விருது வழங்கிய அரசு மீண்டும் வராவிடில் பட்டம் போய்விடுமே எனவும் அஞ்சினார். டிராக்டர்கள், லொறி, ஜீப் யாவும் தமக்குத் தந்த அரசைக் காப்பாற்றுவது தன் கடமை எனவும் கருதினார்.

தமது வேட்பாளரை அழைத்துக்கொண்டு கிராமத்தில் தன் கையாட்கள் வீடெல்லாம் சென்றார்.

''நான் அவர்கள் வீடு தேடிப்போய் கேட்டதற்காகப் போடுவார்கள்' என்று அவர் கருதிய குடிசைகளுக்கும் அழைத்துச் சென்றார். தன்னை அவமதிக்கலாம் என்று எண்ணிய குடிசைகளை விட்டுவிட்டார்.

பவளத்தின் வீட்டு முற்றம் மிதிக்க அவர் மனம் குறுகுறுத்தது. மூர்த்தி, துரைரத்தினம் வீடுகளையும் ஒதுக்கி விட்டார்.

காந்தன் தன் காவல்காரனாக இருப்பதால் உரிமையோடும் நம்பிக்கையோடும் முத்துவேலுவின் குடிலுக்குச் சென்றார். முத்துவேலு எழுந்து வெளியே வந்தான்.

www.padippakam.com



''என்ன உடையார், வோட்டுக்கு வந்திருக்கிறீர்கள் போலியிருக்கு. அஞ்சு வருஷத்துக்கு முந்தியும் ஒரு தடவை எங்க முத்தம் மிதித்த நினைவு...''

முத்துவேலு கேலியாகச் சொன்னான்.

''முத்துவேலு, உன்ரை நளினம் எல்லாம் எங்களுக்கு வேண்டாம். இந்த நாட்டிலை ஜனநாயகம் வேண்டுமெண்டால் இவருக்கு உங்கடை வோட்டுகளைப் போடு. இல்லாவிட்டால் பிறகு நீங்களே கவலைப்படுவியள்.''

நடராசபிள்ளை உணர்வோடு சொன்னார்.

''ஜனநாயகம் எண்டால் என்ன எண்டு எனக்குக் கொஞ்சம் சொல்லுங்கோ உடையார்...''

முத்துவேலு சொன்னான்.

''சொன்னாலும் உனக்கெல்லாம் எங்கை விளங்கப் போகுது. ஐக்கிய தேசீயக் கட்சி வராவிட்டால் பேச்சுச் சுதந்திரம், வோட்டுப் போடுற சுதந்திரம் எல்லாமே இல்லாமல் போய்விடும்...''

''உதையெல்லாம் நீங்களே வைத்துக்கொள்ளுங்கோ, எங்களுக்கு வயித்தை கவலையில்லாமல் நிரப்புற சுதந்திரம் வந்தாலே போதும்...''

''ஏன், இப்ப உனக்கு அந்தச் சுதந்திரம் இல்லையா?''

''எங்கை கிடக்குது. வருஷம் வருஷமாய் அந்தச் சுதந்திரம் குறைந்துகொண்டு போகுது.''

''ஏன் அப்பிடிப் பொய் சொல்லுகிறாய். கஷ்டப்பட்டால் எல்லாம் கிடைக்கும்...''

''நாங்கதானே கஷ்டப்படுறமே, கூலி வேலை செய்தும் கஷ்டப்படுறம். வேலையில்லாமலும் கஷ்டப்படுறம். உனக்குத் தானே கஷ்டப்படாமலே எல்லாச் சுதந்திரமும் கிடைக்குதே. ஓடித் திரிய ஜீப், பெரிய வீடு, வெள்ளை உடுப்பு...சுதந்திரம் வளர்ந்து வருகுது.''

www.padippakam.com



''நீ பொறாமையிலை பேசுறாய்''

''ஓம் பொறாமையிலைதான் பேசிறன். எங்களைப் போல வியர்வை சிந்தி கஷ்டப்படாமல் உனக்கு மட்டும் இதெல்லாம் எப்பிடிகிடைச்சது எண்டுதான் எங்கடை மனம் எரியுது. தேர்தல் வந்து ஐந்து வருஷத்திலை நீ எவ்வளவு பலமாய் வளந்திட்டாய். நாங்கள் இன்னும் தேய்ஞ்சு கொண்டே போறம். ஏன் எண்டு இப்பதான் தெரியுது. நாங்கள் இந்த வோட்டை நம்பி எல்லாம் வரும் என்று இருந் திட்டம். அரசியல் அதிகாரம் உன் கையில் வளர்ந்து வருகுது இனிமேல் நாங்கள் இந்த வோட்டையே நம்பப் போவதில்லை.''

முத்துவேலு ஆத்திரத்தோடு சொன்னான். தன்னை வேட்பாளர் முன்னிலையில் முத்துவேலு அவமதித்துவிட்ட தாகவே நடராச பிள்ளை எண்ணினார்.

''ஜனநாயகம், வோட்டுப் போடுவதன் மகத்துவம்பற்றி அறியாத அவர்களோடு என்ன பேச்சு. வாருங்க உடை யார்.''

வேட்பாளர் மேலும் விவாதம் தொடராமல் நடராச பிள்ளையின் கையைப் பிடித்துக்கொண்டு நடந்தார்.

''வோட்டுரிமையின் மகத்துவம் தெரியாதவர்களுக் கெல்லாம் வோட்டுரிமை கொடுத்ததுதான் தவறு''

நடராச பிள்ளை தன் ஆத்திரம் தணிய கனன்றார்.

''இவங்களெல்லாம் வேட்டுவைக்கிற ஆட்கள் போலி ருக்கு''

வேட்பாளர் வெளியே வந்தபின் நடராச பிள்ளையைப் பார்த்துச் சொன்னார்.

''அப்பிடி ஒரு கூட்டம் இங்கை வளர்ந்து வருகுது. நீங் கள் பாளிமென்றுக்குப் போனதும் இவங்களையெல்லாம்

www.padippakam.com



ஒரேயடியாய் நசுக்கிவிடத்தக்க நடவடிக்கை எடுக்க வேணும்''

''கட்டாயம் எடுப்பன். இப்படியான ஆபத்தான ஆட்களை விட்டுவைக்கப்படாது. ஜனநாயகத்திற்கே ஆபத்து.''

வேட்பாளர் நம்பிக்கையளித்தார்.

''வோட்டுப் பற்றி நீங்கள் பயப்பிடவேண்டாம்: இவன்ரை வோட்டை நான் வேறை ஆளைக்கொண்டு தேர்தலன்று காலையிலேயே போடப்பண்ணி விடுறன''

உடையார் உறுதியளித்தார்.

## 28

''அந்தக் குடிசையை விட்டுவிட்டீர்களே உடையார்''

வேட்பாளர், நேரே நடந்த நடராச பிள்ளைக்கு மூர்த்தியின் குடிசையைச் சுட்டிக்காட்டினார்.

''அங்கே வேண்டாம். அவங்களெல்லாம் கடவுளுக்கோ, நீதி நியாயத்துக்கோ படப்பிடாத தடியன்கள்...''

மூர்த்தியின் குடிசையைத் திரும்பியே பார்க்க விரும்பாதவராக உடையார் எட்டி நடந்தார். அவ்வேளை மூர்த்தி ஒரு தடவை சொன்ன சொல் அவரது நெஞ்சின் அடியில் கிணற்றிலிருந்து வரும் எதிரொலிபோல் ஒலித்தது.

மூர்த்தியின் மனைவி அருந்ததி அழகானவள். அவளைக் காணும்போதெல்லாம் உடையார் பல்லைக் காட்டினார். வயல் வேலை கஷ்டமென்றால் வீட்டுக்கு வேலைக்கு வரலாம் என்றும் கருணை காட்டினார். அவள் போகவில்லை.ஒருநாள் மூர்த்தி இல்லாத வேளை உடையாரே அவள் வீட்டிற்குச்

படிப்பகம்

www.padippakam.com



சென்று 'உனக்குச் செலவுக்குக் காசு வேணுமா?' என்று ஒரு ஐம்பது ரூபா நோட்டை நீட்டினார். அருந்ததி நோட்டைப் பறித்துக்கொண்டு விளக்குமாறை எடுத்து வந்தாள். பல்லைக் காட்டியவர் கொதிப்போடு ஓடினார்.

சில வாரம் கழிந்தபின் மூர்த்திக்குக் கொடுத்த கடன் யாவையும் திரும்பத்தரும்படி காணும் வேளையெல்லாம் கேட்டார்.

''இனி நெல்லு வெட்டு வந்தால்தானே பிழைப்பு.. இப்போது எங்காலை காசு?''

மூர்த்தி உதாசீனமாகச் சொல்லி வந்தான்.

''வாங்கின காசைத் திருப்பித்தரத் தெரியாது, வாய்க் கொழுப்பு வேறை''

''உங்களைப் போலை வீடு நிலமிருக்கா. இல்லாட்டால் மனுசின்ரை காது கழுத்திலை ஏதேன் இருக்கா இப்ப வித்துத் தர''

மூர்த்தி ஆத்திரத்தோடு சொன்னான்.

''ஏன் உன்ரை மனுஷியை ஆருக்கேன் விட்டு உழைச்சுத் தரலாமே''

அவரது ஏமாற்றத்தின் கொதிப்பு வார்த்தைகளாக வாயில் வந்தது.

''நீதானே பணப்பேய். உப்பிடியும் உழைச்சுப் பணம் சேர்ப்பாய். நாகரிகமாகப் பேசத் தெரியாத நாயே, உன் காசை முடிந்தால் வாங்கிப்பார். அடுத்த முறை இலக்ஷனுக்கு வோட்டுக்குப் பல்லைக் காட்டிக்கொண்டு என்ரை வீட்டை வா. என்ரை மனுஷியைக்கொண்டு விளக்குமாத்தாலை உனக்கு அடிப்பிக்கிறனோ இல்லையோ பார்''

மூர்த்தி சொன்னபடி செய்யத்தக்கவன் என்று அவரது மனம் அடிக்கடி சொல்லிக்கொண்டது. முகத்தில் அரும்பிய வியர்வையைத் துடைத்துக் கொண்டார்.

படிப்பகம்

www.padippakam.com



அடுத்ததாக அம்பலவாணர் வீட்டுக்கு அழைத்துச் செல்ல முடிவு செய்தார். வழியில் செல்லும்போதே வேட் பாளருக்கு முன்னெச்சரிக்கையாகச் சொன்னார்:

''அம்பலவாணற்றை மேன் யூனிவசிட்டியில் படிக்கிற துக்கும் தர்மப்பணம் கிடைக்கிறதுக்கும் நான் மணியகார னிட்டைச் சொல்லி ஏற்பாடு செய்தனான். சாகக்கிடக்க என்ரை டிராக்டரால் உழுதும் கொடுத்தன். இப்ப அவன் நன்றி கெட்டு, என்னைத் திரும்பியும் பார்க்கிறானில்லை. அப்பவும் இப்பபோய் உங்களுக்குப் போடச்சொல்லிக் கேட் கப்போறன். போடத்தவறினால் உவன் மகனுக்கு தர்மப் பணமும் இல்லாமல் செய்யவேணும்''

படலையைத் திறந்ததும் பொன்னாச்சி வரவேற்றாள்.

''ஓ உடையார் வோட்டுக்கு வந்தியளா. நாங்கள் வோட்டுப் போட்டு எந்த நன்மையும் காணேல்லை. எங்க வோட்டாலை உங்களுக்குத்தான் அதிக லாபம் எண்டு தெரி யுது. அதுதான் ஐஞ்சு வருஷத்துக்கொருக்கால் படலையைத் திறந்து வந்து கெஞ்சிறியள். இனிமேல் நாங்களொருவரும் வோட்டுப்போடப்போறதில்லை. போய்விட்டு வாருங்கோ''

''கிழவிக்கும் அரசியல் தெரியுதோ''

உடையார் நளினம் பேசியபடி திரும்பினார்.

''இது எங்கடை அனுபவத்திலை கண்டது. நீங்க உங்க அரசியலை உங்களோடை வைச்சிருங்கோ''

வெளியே விட்டு பொன்னாச்சி படலையைச் சாத்தி னாள்.

''உன்ரை மேன் படிச்சு முடிக்கிறதையும் நான் பார்க் கிறேன்''

''அவன் படிச்சு முடிச்சால் நீர்தான் வேலை வைச்சிருக் கிறீர் போலைகிடக்கு. படிப்பை முடிக்காட்டால்தான் நல் லது. நீ பறிச்சிடாமல் எங்க நிலத்தையாவது பார்த்துக்கொள் வான்''

www.padippakam.com



படலைக்கு இப்பக்கமும் அப்பக்கமும் வெஞ்சின வார்த்தைகள் பரிமாறப்பட்டன.

## 29

மாதவன், முத்துவேலு, மூர்த்தி, தியாகன் யாவரும் எதிர்வரும் தேர்தல் பற்றியும் அடிக்கடி விவாதித்தனர். அன்றிரவு அம்பலவாணரின் மகன் சிவபாலனும் மூர்த்தி வீட்டில் அவர்களுடன் சேர்ந்து கொண்டான்.

சிவபாலன் பல்கலைக் கழக விடுமுறைக்கு கிராமத்திற்கு வந்து நின்றான். கடைசி வருடத்தில் படிப்பை விட்டு விடுவது என்பது மிகவும் சிரமமாக இருந்தது. அவன் சிந்தனையில் பல்வேறு குழப்பங்கள். அவற்றிற்கு விடை தேடிக் கொண்டிருந்தான்.

தேர்தல் பற்றி பல்கலைக் கழகத்தில் நிலவும் அபிப்பிராயங்களையும் அவன் சொன்னான். ஐக்கிய தேசியக் கட்சிக்கு பலமான எதிர்ப்பு மாணவரிடையேயும்பேராசிரியர்களிடையேயும் இருப்பதாகத் தெரிவித்தான். அதே வேளையில் சுதந்திரக் கட்சி, சமசமாச, கம்யூனிஸ்டுகளான இடதுசாரிக் கட்சிகள் சேர்ந்த ஐக்கிய முன்னணிக்கு இருக்கும் செல்வாக்கையும் தெரிவித்தான்.

ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் கல்வி அமைச்சருக்கு எதிராக குளியப்பிட்டிக்குச் சென்று அங்கு கைகலப்பு ஏற்பட்ட சம்பவத்தையும் சொன்னான். இடதுசாரி ஐக்கிய முன்னணியில் மிகவும் நம்பிக்கை வைத்திருப்பவனாகவே அவனது பேச்சு இருந்தது. அவன் கருத்துக்கு யாவரும் ஆரம்பத்தில் மௌனம் சாதித்தனர்.

படிப்பகம்

# 30

''இடதுசாரி ஐக்கிய முன்னணி பற்றி என்ன நினைக்கிறீர்கள்?''

யாவரையும் பார்த்து சிவபாலன் கேட்டான்.

எவர் எவ்வித வினா எழுப்பினாலும் மாதவன் தட்டிக் கழித்து விடுபவனல்ல. உடனே அவர்களோடு உரையாடி அவர்கள் மூலமே பதிலையும் வரவழைக்க முயல்பவன்.

''தேர்தலில் ஈடுபட்டுள்ள கட்சிகளின் வர்க்கச் சாயலை முதலில் பார்ப்பது நல்லதல்லவா?''

மாதவன் தொடங்கினான்.

''ஐக்கிய தேசீயக் கட்சியிலிருந்து தொடங்குவோம். சிவபாலன் நீயே சொல்லு''

தியாகன் இடையே புகுந்து கேட்டான்.

''முதலாளிகளின் கட்சி...''

சிவபாலன் சொன்னான்.

''அவ்வளவோடு விடலாமா? தரகு முதலாளி, ஏகாதிபத்திய நாடுகளுக்கு இலங்கையை மார்க்கெட்டாக்கி வருகிறது...''

மூர்த்தி விரித்தான்.

''நிலப் பிரபுத்துவம்...''

துரை ரத்தினம் நினைவூட்டினான்.

''நிலத்தில் அம்மாவின் சுதந்திரக் கட்சிக்கு இருக்கும் ஆதிக்கமளவு ஐக்கிய தேசீயக் கட்சிக்கே இல்லை''

www.padippakam.com



மூர்த்தி சொன்னான்.

''தேசீய முதலாளிகளுக்கு. அத்திவாரமமைத்ததும் சுதந்திரக் கட்சிதானே.''

துரைரத்தினம் கூறினான்.

''அதே தேசீய முதலாளிகள் பின்னர் ஐக்கிய தேசீயக் கட்சியுடன் சேர்ந்து விட்டார்கள்''

தியாகன் சொன்னான்.

''நிலப்பிரபுக்கள் போன்ற பெரிய நிலவுடைமைக்காரர்கள் தலைமை தாங்கும் சுதந்திரக் கட்சியுடன் சமசமாசக் கட்சியும் கம்யூனிஸ்டு கட்சியும் ஒன்று சேர்ந்து ஐக்கிய முன்னணி அமைப்பதுதான் மிக விசித்திரமானது''

மூர்த்தி சொன்னான்.

''முதலாளித்துவத்துக்கு எதிராக துப்பாக்கி எடுத்துப் போரிடவா ஐக்கிய முன்னணி அமைத்தார்கள். வர்க்க சமரசத்தைக் காப்பாற்றும் நாடாளுமன்றத் தேர்தலுக்குத் தானே...''

தியாகன் சொன்னான்.

''அப்படியானால் இடதுசாரிக் கட்சிகளும் வர்க்க சமரசத்திற்கு உடன்பட்டுவிட்டார்கள் என்று சொல்லுகிறீர்களா?''

மௌனமாக யாவையும் கேட்டுக் கொண்டிருந்த சிவபாலன் வினவினான்.

அதுவரை மௌனமாக யாவையும் கேட்டுக் கொண்டிருந்த மாதவன் இடையே புகுந்து சொன்னான்.

''ஐக்கிய முன்னணி அமைத்திருக்கும் மூன்று கட்சிகளையுமே ஆராய்ந்து பார்த்தால் எமக்கும் அவர்களுக்குமுள்ள வேறுபாடு தெரியவரும். அது சிலருக்குச் சிறிதாகத் தோற்றலாம். ஆனால் உண்மையில் அதுவே பெரிய வேற்றுமை

படிப்பகம்

www.padippakam.com



யாகும். அது நாட்டின் முரண்பாடுகள் பற்றிய ஆராய்ச்சி யாகும். தியாகு, நீ முரண்பாடுகள் பற்றி எழுதிவைத்திருப்ப தைப் படி''

தியாகன் தன் கையில் மடக்கி வைத்திருந்த கொப்பியை மங்கிய விளக்கொளியில் பிரித்துப் படித்தான்:

''எந்த ஒரு வளர்ச்சிப் போக்கிலும் ஒன்றுக்கு மேற் பட்ட முரண்பாடுகள் இருக்குமேயானால், அவற்றில் ஒன்று தலைமைப் பாத்திரத்தை, தீர்க்கமான பாத்திரத்தை வகிக் கும் பிரதான முரண்பாடாக இருக்கும். ஏனையவை இரண்டாந்தரமான கீழ்ப்பட்ட நிலையில் இருக்கும். எனவே, இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட முரண்பாடுகள் உடைய எந்த ஒரு சிக்கலான வளர்ச்சிப் போக்கையும் ஆராயும்போது, அதன் பிரதான முரண்பாட்டைக் காண்பதற்கு நாம் சகல வழிகளிலும் முயலவேண்டும். ஒருகால் இந்தப் பிரதான முரண்பாட்டைக் கிரகித்துக் கொண்டதும், எல்லாப் பிரச்சினைகளும் எளிதில் தீர்ந்து விடுகின்றன''

''இந்தக் கருத்துச் சரியென்று கொண்டால் நீங்கள் இப்போது ஆராய்ந்தபடி எம் நாட்டின் முரண்பாடுகளிடையே தீர்க்கமான பாத்திரத்தை வகிக்கும் பிரதான முரண்பாடு, 'பிரின்சிப்பிள் கொன்ரடிக்சன்' என்ன?''

மாதவன் கேட்டான்.

''மண்ணுக்கும் மக்களுக்கும் இடையில்...''

''நிலப்பிரபுத்துவத்திற்கும் மக்களுக்குமிடையில் உள்ள முரண்பாடு''

தியாகன் கூறத் தொடங்கியதை பூர்த்தி முடித்தான்.

''மூலதனமும் உழைப்பும்?''

சிவபாலன் கேட்டான்.

www.padippakam.com



''மூலதனத்திற்கும் தொழிலாளருக்கும் இடையே உள்ள முரண்பாடு இரண்டாவது''

துரைரத்தினம் சொன்னான்.

''இந்தப் பிரதான முரண்பாட்டை உடைத்தெறிவதன் மூலமே நாட்டில் புதிய ஜனநாயகப் புரட்சியை ஏற்படுத்த முடியும்...''

''எங்கள் அரசியல் கட்சிகளின் மயக்கமென்ன?''

சிவபாலன் கேட்டான்.

''ஐக்கிய முன்னணியிலுள்ள கம்யூனிஸ்டு கட்சியும் சமசமாஜக் கட்சியும் மூலதனத்திற்கும் தொழிலாளர்கட்கும் இடையே நிலவுவதே பிரதான முரண்பாடாகக் கொள்ளு கிறார்கள். நிலத்திற்கும் மக்களுக்குமிடையில் நிலவும் முரண்பாட்டை இரண்டாவதாகக்கூட அவர்கள் பிரமாதப் படுத்துவதாகவே தெரியவில்லை. அதனால்தான் முதலாவது எதிரியாகக் கருதப்படவேண்டிய நிலவுடைமைப் பெரு மனிதர்களோடு இடதுசாரிக் கட்சியினர் கூட்டுச் சேர்ந் துள்ளார்கள் —தம் ஆத்மாவையே ஈடுவைக்கும் பல சமரசங் களிடையேதான் இக்கூட்டு முன்னணி இயங்குகிறது. 'நிலத்தைப் பங்கிட்டு மக்களுக்குக் கொடு' என்றே இந்த இடதுசாரிகள் என்றும் பேச மாட்டார்கள்''

மாதவன் பதிலளித்தான்.

''பேசினால் உடனேயே ஐக்கிய முன்னணியே உடைந்து விடுமே''

மூர்த்தி இடைமறித்துச் சொன்னான்.

''நிந்தகம் சட்டம், இனாம் நிலங்களை பறிக்கும் சட்டத்தைக் கூட—ஐக்கிய தேசியக் கட்சியே கொண்டு வந்தது.''

தியாகு சொன்னான்.

ம—7

www.padippakam.com



''சுதந்திரக் கட்சியிலும் பார்க்க ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு நிலவுடைமை ஆதிக்கமும் குறைவு. அதனாலே தான் அவர்கள் சுதந்திரக் கட்சியினரைப் பாதிக்கத்தக்க சட்டத்தை இயற்றினார்கள்''

மூர்த்தி சொன்னான். மாதவன் தொடர்ந்தான்:

''ஆனால் நில விஷயத்தில் ஐக்கிய தேசியக் கட்சி காட்டிக் கொடுத்ததையே சுதந்திரக் கட்சியும் செய்யும். இடதுசாரிக் கட்சிகளும் அதை ஆதரிக்கின்றன.''

''குடியேற்றத் திட்டங்கள் பற்றித் தானே, தரிசு நிலங்களில் குடியேற்றுவது''

தியாகு கூறினான்.

''பிரதான முரண்பாட்டை மூடிமறைக்கும் மிகப்பெரும் ஏமாற்று வித்தை இதுதான். எல்லாம் வெறும் கண் துடைப்பு. தமது வளமான நிலம் பறிபோகாமல் இருப்பதற்காக வறிய விவசாயிகளை ஊரைவிட்டு விரட்டும் அழகான திட்டம்.''

மாதவன் சொன்னான்.

''இருபது இலட்சம் விவசாயக் குடும்பங்களில் இருபதினாயிரம் குடும்பங்களை இதுவரையில் குடியேற்றத் திட்டங்களில் குடியேற்றியிருப்பார்களா?''

தியாகன் கேட்டான்.

''தரிசு நிலத்தைத் திருத்த உடையான் போன்றவர்களிடம் கடன் வாங்கி பின் கடன்கொடுக்க முடியாது, திருத்திய நிலத்தையே எழுதிக்கொடுத்தவர் எத்தனை பேர்?''

மூர்த்தி கூறினான்.

''இந்த நாட்டின் வறிய, நிலமற்ற விவசாயிகள் நூற்றுக்கு எண்பத்தைந்து சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள். அவர்கள் இப்பிரதான முரண்பாட்டை உடைத்தெறிந்து

www.padippakam.com



அரசியல் ஆதிக்கத்தைக் கைப்பற்ற ஒன்று சேரவேண்டும். அப்போதுதான் சமதர்மம் பற்றிப் பேசலாம். இந்தப் பாராளுமன்ற ஜனநாயகம் மூலம் ஐக்கிய முன்னணி கொண்டு வருவதாகக் கூறும் சோஷலிஸத்தையும்தானே இருந்து பார்ப்பமே''

மாதவன் கூறினான்.

## 31

சிவபாலனின் முகத்தில் சிறிது களை தென்பட்டது. தன் சிந்தனையின் குழப்ப நிலை சிறிது நீங்கியதாக உணர்ந் தான்.

வரண்ட காலம். மூர்த்தியின் மனைவி அருந்ததி தண்ணீரில் எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து உப்புப் போட்டுக் கரைத்துக் கொண்டுவந்து யாவருக்கும் கொடுத்தாள். நாவரட்சியால் தண்ணீரையே குடித்துக்கொண்டிருந்த யாவரும் புளிப்பைச் சுவைத்துக் குடித்தனர். நீரில் புளியுடன் உப்புப் போட்டுக் கரைக்கப்பட்டிருந்தது.

''அருந்ததிக்கு எங்கள் பேச்சு இன்னும் புளிக்கவில்லைப் போலிருக்கு''

''மாதவன் விஷயத்தை மாற்றி எலுமிச்சம்பழ நீரை ரசித்தபடியே சொன்னான்.''

''நீங்கதானே சாப்பாடே வேண்டாமெண்டு பேசிக் கொண்டிருக்கிறியளே''

அருந்ததி கூறினாள்.

www.padippakam.com



''என்ன, சிவபாலன், படிப்பெல்லாம் அமளியாய் நடக்குதோ?''

மாதவன் கேட்டான்.

''நீங்க சொன்னபடி விட்டுவிடலாம் என்றுதான் நினைகிறன். அம்மா என் பக்கம். அப்பாவை நினைத்துத் தான் பயமாயிருக்கு...''

சிவபாலன் தயங்கியபடியே கூறியதை தியாகன் இடை மறித்துச் சிரித்தபடியே சொன்னான்:

''நாங்கள்தான் புத்திமதி கூறினதென்று கொப்பருக்குச் சொல்லிவிடாதை. எங்களைக் கும்பிட்டுக் கொண்டிருக்கிற அவர் நாளைக்கு எதிரியாயே மாறிவிடுவார். நடராச பிள்ளையோடை சேர்ந்தாலும் சேர்ந்திடுவார்''

''பாவம், அந்த மனுஷன். பெரிய இடத்திலை—நிலம் புலம் உள்ள இடத்திலை படிப்பு முடிஞ்சதும் கட்டி வைக்க வேணும். அதாலையாவது பழையபடி ஒரு நிலபுலக்காரனாக வரவேணும் என்று கனவு கண்டுகொண்டிருக்கிற கிழவனுக்கு நீ படிப்பை விட்டிட்டாய் என்றால் மாரடைப்பு வந்தே செத்தாலும் செத்துப் போவார்''

அருந்ததி சொன்னாள். அவள் பொன்னாச்சியோடு நெருங்கிய ஐக்கியம். அவர்களது மனோபாவங்களை முன் கூட்டியே கண்டு அறிந்த அனுபவத்தைக்கொண்டே சொன்னாள்.

சிவபாலனின் சிந்தனை குடும்பம், இன்பம், இலட்சியம் இவற்றிடையே ஈடாடிக்கொண்டிருந்தது.

www.padippakam.com

# 33

சிறுபோக அறுவடை வரும்வரை வேலையே மிகக் குறைவு. பொழுது போக்காக பட்டணப்பக்கம் சென்று பொழுதுபோக்கிவர கைச் செலவிற்கே எவரிடமும் பண மில்லை. சினிமா பார்த்துப் பழகியவர்களுக்கு பட்டினத் தியேட்டருக்கு வந்திருக்கும் புதிய சினிமாப் பெயர்களும் பெரியதெரு சில்லரைக் கடையில் ஒட்டியிருந்த போஸ்டர் களும் நெஞ்சில் அவாவையும் ஏக்கத்தையும் ஏற்படுத்தின.

ஓய்வு நேரத்தை பயன்படக் கழிப்பதற்காக மாதவன் நாடகங்கள் பழகி நடிக்கும்படி அயல் கிராமமெல்லாம் அறிவுறுத்தினான். ஒவ்வொரு கிராமத்தவரும் தாம் பழகிய நாடகங்களை அயல் கிராமங்களிலும் அரங்கேற்றினர்.

தியாகன் ஒரு நாடகம் கிராமத்தவருக்காக எழுதினான். அதில் நளினமாக நடராச பிள்ளையையும் மற்றும் கிராமத் துப் பிரமுகர்களையும் கிண்டல் செய்திருந்தான்.

அரசாங்கத்திற்கு நெல் கொள்வனவு செய்யும் கூட்டுறவுச் சங்கத்திற்கு தலைவராக இருந்துகொண்டு மில் காரரோடு சேர்ந்து அரசாங்க நெல்குற்றும் கொந்தராத்தின் மூலம் எப்படிப் பணம் திருடப்பட்டுப் பகிரப்படுகிறது என்பதையும் ஒரு காட்சியில் கொண்டுவந்தனர்.

வீட்டில் மதுவரி அதிகாரிகளுடன் கூடி கள்ளச் சாராயம் அருந்துவது, பொலிசாருடன் சேர்ந்திருந்து கொலை, கொள்ளை, விபசாரத்திற்கு ஏற்பாடு செய்வது ஆகிய பல சம்பவங்கள்; முன்னர் கிராமத்தில் நடந்த சம்பவங்களை ஒட்டி நினைவுகூரத்தக்கதாக, நாடகத்தில் இடம் பெற்றன.

படிப்பகம்

www.padippakam.com



அந்நிலச்சுவானின் கொடுமைகளைக் கண்டு பொறுக்க முடியாத மக்கள் அவனை அழிக்கவேண்டும் என்று தீர்மானிக்கின்றனர். துப்பாக்கியுடன் அவனை அழிக்க ஒருவன் செல்கிறான். நிலச்சுவான்தான் கிராமத்தவருக்கெல்லாம் எப்படியெப்படி உதவினேன் என்பதை மனமுருகச் சொல்கிறான்:

''உன் தாய் செத்துக்கிடக்க நீ அடக்கம் செய்யக் கையிலை பணமில்லை என்று வந்து காலிலை விழுந்து அழுததை மறந்து விட்டியா? நான் உனக்கு உடனே இருபத்தைந்து ரூபா தந்தேன் என்பது நினைவிருக்கா? உங்கள் கூலியிலை சில வேளை கறாராயிருந்திருப்பேன். தர்மமென்று கேட்டு நான் எதையாவது எப்பொழுதாவது எவருக்காவது மறுத்திருக்கிறேனா? நீ என்னைக் கொன்றால் உனக்குத்தான் நரகம்''

கொலை செய்யச் சென்ற விவசாயி சோர்வோடு திரும்புகிறான்.

மற்றோர் விவசாயி அவனை ஒழிப்பதற்காக வருகிறான்:

''உன் மனைவி பிள்ளைப்பெற முடியாமல் சாகக்கிடக்க உரம் ஏற்றிக்கொண்டிருந்த லொறியிலை ஆஸ்பத்திரிக்கு அனுப்பியதை மறந்துவிட்டியா? இப்போது ஏதாவது உதவி வேண்டுமா? தயக்கமில்லாமல் கேள். இல்லாவிட்டால் விரும்பியதை எடுத்துக்கொண்டுபோ. என்னை ஏன் கொன்று நீ பாவம் தேடவேண்டும்''

அடுத்த விவசாயியும் திரும்புகிறான். இப்படியே ஒவ்வொருவருக்கும் அந்த நிலச்சுவான் நயமான வார்த்தைகளைக் கூறி அனுப்பிவிடுகிறான்.

கடைசியில் பவளம் கைத் துப்பாக்கியோடு மேடையில் வருகிறாள். அவிழ்ந்த கூந்தல்; கண்களிலே நெருப்பு; பாண்டியன் முன்னிலையில் சென்ற கண்ணகி போல வந்தாள். நிலச்சுவான் கலக்கமடைந்து தன் மனைவியை முன்னே அனுப்புகிறான். மனைவி அவள் காலில் விழுந்து கதறுகிறாள்:

www.padippakam.com



''நீயும் ஒரு பெண். பெண்ணுக்குக் கணவன் தானே தெய்வம். எனக்குத் தாலிப் பிச்சை மட்டும் தா. இங்கேயுள்ள சொத்து செல்வம் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு போ. உலகத்திலே உயிர்களைப் படைத்தவள் பெண்தானே. அக்குலத்தில் பிறந்த நீயே அழிக்க முன் வந்தால்...''

''என் கணவனைக் கொலை செய்ய முயன்றபோதும் நான் இதே மாதிரித்தான் உன் கணவன் கா்லில் விழுந்து மன்றாடி அழுதேன். என் கற்பை வேண்டுமானாலும் தருகிறேன், என் கணவனைக் கொலை செய்யவேண்டாம் என்று கதறினேன். உவன் என் கற்பைச் சூறையாடினான். உவன்து கையாட்கள் என் கணவனைக் கொன்றார்கள். நான் மட்டும் உன்மேல் ஏன் இரக்கம் காட்டவேண்டும்?''

''கொலை செய்வது பாவமல்லவா''

''உன்னைக் கொல்ல வந்த பசுவையும் கொல் என்று பகவத்கீதையே சொல்கிறதே. என் கணவனைக் கொன்ற மிருகத்தை ஏன் நான் கொல்லக்கூடாது?''

பவளத்தின் நடிப்பில் ஆவேச உணர்ச்சியும் உக்கிரமும் இயல்பாகவே தலைகாட்டின. கண்ணகி சிலம்பை எறிந்து ஒலி எழுப்பியதுபோல் அவள் வெடிதீர்த்து ஒலி எழுப்பினாள்.

'இரத்தக் கடன்' என்ற அந்த நாடகத்தை அயல் கிராமங்களிலெல்லாம் அரங்கேற்றினர்.

## 34

மருதமலைக் கிராமத்தில் தில்லைநாதன் குழுவினர் 'கந்தன் கருணை' என்ற அண்ணாவி மரபு கூத்து நாடகத்தை நடித்தனர். பாட்டும் கூத்தும் உரையாடலும் யாழ்ப்

www.padippakam.com



புராணத்தில் நிலவும் சாதிப் பிரச்சனையைக் கிண்டல் செய்வதாய் அமைந்திருந்தன.

மாவிட்டபுரம் கந்தன் கோவிலுக்குள்ளே நுழைய முயலும் முருகனை சாதி வெறியர்கள் தடுக்கின்றனர்.

''நீ யார்?''

''கந்தன்''

''ஓ பள்ளனா, நீ உள்ளே நுழைய முடியாது''

சாதி வெறியர்களின் கொடுமைகளைக் கண்ட முருகன் தன் கையிலிருந்த வேலையே சாதியை எதிர்த்துப் போரிடும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகக் கொடுக்கிறான்; அக்கிரமத்தை எதிர்த்து ஆயுதம் எடுத்துப் போராடும்படி ஊக்குவிக்கிறான்.

கூத்தும் பாட்டும் மக்களைக் கவர்ந்தது மட்டுமல்ல, வீர உணர்வையும் தன்னம்பிக்கையையும் கொடுத்தது. வர்க்க உணர்வு தலையெடுத்ததும் சாதி, சமயம் போன்ற மேல்மட்ட உணர்வுகள் எவ்வாறு மறைந்து விடுகிறது என்பதையும் நாடகங்கள் மூலம் உணர்த்தினர்.

காட்சி சோடனைகள் எதுவுமே யில்லாதபோதும் மக்கள் ஆர்வத்தோடு நாடகங்களைப் பார்த்து ரசித்தனர். அவர்களது வாழ்க்கை அனுபவங்களைப் பிரதிபலிப்பனவாக அவை இருந்தன.

''அமெரிக்காவில் இன்று வளர்க்கப்படும் கலை வளர்ச்சி பற்றி உனக்குத் தெரியுமா?''

மாதவன் தியாகனைக் கேட்டான்.

''எல்லாம் லயிட், காட்சி அமைப்பு ஆகிய தொழில்நுட்ப வளர்ச்சிதான் என்று அங்கு போய் வந்த ஒருவரைக் கண்ட போது சொன்னார். அதற்கு மேலால் மேடையிலேயே எல்லாரையும் நிர்வாணமாகவே காட்டுகிறார்களாம்''

''அதற்குமேல் காட்ட அவர்களிடம் ஒன்றுமில்லை போலும்''

www.padippakam.com



தியாகன் சொல்லத் தொடங்கியதை மூர்த்தி முடித்தான். யாவரும் சிரித்தனர்.

''முதலாளித்துவம் உக்கிச் சிதைந்து அழிகிறது என்பதற்கு இதற்குமேல் என்ன சான்று வேண்டும்? கலைகள் தானே ஒரு சமுதாயத்தின் முன்னோடி''

தியாகன் தத்துவம் பேசினான்.

''அது உண்மைதான். ஆனால் அதையே முதலாளித்துவ அமைப்பையும் ஏகாதிபத்தியத்தையும் பேணிக் காப்பாற்றுவதற்கும் மக்களின் போராட்ட உணர்வுகளை மழுப்பி திசை திருப்பி விடவும் பயன்படுத்துகின்றனர்''

மாதவன் சொன்னான்.

''அதனால் தானே நாங்களும் இன்றைய உலகில் கலாசாரம் அனைத்தும், கலை, இலக்கியம் அனைத்தும் குறிப்பிட்ட வர்க்கங்களுக்குச் சொந்தமானவை, குறிப்பிட்ட அரசியல் மார்க்கங்களில் முடுக்கி விடப்படுகின்றன என்பதை அடிக்கடி நினைவுபடுத்திக் கொள்கிறோம்''

தியாகன் கூறினான்.

''எம்.ஜி.ஆரின் படங்களை மக்கள் ரசிப்பதைப் பார்த்திருக்கிறாயா? அமெரிக்க ஆபாசமளவுக்கு இன்னும் காதல் காட்சிகள் வளரவில்லைத்தானே. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியின் அளவுக்கு, தமிழர் பண்பாடு, வியாபார அளவுக்கு மீறிய காதல் காட்சி இருந்தாலும் எம்.ஜி.ஆர். எடுக்கும் வீரக் கதாநாயகன் பாத்திரம்தான் மக்களுக்கு அதிகம் பிடித்துக் கொள்ளுகிறது என்று நினைக்கிறேன். ஆனால் முரண்பாடு எங்கேயென்றால் பணக்காரரை, ஜமீன்தாரரைக் கொள்ளையடித்து அவர்களது கையாட்களை கொலை செய்து, ஏழைகளுக்கு எம்.ஜி.ஆர். கொடுக்கிறார். அதை மக்கள் பார்த்து ஆரவாரித்து விசிலடிக்கிறார்கள். இதெல்லாம் வெறும் கற்பனை ஏமாற்றுகள். உண்மையில்

www.padippakam.com



எங்காவது ஏழை விவசாயிகள் பெரிய நிலச்சுவான்களின் நிலத்தைப் பறிக்க முயன்றாலோ, உணவுப் பொருட்களை பசி காரணமாய் கொள்ளையடித்தாலோ அவரே அதற்கு எதிராக துப்பாக்கிஎடுத்துக்கொண்டும் போய்விடலாம்''

''ஏன் அவர் எடுக்கப் போறார். அவரது அரசின் காவல் காரர்களே சுட்டுத் தள்ளி ஒடுக்கி விடுவார்களே''

மாதவனுக்கு தியாகன் சொன்னான்.

''கலைவேறு வாழ்க்கை வேறு, சொல்வேறு செயல் வேறு, கற்பனை வேறு யதார்த்தம் வேறு என்று பேசும் கற்பனாவாதிகள் இவர்களே''

மாதவன் கூறினான்.

''எம்.ஜி.ஆரின் கதாபாத்திர வீர புருஷனை மக்கள் போற்றி ஆரவாரம் செய்வதிலிருந்து அவர்கள் இத்தகைய மாற்றத்தை எப்படி விரும்புகிறார்கள் என்பது நன்கு தெரிகிறது. அவ்விருப்பைச் செயலாக்கும் வரலாற்று ரீதியான, விஞ்ஞான ரீதியான வழியைக் காட்டக் கூடிய ஒரு புரட்சிகர இயக்கம் வேண்டும். அதே மக்கள் நாட்டையே மாற்றி விடுவார்கள். இல்லையா?''

தியாகன் கேட்டான்.

''அப்படியான இயக்கம் இங்கு தோன்றாமலா விடப் போகுது. வரலாற்றை எவராலும் இழுத்து நிறுத்திவிட முடியாது''

மாதவன் அழுத்தமாகக் கூறினான். யாவரும் அவன் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தனர். சிறிது நேரம் மௌனம் குடிகொண்டது. மாதவன் தொடர்ந்து மேலும் சொன்னான்:

''சமுதாயத்தை மாற்றி அமைக்கும் மக்கள் போராட்டம் ஆரம்பித்துவிட்டால் உலகில் எந்தச் சக்தியாலும் எந்த அடக்குமுறையாலும் பின்னர் அதைத் தடுத்து நிறுத்திவிட

படிப்பகம்

www.padippakam.com



முடியாது. வியத்நாம் போன்ற ஒரு சிறிய சுரண்டப்பட்ட வறிய நாட்டில் கிளம்பிய மக்கள் போரின்முன் உலகின் மிகப் பெரிய சக்தியான அமெரிக்காவே தோல்வி கண்டுவிட்டது. இதை அறியாது இங்கேயே இவற்றை அடக்குமுறை மூலம் கிள்ளிவிடலாம் என்று பகற்கனவு காண்பவர்களும் இருக் கிறார்கள். அதுதான் பெரிய வியப்பானது.''

# 34

நடராசபிள்ளை உடையார் அரசங்குடிக் கிராமத்தில் பரப்பியிருந்த செய்திக்கு முழுமாறாக தேர்தல்முடிவு வெளி வந்தது. ஐக்கிய தேசீயக் கட்சிக்கு தலைதூக்க முடியாத பெரிய தோல்வி. ஐக்கிய முன்னணிக்குப் பெரும் வெற்றி.

வாரத்திற்கு இரண்டு கொத்து அரிசி இலவச்மாகக் கிடைக்கலாம், வேறும் பல்வேறு நலன்கள் புதிய அரசு மூலம் வரும் என மக்கள் நம்பிக்கை கொண்டு மகிழ்ந் தனர்.

அதிர்ச்சியடைந்த உடையார் சிலநாள் வெளியே தலை காட்டாமல் இருந்தார். பின்னர் பட்டணம் சென்று அரசிய லாரையும் அதிகாரிகளையும் கண்டு தமது ஆதரவைத் தெரி வித்தார். தான் ஐக்கிய தேசீயக் கட்சியை ஆதரிக்கவில்லை எனவும் வேஷம் போட்டார்.

சிலநாளில் அவருக்கிருந்த பயம் யாவும் கலைந்து விட்டது.

கம்யூனிஸ்டு கட்சியினரின் கையில் கிடைத்துவிடலாம் என்று பலரும் எண்ணியிருந்த நிலம், நில அபிவிருத்தி அமைச்சு சுதந்திரக் கட்சித் தலைவர் ஒருவருக்குக் கிடைத்

www.padippakam.com



தது உடையாருக்கே பெரிய மகிழ்ச்சியாயிருந்தது. அந்த அமைச்சரே பெரிய நில உடைமைக்காரர் என்று அவருக்கு ஒரு அதிகாரி காதில் போட்டார்.

''நீர் கொஞ்சமும் பயப்பிட வேண்டாம். முந்தியவர்களிலும் பார்க்க இவர்தான் நில உடைமையைப் பாதுகாப்பதில் உதவுவார்கள். சுதந்திரக்கட்சியில் பலர் நிலப் பிரபுக்கள். அவர்கள் தமக்குத் தீமை விளைவிக்கத்தக்க எதுவும் செய்யார்.''

கொம்யூனிஸ்டுகள், சமசமாஜிகள் ஆட்சிக்கு வந்துவிட்டார்கள் என உடையார் அஞ்சிக் கொண்டிருந்த அச்சம் யாவும் நீங்கிவிட்டது. நடந்த தேர்தலில் ஐக்கிய தேசீயக் கட்சியை விட்டு தான் இவர்களையே ஆதரித்திருக்கலாம் என்றும் எண்ணிக் கொண்டார்.

பாணந்துறையிலும் மின்னேரியாவிலும் தேர்தல் முடிந்ததும் ஆரம்பித்த நிலப்பறி இயக்கத்தை புதிய பிரதமர் முளையிலேயே கிள்ளிவிட்டாராம் என்ற செய்தியும் அவருக்கு நல்ல நம்பிக்கையளித்தது.

சில வாரங்கள் மௌனமாக இருந்தனர், விரைவிலேயே வறிய விவசாயிகளின் இயக்கத்தில் ஈடுபட்டிருந்தவர்களை நசுக்கத் தொடங்கினார்.

முன்னர் அவரின் நண்பர்களாக இருந்த அதே பொலிசார் அதே போலிஸ் நிலையத்தில் இருந்தனர். அவர்கள் முன்னர்போலவே உடையாரை வரவேற்று அவரது குறைகளை முதலில் கவனித்தனர். போலிஸ் இன்ஸ்பெக்டர் சொன்னார்:

''இன்னொருதடவை முயல் வேட்டைக்கு வரவேண்டும்.''

''இரவாக வந்தால் புலிவேட்டைக்கே ஏற்பாடு செய்வேனே''

நடராசபிள்ளை நயமாகக் கூறினார்.

www.padippakam.com



படித்த வேலையற்றவர், மாணவரிடையே சே குவேரா இயக்கம் வளர்வதைக் கண்ட அரசாங்கம் அவர்களை சி. ஐ. ஏ ஏஜெண்டுகள் எனக் குற்றம்சாட்டி கடும் நடவடிக்கை எடுக்கத் தொடங்கியது.

பொலிசார், நடராசபிள்ளை குறிப்பிட்டவர்களில் சிலரை கைது செய்து 'சே குவேராவா, சீ நாய்களே' என்று உதைத்து அடிபோட்டு சிலநாள் சிறையில் வைத்து பின்னர் பிணையில் விட்டனர்.

அந்த தாக்குதலில் முத்துவேலு, மூர்த்தி, சிவபாலன் மூவரும் அகப்பட்டனர்.

சிவபாலன் சுகயீனத்தால் பரீட்சை எழுத முடியவில்லை என்று பரீட்சை முடியும் வேளைவந்து அம்பலவாணருக்குச் சாட்டுச் சொன்னான். அவர் முதலில் மனம் நொந்த போதிலும் 'அவன் விதியாக்கும்' என்று கூறி மறுதடவை எடுத்துப் பாஸ் செய்துவிடுவான் என்ற நம்பிக்கையோடு இருந்தார். பொலிசார் அவனைக் கைது செய்தது 'உடையான் பொறாமையில் செய்த வேலை' என்று உடையார் மேல் மேலும் பகையை வளர்த்துக் கொண்டார்.

நடராசபிள்ளை பழையபடி தலைநிமிர்ந்து தன் வீரம் பேசி நடமாடத் தொடங்கினார்.

## 35

தினக்குக் கிட்டிய இரகசியச் செய்தியின்படி மாதவன் யாவரையும் விழிப்பாக இருக்கும்படி சொன்னான். அவன் சில நாட்களாக அங்கு இல்லை. பிற கிராமங்களுக்குச் சென்று அன்றுதான் திரும்பியிருந்தான்.

www.padippakam.com



பின்னிலவு உதயமான பின் காட்டுப்புறத்தே காடு வெட்டுவதற்காகப் போட்ட குடிசையொன்றில் முக்கியமானவர்கள் மட்டும் கூடினர். ஆங்காங்கே காவலுக்கு ஆட்களை நிறுத்தினர்.

''நடராசபிள்ளையின் கொடுமையை இனியும் பொறுக்க முடியாது. பொலிஸ்காரனிட்டை மாறி மாறி அவனால் உதை வாங்கிக் கொண்டிருப்பதிலும் பார்க்க இவனையே தீர்த்து விடுகிறேனே, ஒரு துப்பாக்கியும் அனுமதியும் தந்தால் போதும்.''

தியாகன் தீவிரமாகப் பேச்சை ஆரம்பித்தான்.

''உன் நாட்கத்தில் எழுதியதை அப்படியே நடித்துக் காட்டப் போகிறாய் போலிருக்கு.''

மாதவன் சொன்னான்.

''அதை வெறும் கற்பனையாகவா எழுதினேன். நாம் செய்ய வேண்டியதைக் காட்டத்தானே எழுதினேன்.''

''ஒவ்வொருத்தராக மாறி மாறி துப்பாக்கியைக் கொண்டுபோய் வெருட்டு மட்டும் அந்த நிலச்சுவான் சும்மா இருப்பானா? அவனிடம் ஒன்றுமில்லையா? அவன் துப்பாக்கிகள் எங்கே? கையாட்கள் எங்கே? பொலிஸ்படை, முப்படைகள் எங்கே? அவன் தனி மனிதனல்லவே. அவன் பின்னே ஒரு பெரிய பலம் வாய்ந்த அரசு. அதற்கு உதவி புரியக்கூடிய ஏகாதிபத்தியங்களே உள்ளன. நீ அத்தனை சுலபமாக அவனை ஒழித்து விடலாம் என்று நாடகம் எழுதினாய்.''

''தவறு இருந்ததென்றால் நடிக்க ஏன் விட்டீர்கள்?''

''நடராசபிள்ளையின் கொடுமைகளை மறைமுகமாக ஓரளவு காட்டி மக்களிடையே வெறுப்பையும் எதிர்ப்பையும் உன்னால் ஏற்படுத்த முடிந்ததல்லவா. மற்றொன்று, வர்க்க உணர்வு பெற்ற எம்மிடை சாதி, மத உணர்வே

www.padippakam.com



மறைந்திருப்பதை எமது இயக்கத்தவரிடையே காண்றோமே. இந்த உண்மையையும் நாடகங்கள்மூலம் விளக்கினீர்களே. இவை பாராட்டிற்குரியவை. இவற்றிற்காகவே விட்டேன். நடராசபிள்ளையை ஒருவர் சென்று கொலை செய்வது மிக இலகு. அதைத்தான் நான் விரும்பவில்லை''

மாதவன் சொன்னான்.

''நாங்கள் எல்லோருமாகச் சென்று கொலை செய்வோம்''

''அதையும் நான் விரும்பவில்லை. இதே வேளையில் எனது முன்னைய அனுபவம் ஒன்றை முன்வைத்து நீங்களே இப்பிரச்சனைபற்றி முடிவு செய்யும்படி விடுகிறேன். என் மேல் பொலிஸ் அரெஸ்ட் வாரண்டு இருப்பது யாவருக்கும் தெரியும். சதி, கொலை, கொள்ளை, கற்பழிப்பு ஆகிய தூக்குமரத்தில் ஏற்றத்தக்க குற்றங்களே உள்ளன. இதற்கும் மேலால் இராஜத் துரோகம், பலாத்காரத்திற்கு மக்களைத் தூண்டினேன் என்றும் குற்றச்சாட்டுகள் உள்ளன. இவை பற்றி எல்லோருக்கும் விரிவாகச் சொல்லி நான் இதுநாள் வரை விவாதிக்கவில்லை. சிலருக்கே விபரம் யாவும் தெரிந்திருக்கும். முத்துவேலு என்னை பழங்குடியிருப்புப் பக்கத்திலிருந்தே இங்கு அழைத்து வந்தார்''

''அந்தக் கிராமத்திற்குப் போகுமுன் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?''

சிவபாலன் கேட்டான்.

''கொழும்பிலே தொழிற்சங்க இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்தேன். பல போராட்டங்களை முன்நின்று நடத்தினேன் தொழிலாளர் கோரிக்கைகள் பலவற்றைப் பெற்றோம். வேலை நிறுத்தங்கள் பல வெற்றி பெற்றன. சில தோல்வியடைந்தன. கூலி உயர்வு, தொழிலாளரின் தொழிற்சங்க உரிமைகள் ஆகியவற்றிலேயே பலர் கவனம் செலுத்தினர். அரசியல் ஆதிக்கத்தைக் கைப்பற்றுவதே

www.padippakam.com



தொழிலாளரின் முதற் குறிக்கோளாக இருக்கவேண்டும் என்பதை வற்புறுத்தி வந்தேன். பேரம் பேசும் போதும் அதை மனதில் வைத்து முதலாளிகளுடன் சமரச உடன் படிக்கை ஏற்படாவண்ணம் போராட்டத்தை முன் நடத்தி வந்தேன். இதனால் பலரது வெறுப்புகளுக்கும் ஆளானேன். பத்து வருட தொழிற்சங்க அனுபவம் எனக்குப் பல புதிய விஷயங்களையெல்லாம் போதித்தது. காலப் போக்கில் தத்துவப் படிப்பில் அதிகம் ஈடுபட்டேன். என் அனுபவங் களையும் வைத்து விமர்சனம், சுய விமர்சனம் செய்தேன். என் நண்பர் ஒருவர் என்னை பழங்குடியிருப்பை அண்டிய கிராமங்களுக்கு அடிக்கடி அழைத்துச் சென்று வறிய, நிலமற்ற விவசாயிகளுடன் பழக வைத்தார். புதிய அனுபவம் நான் கற்ற சித்தாந்தத்திற்கும் இணைவதாக இருப்பதை உணர்ந்தறிந்தேன். தொழிற்சங்க இயக்கத்தை விட்டு விவசாயிகளுடன் சேர்ந்து கொண்டேன்''

மாதவன் கூறினான்.

## 36

உங்கள் கொலைக் குற்றத்தைப் பற்றி சொல்லுங்கோ. கேட்க ஆவலாயிருக்கு.

சுவையான துப்பறியும் கதையைக் கேட்க விரும்பும் குழந்தைபோல சிவபாலன் கேட்டான்.

''உண்மையில் நீங்கள் கொலை செய்தீங்களா? பார்த் தாலே ஆரும் நம்ப மாட்டார்கள்''

மூர்த்தி கேட்டான்.

www.padippakam.com



''இதே நடராசபிள்ளையைப் போன்றவர்களைக் கிராமம்தோறும் பார்க்கலாம். பழங்குடியிருப்பிலும் பொன்னம்பலம் பிள்ளை என்று ஒருவன் இருந்தான். அவன் காட்டு ராசா போல் வாழ்ந்தான். தானே ஏழை விவசாயிகளை அடித்து உதைத்துவிட்டு பொலிசாரை வரவழைத்துக் கையிலே கொடுத்து விடுவான். அல்லது தன் காரிலேயே போட்டுச் சென்று பொலிஸ்ரேசனில் தள்ளிவிட்டு வருவான். அதன் மேலும் உதை வாங்கியவன்மேலேயே பொலிஸ் வழக்கும் தொடரும். நாங்கள் விவசாயிகளிடை அவனை எதிரியாக்கிக் கொண்டிருந்தோம். எம் இயக்கத்தையும் நசுக்க அவன் எல்லாவகையிலும் முயன்றான். எம்மிடையேயும் இருவர் உதை வாங்கினர். அவன் கொடுமைகளில் ஆத்திரமடைந்த நாங்கள் நால்வர் இதே போன்ற ஒரு கூட்டத்தில் அவனை ஒழித்துவிட வேண்டும் என தீர்மானித்து அன்றிரவே நால்வருமாக அவன் வீட்டில் கையில் கத்தி, கிறிஸ், வாள், பொல்லு ஆகிய நாலு ஆயுதங்களுடனும் சென்று அடித்து குத்தி, வெட்டி அந்த வர்க்க எதிரியை ஒழித்துக் கட்டினோம்''

''இப்போது மட்டும் நாங்கள் ஏன் அதே போலச் செய்துவிடப்படாது?''

தியாகன் சொன்னான்.

''கற்பழித்த குற்றம் எப்படி வந்தது''

மூர்த்தி கேட்டான்.

''சத்தமிட்ட வேலைக்காரியைப் பிடித்து திமிற விடாமல் அமத்தி வாயில் சீலையை அடைந்துவிட்டுப் புறப்பட்டோம். அதை வைத்துக்கொண்டு அவளின் வாக்குமூலத்துடன் கற்பழிப்பு என்றொரு குற்றத்தையும் சேர்த்தனர். டொக்டர் றிப்போர்ட்டும் அவர்களுக்குச் சாதகமாக இருந்தது. அவன் மனைவி அன்றிரவு அங்கு இல்லை. உண்மையில் மனைவி அங்கு இல்லாத வேளைகளில் அவள்தானாம் அவன் பெண்டாட்டி''

ம—8

www.padippakam.com



மாதவன் சொன்னான்.

''என் கேள்விக்குப் பதில் சொல்லேல்லை''

தியாகன் நினைவூட்டினான்.

''நாங்கள் அன்றிரவு செய்தது சரியா, தவறா என்பதை நாங்கள் முதலில் ஆராயவேண்டும்''

''தவறுதான்''

துரைரத்தினம் சொன்னான்.

''ஏன் தவறு?''

தியாகு கேட்டான்.

''இதுவும் ஒருவகைத் தீவிரவாதமே''

துரைரத்தினம் கூறினான்.

''ஏன்?''

''உண்மையில் வர்க்க விரோதியை இனங்கண்டு கொதித்தெழுந்து அவனைத் தனிமைப்படுத்தி ஒழித்தே தீர வேண்டும் என முடிவு செய்து தாமே முழுக்க செயலாற்ற வேண்டியவர்கள் வறிய, நிலமற்ற விவசாயிகள், கூலி விவசாயிகளாவர். எங்கோ இருந்து வந்த இந்த நால்வருக்கும் அங்கே கொலை செய்வதா வேலை?''

துரைரத்தினம் கேட்டான்.

''நானே ஏற்றுக் கொள்கிறேன். ஏழை விவசாயிகளே கொதித்தெழுந்து ஒன்றுதிரண்டு சென்று அவனை ஒழித்திருக்க வேண்டும். பின்னர் நாங்கள் பின்னே நின்று அவர்கள் செய்தது சரி என்ற மனசாட்சிகள் ஏற்படுத்த வேண்டும். அவன் முன்னர் செய்த கொடுமைகளையெல்லாம் மீண்டும் மீண்டும் மக்களிடை நினைவூட்ட வேண்டும்.''

மாதவன் சொன்னான்.

''அதன்பின் என்ன நடந்தது?''

துரைரத்தினம் கேட்டான். தியாகன் அமைதியடைந்து யாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்தான்.

www.padippakam.com



''பொன்னம்பலம்பிள்ளை கொலை செய்யப்பட்டு விட்டான் என்பதை அறிந்ததும் உடைமை விவசாயிகளும் மற்றவர்களும் கிராமத்தில் இரக்கத்தைப் பரப்பினர். எங்க ஊரவனைப் பிற ஊரவன் கொல்லவா? என்றே கதை வந்தது. ஊர் பிரமுகர்கள் அனுதாபக் கூட்டம் போட்டு அவன் கிராமத்திற்கு செய்த நன்மைகளையெல்லாம் பறை சாற்றினர். கோவில் குருக்கள், கிராமச் சங்கத் தலைவர். மணியகாரன், பொலிசார், பாடசாலை ஆசிரியர் எல்லோருமே அவனைத் தேவ புருஷனாக்கினர். முன்னர் அவனை எதிரியாகக் கருதிய விவசாயிகளில் ஒரு பகுதியினர் எமக்கு எதிராகத் திருப்பினர்.''

''எல்லா விவசாயிகளுமே மாறிவிட்டனரா?''

''இல்லை. அப்போதும் அங்கேயே எங்களைத் தலைமறைவாக, வர்க்க உணர்வு பெற்ற, இயக்கத்தை முழு மூச்சாக நடாத்திய விவசாயிகள் காப்பாற்றி வைத்திருந்தனர். ஆயினும் நாங்கள் எமது தீவிரவாதத் தவறை உணர்ந்து கொண்டோம். புதிய இயக்கத்தவர்களை அங்கு வரவழைத்து விட்டு நாங்கள் ஆங்காங்கே திக்காகப் பிரிந்து செல்லத் தீர்மானித்தோம். என்னை முத்துவேலு ஒரு இரவு இங்கு அழைத்து வந்தார். இது என் அனுபவம். எத்தனை தத்துவம் படித்தாலும் பலவற்றை நாங்கள் அனுபவ வாயிலாகவே படிக்கிறோம். அதுவே சரியான படிப்புமாகும். கடந்த காலத் தவறுகளை நாங்கள் தவிர்க்க வேண்டும். விமர்சனத்திற்கு நாம் ஒரு போதும் அஞ்சுவதில்லை. இப்போது தியாகு என்ன சொல்கிறாய்?''

மாதவன் கேட்டான்.

''இப்போதுதான் தெளிவு ஏற்பட்டுள்ளது''

''சே குவேரா இயக்கத்தினருக்கும் எமக்கும் உள்ள வேறுபாடும் இதுவேதான்''.

படிப்பகம்

www.padippakam.com



மாதவன் சொல்லி விட்டு மேலும் தொடர்ந்தான்:

''தியாகு, நீ படித்த விஷயத்தையே செயலாற்ற வேண்டிய நிலை வரும்போது, வேறு உயர்மட்ட உணர்வுகள் தலை எடுக்க, இது மக்கள் யுத்தம் என்பதை நீ மறந்து விட்டாய்''

'ஏதைச் சொல்லுகிறீங்கள்?''

''பொது மக்கள் இன்னும் விழித்து எழாத நிலையில் நாம் தாக்குதலில் செல்ல முயன்றால், அது துணிச்சல் வாதம்; பொது மக்கள் விரும்பாத ஒரு விஷயத்தைச் செய்யும் படி நாம் அவர்களை வழி நடத்துவதில் பிடிவாதமாய் நின்றால், நாம் நிச்சயம் தோல்வியடைவோம். பொது மக்கள் முன்னேற்றத்தைக் கோரும்போது, நாம் முன்னேறா விட்டால், அது வலதுசாரி சந்தர்ப்பவாதம் ஆகும்''

''ஓமோம் இப்பதான் நினைவு வந்தது''

''இனிமேல் மட்டும் இதை மறந்து விடாதே''

மாதவன் எச்சரித்தான். தியாகன் சொன்னான்:

''இனிமேல் நான் மறக்கவே மாட்டேன். என் நாடகத்தையும் மறுதடவை திருத்தி விடுவேன்''

தற்போள்ள சட்ட அமைப்புகளை மீறும் செயல்களில் ஈடுபடும்போது மக்கள் யாவரையும் விழித்தெழச் செய்து அந் நடவடிக்கையில் நாம் அனைவரையும் ஒருமித்து ஈடுபடச் செய்யவேண்டும் என்பதை மாதவன் வலியுறுத்திச் சொன்னான். நடராச பிள்ளையின் நாசவேலைகளை மேலும் மேலும் அம்பலப்படுத்தி, விவசாயிகளை ஒன்று திரட்டி, அவர்களையே இதற்கு முடிவு காணச் செய்யவேண்டும் என்பதையாவரும் இறுதியில் ஒப்புக்கொண்டனர்.

''நாங்கள் இரவு பகலாய் பேசிக்கொண்டேயிருக்கிறோம். இன்னும் செய்கை எதிலும் இறங்கவில்லை''

தியாகன் தன் துடிப்பை அமுக்கும் மனக்குறையைச் சொன்னான். மாதவன் உடனே பதில் கூறினான்.

www.padippakam.com



''அப்படிச் சொல்லாதே. நாம் இரவு பகலாக எங்கள் குறிக்கோளை நோக்கியே செயலாற்றிக் கொண்டிருக் கிறோம். சரியான கருத்துகள் மக்களால் கிரகித்துக் கொள் ளப்பட்டதும் அதுவே சமுதாயத்தை மாற்றுகின்ற, செய லூக்கத்தைத் தரும் மாபெரும் சக்தியாக மாறுவதை நீ காண்பாய்''

# 37

அன்று பாடசாலை விடுமுறை நாள். பவளத்தின் மூத் தவன் சந்திரன் மாதவனிடம் பாடம் கேட்டுப் படித்துக் கொண்டிருந்தான். குழந்தை ஆனந்தன் விழுந்து, எழுந்து நடைபயின்று கொண்டிருந்தான்.

''அம்மா உங்களைக் கேட்டுப் பாடம் படிக்கச் சொல் லுறா. ஆனால் நீங்கள் சொல்லித்தாறதெல்லாம் பிழை. வாத்தியாரே என்னை ஒரு மாதிரிப் பார்க்கிறார்''

சந்திரன் சொல்லிக்கொண்டிருந்தபோது சிவபாலன் அங்கு வந்தான்.

''என்ன சிவபாலன், இராத்திரி நல்லாய் தூங்கி னியா?''

மாதவன் கேட்டான்.

''விடியப்புறமாய் படுத்தும் அத்தனை தூக்கம் வரேல்லை''

''தெளிவு ஏற்படும்வரை கொஞ்சம் கலக்கம் இருக்கத் தான் செய்யும். தியாகனிடம் புத்தகங்களை வாங்கி இரண்டு மூன்று தடவை படிக்கவேண்டும். பல்கலைக்கழகப் பாடப்

படிப்பகம்

www.padippakam.com



புத்தகங்களையெல்லாம் விவேகமாகப் படிக்கவேண்டும். அல்லது விட்டுவிடவேண்டும். அல்லது அந்தக் கல்வி உன்னையும் அடிமையாக்கிவிடும்''

''படிப்பிலும் பார்க்க அனுபவத்தோடு ஒட்டியவர்களுடன் கலந்து பேசுவதைப் போன்று தெளிவு ஏற்படுத்தக் கூடியது எதுவுமில்லை''

''அதுதான் உண்மை. வெறும் புத்தகப் படிப்பு அதிகம் பயன் தராது''

ஆனந்தன் தள்ளுநடை போட்டபடி வந்து மாதவனின் தோளில் விழ்ந்தான். அவனைப் பிடித்து மாதவன் அணைத்துக்கொண்டான்.

''நாங்கள் நிலங்களைப் பறிக்கவேண்டும் என்று போராடுகிறோம். கிராமத்து நிலங்களையெல்லாம் விவசாயிகளிடை பிரித்தால் தலைக்கு அரை ஏக்கர் நிலம் கூடத் தேறாதே''

சிவபாலன் சொன்னான்.

''நிலத்துக்காகவோ பயிருக்காகவோ மட்டும் எமது விவசாயிகள் போராடவில்லை. அதன்மூலம் அரசியல் ஆதிக்கத்தையும் கைப்பற்றவே போராடுகிறார்கள்''

சிவபாலனின் முகத்தில் அப் பதில் ஒருவித மலர்ச்சியை ஏற்படுத்தியது.

''போராட்டம் நடாத்த மக்களிடம் ஆயுதமில்லையே. எதிரிகளிடம் குண்டாந்தடிகள், துப்பாக்கிகள், எறிகுண்டுகள் எல்லாம் இருக்கே''

''ஏனில்லை. அவர்களுக்குப் பழக்கமான ஆயுதங்களில்லையா? மண்வெட்டி, கோடாலி, அலவாங்கு, பொல்லு, கல்லு, கத்தி, அரிவாள், கிறிஸ் இப்படி எத்தனையோ இருக்கின்றன. இது மக்கள் யுத்தம் ஆயுதங்களைச் சேர்ந்துக் குவித்து வைப்பதில்லை. கையில் கிடைப்பதைக்கொண்டு

www.padippakam.com



போரிடுவார்கள். துப்பாக்கி தேவைப்படும்போது எதிரியிடமிருந்தே கைப்பற்றிப் போரிடுவார்கள் தேவை ஏற்பட்டதும் அதிலும் பயிற்சி பெற்றுக்கொள்வார்கள். யுத்தத்தில் ஆயுதங்கள் ஒரு முக்கியமான அம்சம்தான்; ஆனால் தீர்க்கமான அம்சமல்ல. தீர்க்கமான அம்சம் மக்களன்றிப் பொருட்களல்ல என்பதை எப்போதும் மனதில் பதிந்து வைத்துக் கொள்ள வேண்டும்''

''பொறுத்த வேளையில் போராட்டத்தைக் கைவிட்டு விட்டு உங்களையெல்லாம் விவசாயிகள் காட்டிக்கொடுத்து விட்டால் என்ன செய்வீர்கள்? ஆரை இந்தக் காலத்தில் நம்பலாம்''

கேலிச்சிரிப்புடன் சிவபாலன் கேட்டான்.

''வறிய விவசாயிகள், நிலமற்ற விவசாயிகளையே நாங்கள் நம்புகிறோம். அவர்களுடைய சிந்தனையில் சரியான கருத்துக்கள் பிடிபட்டதும் போராடுவார்கள். உங்களைப் போன்ற பச்சோந்திகளை நாங்கள் முற்றாக ஒருபோதும் நம்பமாட்டோம். அதனால்தானே நீகூட இன்னும் தயங்கிக் கொண்டேயிருக்கிறாய். உன் கேள்வியிலிருந்தே உங்கள் இனத்தின் பச்சோந்தித்தனம் தெரிகிறதே''

மாதவன் காரமாகவே பேசினான்.

''அப்பிடியெல்லாம் நான் போய்விடமாட்டன். அப்பு வீட்டிலை எந்த நேரமும் படியெடா, ஊர் சுற்றாதை என்று பேசிக்கொண்டேயிருக்கிறார். நான் ஒரேயடியாய் வீட்டை விட்டே வெளிக்கிளம்ப வேண்டிய காலமும் இனித் தூரத்திலில்லை''

''நீயும் அவர்களுடைய சொத்துக்காக ஒட்டியிருக்கப் பார்ப்பாய். மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்றால் உந்தப் பந்தங்களையெல்லாம் துறந்துவிட வேண்டும். மகாத்மாகாந்தி நூல்களைப் படித்தாலும் இதைத்தான் சொல்லியிருக்கிறார்''

www.padippakam.com



''எதிரிகளைத் தாக்குவது, ஒழித்துக்கட்டுவது ஆகிய வற்றை நினைக்கத்தான் இன்னும் கொஞ்சம் பயமா யிருக்கு''

''யுத்தத்தின் நோக்கமே தன்னைப் பாதுகாத்து, எதிரியை அழிப்பதாகும். எதிரியை அழிப்பதென்றால், அவனை நிராயுத பாணியாக்குவது. அதாவது எதிர்க்கும் ஆற்றலை அவனிடமிருந்து பறிமுதல் செய்வதன்றி அவ னுடைய படைகள் முழுவதையும் கொன்று குவிப்பதல்ல. இதை நீ திரும்பத் திரும்ப படித்துக்கொள்ள வேண்டும். தாக்குதலின் உடனடி நோக்கம் எதிரியை அழிப்பது. அதே சமயத்தில் அது சுய பாதுகாப்பாகவும் விளங்கும். ஏனெனில் எதிரியை நீ அழிக்காவிட்டால், நீ அழிக்கப்படுவாய். வர்க்க உணர்வுகள் கூர்மையடையும்போது போராட்டம் தவிர்க்க முடியாதது. தன்னைக் கொல்லவரும் பசுவையும் கொல் என்று பகவத்கீதை சொல்லவில்லையா? உடைமை யுத்தங் களின் முன் உறவுகளே மறைந்து விடுகின்றன. பாரதப் போரைப் படித்தாலே தெரியும். பகவத்கீதையே இதைத் தான் சொல்கிறது''

மாதவனின் வாயிலிருந்து வார்த்தைகள் உருண்டு கொண்டிருந்தன. ஒவ்வொரு வினாவிற்கும் பதில் தயாராக வைத்திருப்பவன்போல அவன் பேசினான். ஆனந்தனைத் தூக்கி தோளில் போட்டுக்கொண்டே தலைவாசலில் உலா வினான். ஆனந்தன் முல்லைபோல் வெடித்திருந்த முதற் பற்களால் மாதவனின் தோளைப் பதம் பார்த்தான்.

பவளம் புல்லுக் கடகத்துடன் வயலிலிருந்து வந்தாள். அவளைக் கண்டதும் ஆடுகள் அழுதன. அந்த அரவம் கேட்டதும் ஆனந்தனும் அழ ஆரம்பித்துவிட்டான். அவன் துள்ளித் துள்ளி ஆர்வத்தோடு முன்புறமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். கால் முகம் கழுவிவிட்டு வந்து பவளம் அவனைத் தூக்கிக் கொண்டாள்.

www.padippakam.com



''ஏதேன் குடிச்சீங்களா? ஊறுகாய் கரைச்சுத் தரட்டா?''

பவளம் கேட்டாள்.

''சரி, என்ன தந்தாலும் நாங்கதானே வேண்டாமென்று சொல்லமாட்டமே''

''எனக்குமம்மா''

சந்திரன் சொன்னான்.

பவளம் குழந்தையோடு குசினிப் பக்கமாகச் சென்றாள்.

# 38

சிறிது நேரத்தில் தியாகனும் வந்து சேர்ந்தான். சந்திரனுக்கு அவனைக் கண்டால் ஒரே சந்தோசம். அவன் நல்ல நல்ல கதைகள் சொல்லுவான். ஆனந்தனும் வாஞ்சையுடன் தியாகனின் தோளில் பாய்வான்.

பவளம் வந்ததும் ஆனந்தனுக்குக் கையை நீட்டினான். அவனும் 'களுக்' என்று சிரித்தபடியே பாய்ந்தான்.

'இந்த நாட்டின் செல்வமே வா' என்று கூறியபடி ஏந்திக் கொண்டான்.

''இந்த நாட்டின் செல்வந்தான். குடிக்கப் பாலில்லை. போடச் சட்டையில்லை''

மாதவன் சொன்னான்.

''வறுமைதான் நாட்டின் தற்போதைய செல்வம்''

சிவபாலன் சொன்னான்.

www.padippakam.com



''புரட்சியை வருங்காலத்துக்குச் கொண்டு செல்லும் வீரக் குஞ்சுகள் என்று இனிமேல் சொல்லு. நாட்டின் செல்வங்கள் என்று சொல்லவேண்டாம்''.

மாதவன் சொன்னான்.

''மாமா புதுக் கதை சொல்லு. மாமா புதுக்கதை சொல்லு'' என்று சந்திரன் வந்து தியாகனைப் பிடித்துக் கொண்டான்.

''உனக்குத் தெரிந்த புதுக்கதைகளை முதலில் நீ சொல்லு பிறகு நான் சொல்லித் தாறன்''

''நரியை ஏமாற்றிய காக்கா—''

''அது என்ன கதை எனக்குச் சொல்லு?''

சிவபாலன் கேட்டான்.

''அதுதான் காக்காவைப் பார்த்து 'அழகான காக்கா பாட்டுப் பாடு' என்று நரி சொன்னதும் காக்கா வாயிலிருந்த வடையைக் காலுக்கிடையே வைச்சுக்கொண்டு 'கா...கா' என்று பாடிச்சுது. நரிப்பிள்ளை ஏமாந்து போனார்''

''நல்ல கதையாய் இருக்கே! வேறே என்ன கதை உனக்குத் தெயுயும்''

''மூடக் கிழவன் கதை''

''அது என்ன?''

சிவபாலன் கேட்டான்.

''ஒரு ஊரிலை ஒரு கிழவன் இருந்தான். அவன் வீட்டுக்கு முன்னால் இரண்டு பெரிய மலை இருந்துதாம். கிழவன் தன் பிள்ளைகளோடு அந்த மலையை உடைக்கத் தொடங்கினானாம். ஊரிலே உள்ள அறிவான கிழவன் உன்னால் முடியுமா? என்று அவனைக் கேலி செய்தானாம். அதுக்கு கிழவன் மலை உதுக்கு மேலை வளரமாட்டுது. என்ரை பிள்ளைகள், பேரப்பிள்ளையள், அதின்ரை பிள்ளை

www.padippakam.com



யள் இப்பிடியே எல்லாரும் தொடர்ந்து உடைச்சுக்கொண்டு போனால் மலையே போய்விடும் என்றான். மூடக்கிழவன் இரவு பகலாய் மலையைக் கிண்டிக்கொண்டே யிருந்தான். கடவுள் மனமிரங்கி தேவதைகளை அனுப்பினார். தேவதைகள் முதுகில் மலைகளைத் தூக்கிச் சென்று விட்டார்கள்''

''கெட்டிக்காரன் நல்ல கதையெல்லாம் படித்திருக்கிறாய்''

சிவபாலன் முதுகில் தட்டிப் பாராட்டினான்.

''இந்தக் கதை மூலம் என்ன பாடம் படித்தாய்?''

தியாகன் கேட்டான்.

''மன வைராக்கியத்தோடு வேலை செய்தால் மலைகளைக்கூட நாங்கள் உடைத்தெறியலாம்''

சந்திரன் சொன்னான்.

''நீ எந்த மலையை உடைக்கப் போகிறாய்''

''அப்பாவைக் கொன்ற உடையாளை''

''அது உன்னாலை முடியுமா?''

''இல்லாவிட்டால் அவன்ரை மகள் பள்ளியிலை படிக்கிறாளே. அவள்ளையென்றாலும் ஒரு நாளைக்கு உதைக்க வேண்டும்''

சந்திரன் ஆத்திரத்தோடு நிலத்தை உதைத்தபடியே சொன்னான்.

தியாகன் முதலில் சிரித்தான். பின்னர் சந்திரனுக்கு தேனீக்கூடு பற்றியும் ஒரு கதை சொன்னான். பிறகு வெற்றிலை வாங்கி வரும்படி அவனைக் கடைக்கு அனுப்பினான்.

''அரை நிலப்பிரபுத்துவ அரைக்கொலோனியல் நாடு இலங்கை என்பதை எப்படி அறிவது?''

சிவபாலன் கேட்டான்.

படிப்பகம்

www.padippakam.com



''இப்பவே தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்றியிருக்கிறது ஆர்? சுதந்திரக் கட்சி—நிலவுடைமைக்காரர்தானே. எங்கள் ஏற்றுமதியில் எழுபது சதவிகிதமான பொருளாதாரம் தேயிலையில் தங்கியிருக்கிறது. அதெல்லாம் வெள்ளைக் காரன் கையில். அவன் சும்மா சுதந்திரம் என்ற பெயரில் நாடாளுமன்றம் என்ற ஒன்றைக் கொடுத்துவிட்டு எங் களையே ஆட்டிப் படைக்கிறான். அவனுக்கு ஆதரவாக, அச்சத்தோடு தலையாட்டுவதுதானே எமது தலைவர்கள் வேலை. அப்போதுதான் அவன் இவர்களுக்கும் ஆதரவா யிருப்பான்''

தியாகனே பதில் சொன்னான்.

இடையில் மூர்த்தியும் வந்து சேர்ந்தான்.

நாட்டில் பூஷ்வா ஜனநாயகம் எந்த அளவில் நிலவு கிறது என்பதைப் பற்றியும் உரையாடல் தொடர்ந்தது.

''பிரதான முரண்பாடு நிலமும் மக்களுமாக இருக்கும் வேளை பூஷ்வா ஜனநாயகம் என்ற பேச்சேயில்லை. அது தானே அரை நிலப்பிரபுத்துவம் அரைக் காலனி நாடென் றும் தீர்மானித்தோமே''

தியாகன் கூறினான். மேலும் அவனே தொடர்ந்து சொன்னான்:

''இந்தீர்மானத்தை யொட்டித்தானே நாமும் போராட் டப்பாதையை மாற்றியிருக்கிறோம்''

''எனக்குப் புரியவில்லை; என்ன சொல்லுகிறீர்கள்?'' சிவபாலன் கேட்டான்.

''தியாகு, அந்தப் புத்தகத்தை எடுத்துப் படித்துக் காட்டு''

மாதவன் சொன்னான்.

தியாகன் உள்ளே சென்று புத்தகத்தை எடுத்துப் பிரித்து அடையாளம் செய்த பகுதியைப் படித்தான்:

படிப்பகம்

www.padippakam.com



''முதலாளித்துவ நாடுகள் உள்நாட்டிலே பூஷ்வா ஜனநாயகத்தை (நிலபிரபுத்துவமல்ல) யுத்தம் அல்லது பாஸிசம் இல்லாத வேளை கடைப்பிடிக்கின்ற இந்நாடு களில் பாட்டாளி வர்க்கம் தக்க வேளை வரும்போது முற்றுகையிட்டு தாக்கவேண்டும். முதல் வழி நகரங்களைக் கைப்பற்றிப் பின்னர் கிராமப்புறங்களுக்கு முன்னேற வேண்டும்...சுதந்திரமும் ஜனநாயகமுமில்லாத அரைக் காலனி அரைப் பிரபுத்துவ நாட்டில்—உள்நாட்டில் பிரபுத்து வத்தின் கொடுமையும் வெளிநாட்டுத் தொடர்பில் சுதந்திர மில்லாது ஏகாதிபத்திய தாக்கமும் நிலவும்போது — நீண்ட கால சட்டரீதியான போராட்டத்தில் ஈடுபடாது, முற்றுகை யிட்டு யுத்தமிடவேண்டும்—பெரிய நகரங்களை முதலில் கைப் பற்றி பின் கிராமங்களுக்கு முன்னேறுவதல்ல — அதற்கு முற்றும் மாறாக, கிராமங்களை முதலில் கைப்பற்றி பின்னர் நகரங்களுக்கு முன்னேற வேண்டும்...''

''இந்த இரண்டு முறைகளும் பரீட்சிக்கப்பட்டு நிரூபிக் கப்பட்டு விட்டன.''

மாதவன் கூறினான்.

''முதலாவது ரஷ்யா, இரண்டாவது சீனா.''

''நாட்டின் பிரதான முரண்பாடு மூலதனமும் உழைப்பும் என்று கூறுபவர்கள் இன்றும் கொழும்புமா நகரிலே வேலை நிறுத்தப் போராட்டங்கள். பொருளாதார வசதி பெறு வது என்ற சுவர்களிடையே அவர்கள் போராட்டம் அடங்கி விடுகிறது.''

தியாகன் சொன்னான்.

''ஏன் அப்பிடிச் சொல்லுகிறாய்? அமைதிப் புரட்சி நடத்தி சோஷலிஸ ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார் கள் என்று சொல்லேன்.''

மூர்த்தி தியாகனைத் திருத்தினான்.

www.padippakam.com



''சோஷலிச ஆட்சியிலும் வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் நடக்கின்றவே. இதுதான் பெரிய ஆச்சரிடம்.''

மாதவன் நளினமாகச் சொன்னான்.

''ஆசிய, ஆப்பிரிக்க, லத்தின் அமெரிக்க காலனி நாடுகளில் நடாத்தும் அத்துமீறிய சுரண்டலின் பங்கை ஏகாதிபத்திய நாடுகள் தம் நாட்டுத் தொழிலாளருக்கும் பகிர்வதாலேயே ஏகாதிபத்திய நாட்டுத் தொழிலாளர் தம் நாட்டு முதலாளித்துவத்தை இன்னும் எதிர்த்துப் போரிட்டு ஒழித்துக் கட்டாது இருக்கிறார்கள் என்று அன்று சொன்னீர்கள். அதேபோல இலங்கையில் ஏழை நிலமற்ற விவசாயிகளையும் தோட்டத் தொழிலாளர்களையும் தற்போதைய முதலாளிகளும் அரசும் அத்துமீறிச் சுரண்டி தொழிலாளிகளுடன் பகிர்வதால்தான் தொழிலாளரிடை இங்கு புரட்சியுணர்வு குறைந்து வருகிறது. பாராளு மன்றத்தில் அதிக நம்பிக்கை வைக்கிறார்கள் என்று கூறுவீர்களா?''

தியாகன் மாதவனைப் பார்த்துக் கேட்டான்.

அவ்விஷயம்பற்றி அவ்வேளை ஆராய விரும்பாதவனாக மாதவன் சொன்னான்:

''நீ சொல்லுவதிலும் உண்மை இருக்கத்தான் செய்கிறது. ஆனாலும் இதைப்பற்றி தனிய ஒரு தடவை ஆராய்ந்து விவாதிப்போம்''

## 39

சிறுபோக அறுவடை ஆரம்பமாகிவிட்டது. பலவார ஓய்வின் பின் உடல் தளரும் உழைப்பு. அறுவடை செய்தால் வாரத்திற்கும் கடன்காரருக்குமே போதாது என்று கவலைப்படும் விவசாயிகளே பெரும்பான்மையோர். அறு

www.padippakam.com



வடைச் செலவிற்கே அவர்களிடம் பணமில்லை. மிகவும் இக்கட்டான விவசாயிகளுக்கு இயக்கத்தவர் உதவினர். நடராச பிள்ளையின் சுரண்டலைத் தாங்க முடியாது வெந்த நெஞ்சங்களுடன் இயக்கத்தவரை நாடி வந்தவர்கள் யாவருக்கும் அவர்கள் உதவினர்.

மாதவனே அறுவடையில் முன்னின்று பலருக்கு உதவினான். விவசாயிகளுடன் சேர்ந்து அவர்களது உழைப்பின் வேதனையிலும் பங்கு கொண்டான். அவர்களாக உணவு கொடுத்தால் மட்டும் உண்பான்.

''ஒவ்வொரு மணி நெல்லும் உங்கள் வியர்வைத் துளியிலிருந்து தோன்றியவை. அவற்றை மற்றவன் அபகரிக்க விடப்படாது.''

நாரி தோவோடு நெற்கதிர்களை அறுக்கும்போதே மாதவன் சொல்வான்.

போரடித்த நெல்லை அதே இடத்திலேயே குறைந்த விலையில் நடராசபிள்ளை, பழைய விதானை கந்தையா, விவசாய கமிட்டித் தலைவர் தர்மலிங்கம் ஆகியோர் வாங்கி தமது லொறியில் ஏற்றி அரசாங்க கூட்டுப் பண்டசாலைகளில் கொடுத்து புசல் பதின்நாலு ரூபா வீதம் உடனேயே செக் மூலம் பணம் பெற்றனர். அவர்கள் புசலொன்றுக்கு பதினொன்று பன்னிரண்டு ரூபா விலைப்படியே விசைாயிகளிடம் பணம் கொடுத்தனர்.

எட்டுப் பத்து மைல் தொலைவிலுள்ள கூட்டுறவுச் சங்கத்திற்கு ஏற்றிச் சென்று நேரில் கொடுக்கத்தக்க வசதி வறிய விவசாயிகளிடமில்லை. வண்டியில் ஏற்றிச் சென்றாலும் கூட்டுறவுச் சங்கத்திலுள்ளவன் நெல்லைப்பற்றி குறை சொல்வான். 'இன்று நேரமில்லை, நாளைக்குவா' என்றும் சொல்லி விடுவான். மறுநாள்வரை நெல்லைப் பாதுகாத்து வைக்கவேண்டும். பிறகும் அவன் அரசாங்கச் சட்டங்களை ஏழை விவசாயிகளிடமே பேசுவான். பணத்திற்கு செக்

படிப்பகம்

www.padippakam.com



கொடுப்பான். அதை மாற்றுவதற்கு இன்னொரு பெரிய மனுஷனை அல்லது கமிஷனோடு மாற்றும் வியாபாரியைப் பிடிக்க் வேண்டும்.

நேரடியாக நெல்லை கூட்டுறவுப் பண்டகசாலையில் கொடுக்கச் சென்ற பலரின் வேதனை நிறைத்த கதைகளை காலையில் வயலில் கஞ்சிகுடிக்கும் வேளையில் கேள்விப்பட்ட போது மாதவன் சொன்னான்:

''இது உங்கள் அரசாங்கமல்ல. அவனது அரசாங்கம். அவன் தனது வசதியைப் பொறுத்தே கூட்டுறவுச் சங்கம் தொடக்கம் எல்லா ஸ்தாபானங்களையும் அமைத்துக் கொள்வான். உத்தரவாதக் கொள்வனவு விலையைக்கூட அவன் தன் லாப வசதிக்காகத்தான் வைத்துக் கொள்கிறான். அரசாங்கமே அவனது அரசாங்கம்தானே. பொதுப் பணத்தில் மலிவாகக் கொடுக்கப்படும் உரம், கடன் வசதிகள் வருமானவரிச் சலுகை எல்லாவற்றையுமே பயன்படுத்திக் கொள்பவன் அவனேதான். உங்களைத் தேயச் செய்து அவனே வளர்ந்து கொண்டிருக்கிறான். நடராசபிள்ளை கந்தையன் ஆகியோரைப் பார்த்தாலே தெரியேல்லையா. காலப்போக்கில் உங்கள் நிலங்களையெல்லாம் பறித்து உங்கள் எல்லோரையுமே கூலியாக்கிப் போடுவான். கூலி வேலையாவது பிறகு கிடைக்கும் என்று நம்பிவிட வேண்டாம். அவன் டிராக்டர்களை வாங்கி வைத்துக் கொண்டு உங்களை கலைத்து விடுவான். களைபிடுங்கும் வேலையே கிடையாது. மேல் நாட்டிலிருந்து களைகளை ஒழிக்கத்தக்க மருந்துகளை வரவழைப்பான். உங்களுக்கு எதிர்கால வாழ்வு வேண்டுமென்றால் இவர்களை ஒழித்துக் கட்டவேண்டும். சமுதாய விரோதிகள் இவர்கள்தான்' களை பிடுங்குவது போல இவர்களைத் தான் பிடுங்கி எறிந்து கொண்டே இவர்களுக்குப் பின்னணியாக, பாதுகாப்பளிக்க முன்வரும் அரசையும் ஒழித்துக் கட்டவேண்டும். அதன்மூலம்தான் உங்களுக்கு எதிர்கால வாழ்வு கிடைக்கும்.''

www.padippakam.com



''இப்பவே உடையான் நில விலையை உயர்த்தி கேட்கிற விலையெல்லாம் கொடுத்து நிலம் வாங்குகிறான்''

''அவன் பல காரணங்களுக்காக வாங்குவான். கறுப்புப் பணத்தை மறைப்பதற்காக ஏக்கரை இரண்டாயிரம் ரூபாய் படி கொடுத்து வாங்கி ஐநூறு ரூபா விலையில் உறுதி எழுதச் செய்வான். ஆனை போன்ற டிராக்டர்களுக்கு தீனி என்ற வேலை போடவேண்டுமே என்பதற்காகவும் நிலம் வாங்குவான். குளங்கள் திருத்தப்பட்டு தண்ணீர் வசதி இரு போகத்திற்கும் வரப்போகிறது என்பதை முன் கூட்டியே அறிந்திருப்பான். அல்லது நிலத்தை வாங்கிவிட்டு மந்திரியிடம் போய் தண்ணீர் வசதிக்கு ஏற்பாடு செய் என்று கேட்பான். தண்ணீர் வசதி வந்ததும் 'அடே மலியக் கொடுத்துவிட்டோமே' என்று நீங்களெல்லோரும் வாயைப் பிளப்பீர்கள். இவனை ஒழித்துக்கட்டி போராட்டத்தைத் தொடர்வது தவிர வேறு எவ்வழியாகவும் இந்தச் சமூகத் துரோகத்திற்கு முடிவு கட்ட முடியாது.''

''இந்தியாவைப் போல உச்சவரம்புச் சட்டம் இங்கே கொண்டுவர மாட்டார்களா?''

விவசாயி வேலுபிள்ளை கேட்டார்.

''அரசை ஏற்றபின் முதலாளித்துவம், தரகு முதலாளித்துவ குணங்கள் கட்டாயம் ஏற்பட்டபோதும் இது அடிப்படையாக நிலவுடைமைக்காரரின் அரசாகவும் தொடரவே செய்யும். தம் சுயநலனுக்கு எதிரான சட்டத்தை இவர்கள் கொண்டு வருவார்களா? அதிக நிலம் வைத்திருப்பவர்களுக்குத்தானே கடன் வசதிகள் அதிகம் செய்துகொடுக்கிறார்கள். எட்டு ஒன்பது சதவீத வட்டியில் அவன் வங்கியில் கடன் பெற்று உங்களுக்கு அதே பணத்தைக் கடன் தந்து ஐம்பது தொடக்கம் நூறு சதவீத வட்டிவரை அவன் உழைப்பான். அந்தச் சுரண்டல் மூலம் பெற்ற பணத்தில்



படிப்பகம்

www.padippakam.com



அவன் உங்கள் நிலத்தையே பிறகு கேட்கும் விலை தந்து வாங்குவான். உங்களிடம் சுரண்டப்பெற்ற பணத்தை அவன் உங்கள் நிலத்தின் விலைக்காகத் தரும் பணம், அவன் உழைத்த பணம் என்ற மயக்கத்தோடு நீங்கள் பெற்றுக் கொள்வீர்கள். பிறகு அவன் சொல்லும் விலையில் அவனிடமே அரிசி வாங்குவீர்கள். எப்படியான ஏமாற்று வித்தை பார்த்தீர்களா?''

''இந்தியாவைப் போல நாங்களும் நிலப்பறி இயக்கம் நடாத்தி இந்த நிலமெல்லாவற்றையும் கைப்பற்றி விட்டால்...''

அரும்பிய மீசையோடும் கையில் அருவாளோடும் நின்ற யோகேந்திரன் கேட்டான்.

''இந்தியாவிலேயே நிலப்பறி இயக்கங்களைப் பார்த்தே உச்சவரம்பு என்ற வர்க்க சமரசம் பேசும் கண்துடைப்புச் சட்டங்களைக் கொண்டு வருகிறார்கள். நிலமானிய சமுதாய அமைப்பில் உச்சவரம்பு என்பதெல்லாம் சட்டத்துக்கு டிமிக்கி கொடுக்கிற ஒரு விளையாட்டு. தன் கீழ் உள்ள ஒரு விவசாயியின் பெயரில் நிலத்தை மாற்றி எழுதிவிட்டு அதே நிலவுடைமைக்காரன் நெல்லை விதைத்து அறுவடை செய்து கொள்வான். இங்கே உடையான் செய்யமாட்டானா? அவன் சொல்வதைக் கேட்டு நடக்க எத்தனை அடியாட்கள் தயாராயிருப்பார்கள். வருமானவரி போன்றவற்றிற்கே இதன் மூலம் டிமிக்கி கொடுக்கலாம். நாங்கள் நிலப்பறி இயக்கம் நடாத்தி நிலத்தைப் பகிர்ந்து விட்டால் ஆளுக்கு அரை ஏக்கர் அல்லது ஒரு ஏக்கர்தான் தேறும். அது எங்கள் பிரச்சினைகளையெல்லாம் தீர்க்க முடியாது. அரசியல் ஆதிக்கம்தான் எமது முதல் குறிக்கோளாக இருக்க வேண்டும். நிலப்பறி இயக்கத்தை அரசியல் ஆதிக்கத்தை பெறுவதற்குரிய நீண்ட போராட்டத்தைத் தொடக்கும ஒரு படிக்கல்லாக ஆரம்பிக்க வேண்டும்''

www.padippakam.com

# 40

மழை கருக்கட்டுவதைப் பார்த்த விவசாயிகள் சுறு சுறுப்பாக வேலை செய்தனர். போர் அடுக்கும் வேலையில் இரவிலும் ஈடுபட்டிருந்தனர். வளர்பிறை எட்டாம் நாள் முன் நிலவு அவர்களுக்குத் துணைசெய்தது.

''இயற்கையின் அழிவிற்கும் நாம் எப்பொழுதும் விழிப் பாக இருக்கவேண்டும்''

மாதவன் நினைவூட்டினான்.

நள்ளிரவின் பின் வயல் புறமாக இருந்த ஒரு கொட்டில் நிலத்தில் வைக்கலைப் பரப்பி அதன்மேல் சாக்கையும் சால் வைத் துண்டையும் போட்டுப் படுத்துக் கொண்டனர்.

அதிகாலையில் கீழ்வானம் செந்நிறமாகக் காட்சியளித் தது. அவற்றிடையே ஒளிப்பிளம்பாக சூரியன் உதித்தான். காலைக் கதிரவனின் கரங்கள் அவர்களைத் தூக்கம் விட்டு எழச்செய்தன. புதுநாளில் புதுநம்பிக்கையோடும் வைராக் கியத்துடனும் அடுத்த வயலுக்கு அறுவடைக்குச் சென்றனர்.

ஆண்களும் பெண்களும் உடல் அலுப்பை மறந்து மன வைராக்கியத்துடன் சாய்ந்திருந்த நெற்கதிர்களை அறுத்து வைத்தனர். பையன்கள் அவற்றை அள்ளி வரப்புகளில் அடுக்கினர்.

விழுகிழவர், பையன்கள், பெட்டைகள் தொடக்கம் பெறுமாதக் கர்ப்பிணிகள் வரை யாவரும் வேலையில் ஈடு பட்டிருந்தனர். நோயாளர்கூட கிராம வீடுகளில் படுத் திருக்கவில்லை.

வெய்யில்வேறு நெருப்பாகக் கொளுத்திக் கொண் டிருந்தது. வியர்வைத் துளிகள் வயலை உவராக்கிக் கொண் டிருந்தன.

படிப்பகம்

www.padippakam.com



பொங்கல் படைக்க இரண்டு மணிக்கு மேலாகிவிட்டது. ஆண்களை முதலில் உட்கார வைத்து பெண்கள் பரிமாறினர்.

குழைந்து போயிருந்த புது அரிசிச் சோறின் மேல் காரக் குழம்பை ஊற்றச் செய்து பிசைந்து மாதவன் வாயில் வைத்தான். சுவையைப் பற்றியே எவருக்கும் கவலையில்லை. வயிற்றில் எரியும் தீயை அணைப்பதே யாவர் நோக்கமுமாயிருந்தது.

## 41

மர நிழலில் சோர்ந்து போய் சிறிது நேரம் ஆண்கள் களைஆறினர். அவ்வேளையும் தமது சோர்வைக் காட்டாது, எஞ்சியதைச் சாப்பிட்டுவிட்டு பெண்கள் பொறுமையோடு வயலை நோக்கி நடந்தனர். அக்காட்சியைப் பார்த்துக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்திருந்த மாதவன் அருகே படுத்திருந்த மூர்த்தியைப் பார்த்துக் கேட்டான்:

''ஆண்களிலும் பார்க்க பெண்கள்தான் நாட்டில் அதிகம் உழைக்கிறார்கள், அதிகம் சுரண்டப்படுகிறார்கள் என்பதற்குச் சரியான காரணம் உனக்குத் தெரியுமா?''

மூர்த்தி பதில் கூறாது சிறுது நேரம் சிந்தித்தான். அதைப் பார்த்து மாதவனே தொடர்ந்து சொன்னான்:

''ஆண்களிலும் பார்க்க அதிகமாகப் பெண் உழைக்கிறார்கள் என்று நான் சொன்னதே உனக்கு ஆச்சரியமாகி விட்டது போலிருக்கிறது. சுரண்டலில் பழகியவர்களுக்கு மற்றவர் துன்பம் தெரிவதில்லை. பகலிலே வயலில் வேலை செய்யும் இதே பெண்கள் வீட்டுக்குப்போய் சமையல் செய்ய வேண்டும்; குழந்தைகளைப் பார்க்க வேண்டும்; துணிகள் தோய்க்கவேண்டும். இவை வேலையில்லையா? பிற

www.padippakam.com



அடிமைத்தனங்களுக்கு மேலாக ஆண்களுக்கும் அடிமையாகப் பெண்கள் வாழ்கிறார்கள். இங்கு மட்டுமல்ல; உலக நாடுகளிலேயே இந்த முன் சொன்ன மூன்று உழைப்பிற்கும் ஆண்கள் மதிப்போ, உழைப்பின் பெருமதியோ தருவதில்லை. அதனால் அவர்கள் அடிமைகளாகவே அதிக நேரம் உழைத்துக் கொண்டே வாழ வேண்டியிருக்கிறது''

''மேல் நாட்டில் துணி தோய்க்க வாஷிங் மெஷின் இல்லையா?''

தியாகன் கேட்டான்.

''அது வாங்கவும் பணம் வேண்டுமே. எத்தனைபேரால் வாங்க முடியும்? இதற்கு மேலாக இயந்திரத்தையும் ஆண் தானே இயக்க வேண்டும்''

''மண்ணடிமை தீருமட்டும் பெண்ணடிமை தீராது என்று பாரதிதாசன் பாடினாரே''

மூர்த்தி சொன்னான்.

''பாரதியார் வெள்ளைக்காரனை எதிர்த்து நாட்டின் சுதந்திரத்திற்காக பாடினார். இப்போது சுதந்திரம் வந்து இந்தியாவில் பெண்ணடிமை நீங்கி விட்டதா? மண்ணடிமை என்பதை நிலப்பிரபுத்துவம் என்று கொள்வது ஓரளவு நல்ல விளக்கம். அது ஆண்கள்மேல் அரசியல், சாதி, மதம் என்ற மூன்று ஆதிக்கத்தைச் செலுத்துகிறது. இம்மூன்றுக்கும் உட்படுவதுடன் பெண்கள் ஆண்களின்—கணவன் என்ற அதிகாரத்தாலும்—ஆதிக்கம் செலுத்தப்படுகிறார்கள். நிலப் பிரபுத்துவம் உடையும்போதுதான் அரசியல், மதம், சாதி ஆகிய அதிகார அமைப்புகளும் உடைந்து பெண்கள் விடுதலைக்கு ஓரளவு வழி பிறக்கும். அதன் பின்னர்தான் அவர்களது உழைப்பிற்கு சமூக அந்தஸ்து கிடைக்கும். ஆகவேஇப்படிப் பார்த்தால்தான் பாரதியதாசன் பாடலுக்கும் ஓரளவு மதிப்பு ஏற்பட முடியும்''

படிப்பகம்

www.padippakam.com



''வேலைக்காரர் வைத்து குழந்தை வளர்த்து, சமையல் செய்து, துணி தோய்க்கும் வேலைகளையே செய்வித்து சுற்றித் திரியும் பெண்களை மறந்து விட்டீர்களாக்கும்''

''பூஷ்வா வர்க்கப் பெண்களைப்பற்றியா நான் சொல்லு கிறேன். அவர்கள் நாட்டின் குடிசனத்தில் எத்தனை சிறு விகிதம். அவர்கள் சிலர் அப்படியான சுக வாழ்வு வாழ் வதற்காகத்தானே இந்த அடிமைத்தனமெல்லாம் நிலைத் திருக்கிறது. அவர்கள் கையில்தானே இன்றைய அரசியல் அதிகாரமே இருக்கிறது. ஆகவே அவர்கள் இந்த அடிமைத் தனம் யாவையும் நிலைநிறுத்தவே செய்வர். அமெரிக்காவில் கூட ஆண்களிலும் பார்க்க பெண்களே அதிகநேரம் உழைக் கிறார்கள்.''

மாதவன் சொன்னான்.

''சோஷியலிஸ நாடுகளில்...'' என்று சொன்னபடியே தியாகன் எழுந்தான்.

''சோஷியலிஸ அமைப்பு ஒன்றின் மூலமே பெண்ணுக் கும் சுதந்திரம், விடுதலை கிடைக்க முடியும். பொதுமையான உணவு விடுதிகள், பிள்ளைகளை வளர்க்கும் பொது நிலை யங்கள். பொது லோண்டரிகள் அமைக்கப்பட்டதும் பெண் கள் விடுதலை தானாகவே கிடைத்து விடுமே''

மாதவன் பதில் கூறியபடியே மற்றவர்களுடன் தலையில் துண்டைக் கட்டிக்கொண்டு வயல் வரப்புகள் வழியே நடந்தான்.

## 42

மாலையில் வெப்பம் தணிந்த வேளை; வயல் வரப்பில் உட்கார்ந்தபடியே தேங்காய் சிரட்டையில் தேநீரை ஊற்றி ஊதி ஊதி உள்ளங்கையிலிருந்த சீனியை நாவால் நக்கி

www.padippakam.com



யாவரும் குடித்துக் கொண்டிருந்த வேளை சிவபாலன் அன்றைய தினசரிப் பத்திரிகையுடன் வந்தான்.

''கேட்டீங்களா, கினாக்கல்லைத் தேயிலைத் தோட்டத்தில் பொலிசார் துப்பாக்கியால் சுட்டு இரண்டு பேரைக் கொன்று விட்டார்கள். பலருக்குக் காயம்''

தேயிலைத் தோட்டத்துச் செய்தியைக் கேட்டதும் தேநீரின் சுவையையே மறந்து விட்டனர். பத்திரிகையை வாங்கி தியாகன் படித்தான். யாவரும் ஆவலுடன் கேட்டனர். அங்கு நடந்த இரண்டு மாத வேலை நிறுத்தம் பற்றி அவர்கள் முன்னரே செய்தி படித்திருந்தனர்.

''வெள்ளைக்காரன் தோட்டம். ஏகாதிபத்தியத்தின் மூலதனத்தையும் லாபத்தையும் காப்பாற்ற தரகாக நிற்கும் அரசு எம்மக்களைச் சுட்டுத்தள்ளவே தயங்காது. இது அதுக்கு ஒரு எடுத்துக்காட்டு''

மாதவன் சொன்னான்.

''அண்மையில் நடைபெற்று வரும் மோதல்கள், போராட்டங்களைப் பார்க்கும்போது மலை நாட்டிலுள்ள தோட்டப்பகுதிகளில் வர்க்க உணர்வு கூர்மையடைந்து வருகிறது. இல்லையா?''

தியாகன் கேட்டான்.

''எங்கே வர்க்கச் சுரண்டலின் கொடுமை அதிகரிக்கிறதோ அங்கே வர்க்கப் போர் உக்கிரமடையவே செய்யும். ஏகாதிபத்தியத்தின் சுரண்டலின் உச்சக் கட்டமும் அங்கே தான் நடைபெறுகிறது. மாடாக உழைக்கும் இந்தியத் தொழிலாளருக்கு நாடில்லை, நிலமில்லை, சொத்தில்லை, சுதந்திரமில்லை. உடலை வருத்திற அளவிற்குக் கூலியுமில்லை. போராடுவது தவிர அவர்களுக்கு வேறு வழியுமில்லை. அதனால் தான் அங்கிருந்து 'போராட்டத் தீ' போன்ற பாடல்களே பிறக்கின்றன''

www.padippakam.com



''தேயிலையின் விலை இறங்கிறது என்று எல்லாரும் ஒப்பாரி வைக்கிறார்கள்''

சிவபாலன் சொன்னான்.

''ஆடு மெலியுது என்று ஓநாய் அழுத கதைபோலத் தான் இதுவும். ஏகாதிபத்திய நாடுகள் தொடர்ந்து எமது நாட்டு உற்பத்திப் பொருட்களின் விலையைக் குறைத்துக் கொண்டே வருகிறார்கள். அதேவேளை தமது நாட்டு விற்பனைப் பொருட்களின் விலையை ஏற்றிக்கொண்டு போகிறார்கள். இதைக் கண்கூடாக இறக்குமதியாகும் ஒவ்வொரு பொருள் மூலமும் பார்க்கலாம். அவர்களின் சுரண்டல் வேகம் ஈவிரக்கமின்றி அதிகரித்துக்கொண்டே வருகிறது''

''மண்வெட்டியின் விலைகூட இப்ப எவ்வளவு ஏறி விட்டுது''

மூர்த்தி சொன்னான்.

''அதுதான் சொல்கிறேனே. இதிலை கிடக்கும் இந்த மண்வெட்டியைப் பாருங்கோ''

வயலில் அதிக தண்ணீர் தேங்கிவிடாதபடி வெட்டி விடுவதற்காக வைத்திருந்த மண்வெட்டியை எடுத்து பின்புறமாக மாதவன் புரட்டினான்.

''மேட் இன் இங்லண்ட்''

தியாகன் படித்தான்.

''இங்கே என்ன விலை?''

''இருபத்திநாலு ரூபா''

''சரி,லண்டன் கொம்பனி பில்லில் பதினாறு ரூபா விலை போட்டிருப்பான் என்று வைத்துக்கொள்வம். நாங்கள் தேயிலையாக இப்பணத்தைக் கொடுக்கும்போது தற்போதைய சராசரி விலையை இரண்டு ரூபாப்படி பார்த்தால் எட்டு றாத்தல் தேயிலையாகக் கொடுக்கவேண்டும். அது ஒரு

www.padippakam.com



தொழிலாளியின் மூன்று நாள் உழைப்பு; 24 மணி நேர ஊதியம். மண்வெட்டியின் விலை அங்கே ஒரு தொழிலாளியின் மூன்று மணிநேர உழைப்பு. எமது தொழிலாளரின் உழைப்பை ஏழு மடங்காக அவர்கள் சுரண்டுகிறார்கள். இதிலுள்ள வேடிக்கை என்னவென்றால் அவர்களது மண்வெட்டியை எமக்கு விற்கும் விலையையும் எமது தேயிலையை வாங்கும் விலையையும் அவர்களே தீர்மானிக்கிறார்கள். எங்கள் அரசு இதற்குத் தரகாகவும் இருந்து பார்த்துக் கொண்டிருக்கிறது. சுதந்திரம், ஜனநாயகம் என்று பேசுவதெல்லாம் எத்தனை கேலிக் கூத்து. இந்தக் கொடுமையை எதிர்த்து சிறிய கூலிகூடத் தரும்படி கேட்டுப் போராடினால் அவர்களின் அரசியல் அதிகாரம் துப்பாக்கி வழியாக வந்து பலி வாங்குகிறது''.

மாதவன் விரிவாக விளக்கியதை யாவரும் ஆர்வத்தோடு கேட்டனர். புதிய அரசியல் உணர்வு அவர்களது இரத்தத்தைச் சூடாக்கியது. யாவரும் வேலைகளை மறந்து அரசியல் பேச்சில் ஈடுபட்டனர்.

## 43

''எகிப்திய படைக்கும் இஸ்ரேல் போர் வீரருக்குமிடையில் கைகலப்பு என்றும் செய்தி ஒன்று வந்திருக்கிறது''

தியாகன் படித்துச் சொன்னான்.

''அது முடிவில்லாது நடந்துகொண்டேயிருக்கும். அதுவும் உங்கள் போராட்டம் போன்றதுதான். உங்கள் நிலத்தை நடராசபிள்ளை பிடித்து வைத்து ஆட்சி செலுத்தவில்லையா? அந்த நிலங்கள் இனி உங்களுக்குச் சும்மா கிடைத்துவிடப் போவதில்லை...''

www.padippakam.com



''எப்பொழுது இதற்கு முடிவு ஏற்படும்?''

ஒரு குரல் எழுந்தது.

''ஏகாதிபத்திய நாடுகளின் சுரண்டல்களின் சுய உருவங்களை மக்கள் உணர்ந்து, தம் நாடுகளின்மீது அவர்கள் பூட்டிய தளைகளை மக்கள் உடைத்து ஏகாதிபத்தியப் பிடியிலிருந்து விடுதலையாகும்வரை அராபியர் யூதர்களின் போர் நடந்து கொண்டேயிருக்கும். யூதர்களும் அராபியர்களும் பல்லாயிரம் வருடங்களாக அருகருகே ஒற்றுமையாக வாழ்ந்தவர்கள். இஸ்ரேல் என்றோர் நாட்டை ஏகாதிபத்தியங்கள் உருவாக்கிவிட்டு அராபியர்களையும் யூதர்களையும் எதிரிகளாக்கி ஒருவரை ஒருவர் கொன்று குவிக்கிறார்கள். ஏகாதிபத்தியங்கள் இரு பகுதியினருக்கும் ஆயுதம் விற்கிறார்கள். இரண்டு இனத்தவர் ஒரே நாட்டிலேயே அமைதியாக வாழ முடியாதா? பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஒற்றுமையாக வாழ்ந்த மக்களை இந்தியா, பாகிஸ்தான் என்று பிரித்து, பகைவர்களாக்கி, இரு நாட்டையும் தமது ஆயுதங்களை விற்பனை செய்யும் சந்தையாக்கவில்லையா? தற்போது அமெரிக்காவும் மார்க்கெட்டைப் பங்கு போட்டு பகையை மேலும் வளர்க்கவில்லையா? மக்கள் இந்தக் கொடிய அரக்கர்களிடமிருந்து தம்மை விடுவிக்கும்வரை போராயுத விற்பனையும் கொலைகளும் நடைபெற்றுக் கொண்டேயிருக்கும்''

அரசியல் ஆராய்ச்சியும் விளக்கங்களும் ஒவ்வொரு விஷயத்திலிருத்தும் பிறந்துகொண்டேயிருந்தன. இரவு பகல் வேலைநேரமென்றில்லை. குடிசைகளில், வயல்களில், வரப்புகளில் விவாதங்கள், செயலாற்றும் முறைபற்றிய ஆராய்வுகள் தொடர்ந்து நடந்துகொண்டேயிருந்தன.

www.padippakam.com

# 44

அரசங்குடிக் கிராமத்தில் நாள்தோறும் உரமாகிவரும்
குமுறலின் பிரதிபலிப்புகளை நடராசபிள்ளை அறியாம
லில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக கொலைகாரன் என்று
அரெஸ்ட் வாரண்டு பிறப்பிக்கப்பட்ட மாதவன் வெளியே
நடமாடித்திரிவதே அவருக்கு ஆச்சரியமாயிருந்தது. அவர்
கொடுத்த அறிவித்தலின்படி பின்னர் மூன்று தடவை
பொலிசார் திடீர் விஜயம் செய்தும் அவன் கைது செய்யப்பட
வில்லை. அவனை கிராமத்து மக்களே காப்பாற்றுவதை
அவர் அறிவார். பொலிசார் ஊகித்துத் தாக்கிய குடிசை
களில் மாதவனைக் காண முடியவில்லை. குடிசைகள் பரவ
லாக இருந்ததால் பொலிசாரால் சுற்றி வளைக்கவும் முடிய
வில்லை.

ஒரு தடவை இரவில் திடீர் தாக்குதல் நடாத்திய பொலி
சாரின் ஜீப் திரும்பும்போது அகழியில் ஒரு சில்லுப் புதைந்து
விட்டது. கிராமத்தவர் சுற்றி நின்று வேடிக்கை பார்த்தனர்.
சிறிது நேரத்தின்முன் குடிசை குடிசையாக துப்பாக்கியோடு
அதிகாரக் குரல் எழுப்பிய இன்ஸ்பெக்டரால் அவர்களிடம்
உதவியே கேட்க முடியவில்லை. கிராமத்தவரே அகழி
வெட்டிவிட்டனர் என்பதை பொலிசார் உணர்ந்தனர்.
ஆயினும் எதுவும் செய்ய முடியவில்லை. முடிந்தவரை
சில்லைக் கிளப்ப முயன்றனர். முடியவில்லை.

கிராமத்தவர் அவர்களைச் சுற்றிவர நின்று கேலி பேசிச்
சிரித்தனர். எவரும் உதவவில்லை. ஆத்திரம் வந்தபோதும்
இன்ஸ்பெக்டர் எதுவுமே பேசவில்லை. துப்பாக்கிளைத்
தொடவே அச்சமாயிருந்தது. பொலிசார் பதறிக்கொண்
டிருந்தனர்.

www.padippakam.com



நடராச பிள்ளையிடம் சென்று அவரின் லொறியைக் கொண்டு வந்து ஜீப்பைக் கட்டி இழுப்போமா என இன்ஸ் பெக்டர் ஆலோசித்தார். எவர்போவது, யார் காவலாக நிற்பது என்பதெல்லாம் பிரச்சனையாயிருந்தது.

''சரி பாவம் பிழைத்துப் போகட்டும்''

ஒரு குரல்.

''உயிரோடு ஓடவிடுறமே அது போதாதா?''

''இங்கேயே வெட்டிப் புதைத்து விடுவோமா?''

''பாவம் ஓடிப் பிழைக்கட்டும்''

''பாவம் ஓடிப் பிழைக்கட்டும்''

ஒரு கூட்டம் வந்து சில்லைப் புதரிலிருந்து தூக்கி வெளியே எடுத்துவிட்டது. இன்ஸ்பெக்டரும் பொலிசாரும் நன்றிகூற முயன்றனர்.

''உதவிக்கு நன்றி''

''நன்றி வேண்டாம். இனிமேல் இந்த வழியாக் வந்து எங்களுக்குத் தொல்லை தராமல் இருந்தால் போதும்''

முத்துவேலு சொன்னான்.

''இதுதான் ஜீப்பைத் தூக்கி விடுற முதல் தடவையும் கடைசித் தடவையும்''

மற்றொரு குரல்.

பின்னர் இன்ஸ்பெக்டர் நடராச பிள்ளையைக் காணும் வேளையெல்லாம், 'உங்கள் கிராமம் ஆபத்தான கிராமம்' என்று சொல்லி வந்தார்.

www.padippakam.com

# 45

நடராசபிள்ளை அந்த இன்ஸ்பெக்டர் ஐக்கிய தேசியக் கட்சியினர் என்று மேலிடத்தில் இரகசியமாகச் சொல்லி அவரை வேறு இடத்திற்கு மாற்றம் செய்து விட்டார்.

புதிதாக வந்த இன்ஸ்பெக்டருக்கு தூபம் போடத் தொடங்கினார்.

பெரும் போக அறுவடையின்போது 'விளைச்சலில்லை, சிறு போகத்தில் பார்ப்போம்' என்று சிலர் வாரநெல்லு, வட்டி நெல்லு, கடன் வாங்கிய விதை நெல்லு ஆகியவற் றிற்கு கையை விரித்தனர். அப்படிக் கைவிரிப்பவரின் தொகை சிறு போகத்தின்போது அதிகரித்து வந்தது.

''நானும் வங்கிக்கு கடனும் வட்டியும் கட்டவேணும். தவணைப் பணம் ஒழுங்காகக் கட்டாட்டால் அவன் என்னைச் சும்மா விடுவானா''

நடராச பிள்ளை தன் கையாட்களிடம் தன் நெருக்கடியையும் தெரிவித்தார், வங்கியே வெளிநாட்டுக் கடனிலேயே டிராக்டர், லொறிகளைப் பெற்றுத் தந்தார்கள் என்பதையும் அவர் அறிவார்.

நடராச பிள்ளை தமது கையாட்களிடம் மிகவும் கண்டிப்பாக இருக்கும்படி சிறுபோக அறுவடையின் ஆரம்பத்திலேயே சொல்லிக்கொண்டிருந்தார். அவர்களும் கண்டிப்பாகக் கதைத்தனர்.

''சரி இப்ப வட்டி நெல்லைத் தராவிட்டால்தான் உடையார் என்ன பண்ணிவிடுவாராம்''

ஒரு சிலர் இவ்வாறு சொன்னதை கையாட்கள் உடையாரிடம் சொன்னவரின் பெயருடனேயே சொல்லிவைத்தனர். உடையார் பெயர்களை மனனம் செய்து கொண்டார்.

படிப்பகம்

www.padippakam.com



''வயலுக்கு சரியாய் பசளையிடாமலே நிலம் பழுதாய் போச்சு. டிராக்டருக்கும் வேலை போதாமலிருக்கு. பெரும் போகத்தோடு நிலத்தை விட்டுவிட வேண்டும்''

அவர் ஆணை பிறப்பித்த நிலங்களில் மாற்றுப் பயிர் செய்யப்பட்டதைப் பார்த்தார். பவளம், அம்பலவாணர் ஆகியோரும் அதில் ஈடுபட்டிருந்தனர்.

''நிலம் தர முடியாது. முடிந்தால் நிலத்தைப் பறித்துக் கொள்ளட்டும்''

பவளம் சொல்லி அனுப்பினாள். 'நாய்' என்று அவள் ஏசியதை உடையாரின் கையாள் சொல்லவில்லை.

அவளுடன் மோத அவர் விரும்பவில்லை. முன்னர் ஒரு தடவை அவள் வரப்பிலே கண்டபோது கூறிய வார்த்தைகளை அவரால் தூக்கத்திலும் மறக்க முடியவில்லை.

''நான் நடந்ததெல்லாவற்றையும் மறந்து விட்டேன் என்று நீ நினைக்காதே. நீ இனிமேல் என்னோடு மோத வந்தால் நான் உடனேயே உன்னைப் பழி வாங்குவன். அதற்கு முன் நீ என்னையும் கொன்று விட்டால் என் மகனோ அல்லது பேரனோ என்றோ ஒரு நாள் உன்னையோ, உன் குடும்பத்தையோ அழித்தொழிக்காமல் விடமாட்டான். இரவில் படுக்கும்போதெல்லாம் இதை நினைத்துக்கொள்''

எல்லாருக்கும் ஒரே தடவையில் பாடம் படிப்பிக்க வேண்டும் என்ற முடிவோடு தன் கோபத்தை அடக்கிக் கொண்டார். கோபம், ஆத்திரம் ஆகியவற்றையும் மனோ திடத்தால் வெற்றி கொள்ளப் பழகவேண்டும் என்றும் அவர் காந்திய நூல்களில் அவ்வேளை படித்துக்கொண்டிருந்தார்.

அவருக்குக் கடன் நெல்லுத் தரவேண்டியவர்கள் வழமையாக தமது அறுவடை முழுவதையும் அவரது லொறியிலேயே

www.padippakam.com



போரடிக்கும் இடத்திலேயே பற்றி விடுவர். கூடன் நெல்லு போக மிகுதிக்கு அவர் தரத்தைப் பார்த்து புசலுக்கு பதி னொரு ரூபா தொடக்கம் பன்னிரண்டு ரூபா வரையில் கொடுப்பார். இத்தடவை பெரும்பாலானோர் வெளியூரிலி ருந்து லொறியோடு வந்து பணம் கொடுத்து நெல்லுக் கட்டி யவர்களுக்கு அளந்து கொடுத்து விட்டனர். வழமையாகக் கிடைக்கும் வட்டியும் கிடைக்கவில்லை; நெல்லு வியாபார மும் குறைந்தது.

இவற்றிற்கு மேலால் உடையாரின் போரடிக்காது அடுக்கி வைக்கப்பட்டிருந்த நெற்போரின் கீழ்ப்புறமாக பெரும் பகுதி பறிபோய்விட்டது.

காலையில் அறிந்ததும் எத்தக் காவலாளி மேலும் குற்றத் தைச் சுமத்தாது நடராச பிள்ளை சாவதானமாக இருந்தார். மாலையில் பொலிசாரை வரவழைத்து இரவுக்காவலுக்கு வந்த காந்தனை தனிமையில் கைது செய்து காவலில் வைக்க உடையார் ஏற்பாடு செய்தார். காந்தனுக்கு உதையும் அடியும் தாராளமாகக் கிடைத்தது. ஆயினும் பொலிசாரால் எவ்வித தகவலும் பெறமுடியவில்லை.

பழைய விதானையார் கந்தையா, விவசாயக் கமிட்டித் தலைவர் தர்மலிங்கம், அவர்களைச் சேர்ந்தவர்களும் நடராசபிள்ளையிடம் ஓரிரவு வந்து கிராமத்து நிலைமைகள் கெட்டுவருவதைப் பற்றி முறையீடு வைத்தனர். தமக்கு நேர்ந்திருக்கும் நட்டங்களையும் எடுத்துச் சொல்லினர்.

''என்ன உடையார், உங்களுக்கு ஒரு காலத்திலை கிராமத்திலையிருந்த மதிப்பென்ன, மாரியாதை யென்ன? செட்டோடும் செருக்கோடும் வாழ்ந்தீர்கள். இப்ப வாற நிலையைப் பார்த்தால் எல்லாமே போய்விடும் போலை யிருக்கு.''

தர்மலிங்கம் சொன்னார்.

''அப்பிடியெல்லாம் செரல்லவேண்டாம். இப்பவும் கவண்மென்ட் ஏஜெண்டு, ஏ. எஸ். பி. தொடக்கம் மந்திரி

www.padippakam.com



மார் வரையிலை உடையார் கையிலை இருக்கினம். அவர் ஜீப்பை எடுத்துக்கொண்டு புறப்பட்டால் இங்கை என்ன தான் நடக்காது.

கந்தையா கனைத்துக் கொண்டே கூடையாரைத் தூக்கி விட்டார்.

## 46

உடையாருக்கு பட்டணத்திலேயும் பெரிய பங்களாவும் காரும் வேலையாட்களும் இருந்தனர். அவரது பிள்ளை களில் மூவர் பட்டணத்தில் படித்துக் கொண்டிருந்தனர். மூத்தவன் இங்கிலாந்தில் படித்துக் கொண்டிருந்தான். இரண்டாவது பெண் மெடிக்கல் கல்லூரியில் சேர்ந்திருந் தாள். மனைவியாருக்கோ பிள்ளைகளுக்கோ கிராமம் அவ் வளவாகப் பிடிக்கவில்லை. அவர்களின் தரத்தில் பழகுவ தற்கு கிராமத்தில் ஆட்களில்லை என்பதே பெரிய குறையாக இருந்தது. இளைய பெண்பிள்ளையை மட்டும் கிராமப் பாடசாலையில் படிக்கச் செய்தார்; தனது ஆறுதலுக்கும் பொழுது போக்கிற்குமாக வீட்டிலேயே வைத்திருந்தார். பெரும்பாலும் வார இறுதிகளில் மனைவியாரும் மற்றப் பிள்ளைகளும் அங்கு கிராமத்து வீட்டில் வந்து தங்கிச் செல்வர்.

கிராமத்துப் பாடசாலையில் படித்துவிட்டு தரமில்லாத பிள்ளைகளோடு பழகி தன் கடைசிப் பிள்ளையின் பழக்க வழக்கம் நல்லாயில்லை என்று அவரின் மனைவி அடிக்கடி புகைந்துகொண்டேயிருந்தாள்.

நடராசபிள்ளை கிராமத்திற்கு அண்மையாக ஒரு பொலிஸ் நிலையத்தை ஏற்படுத்த அதிகாரிகளையெல்லாம்

www.padippakam.com



கையில் போட்டு பரிசுகள் கொடுத்து முயன்று கொண்டிருந்தார். ஆயினும் பொலிஸ் நிலையம் வரும்வரை கிராமத்துக் கொடுமைகளை வளரவிட்டால் பின்னர் கட்டுப்படுத்தவே முடியாது போய்விடலாம் என்று எண்ணிக் கொண்டார்.

தனக்கு முற்றும் எதிராக வட்டி நெல்லுத் தராது வாய் காட்டியவர், வார நிலத்தை விட்டுவிடா விட்டால் என்ன செய்வார் என்று எதிர்த்தவர்களுக்கு முதலில் பாடம் படிப்பிக்க ஆரம்பித்தார். தமது நெருங்கிய கையாட்களை அழைத்து வேலை கொடுத்தார். சிலர் அஞ்சித் தயங்கினர். அவர்களுக்கு தனது முழுத்திட்டத்தையும் சொல்லிப் பயமுறுத்தினார்.

சில குடிசைகள் தீப்பிடித்து எரிந்தன. ஒரு குடிசையில் பச்சைப் பாலகனின் எலும்புகளே கிடைத்தன. மற்றொரு குடிசையில் வயிற்றுப்பிள்ளையோடு எரிந்த பெண்ணின் சடலம்.

மாதவனும் சென்று பார்வையிட்டான். மாதவன் கண்கள் கலங்கி நீர் நிறைந்ததை தியாகன் அன்றே முதல் தடவை பார்த்தான். தியாகன் பேச்சுக் கொடுத்தபோதும் மாதவன் பேசவில்லை. தன் உணர்ச்சிகளை வெளிக் காட்டாது கட்டுப்படுத்த முயல்வதை தியாகன் கவனித்தான். மாதவன் மனித உணர்ச்சிகயைக் கடந்தவன் என தியாகன் இதுவரைநாள் தான் எண்ணியிருந்தது தவறு என்பதை உணர்ந்தான். மாதவன் ஒருபோதும் தன் குடும்பத்தைப் பற்றியே கவலைப்படாதவன் போலவே சமாளித்து வந்தான். ஆயினும் குடும்பப்பேச்சுகளை இடையிடை எடுக்கும் போது மாதவன் முகத்தில் விளையாடும் உணர்ச்சி பாவங்களை அவன் கவனிக்கத் தவறுவதில்லை.

சிலரது பயிர்கள் அவர்களது மாடுகளாலேயே அழிக்கப்பட்டும் இருந்தன. அரசங்குடிக் கிராமத்தவர் நெஞ்சங்களிலெல்லாம் தீ எரிந்தது. அயல் கிராமத்தவரும் அங்கு

ம—10

படிப்பகம்

www.padippakam.com



நடந்த கொடுமைகளைப் பார்வையிட வந்திருந்தனர். இந்த அக்கிரமம் செய்தவர்களைக் கண்டுபிடித்து பாடம் படிப்பித்து இனிமேல் இவ்வாறு நடைபெறாது கிராமத்தைக் காப்பதற்கு தான் ஏற்பாடு செய்வதாக நடராசபிள்ளை கதை பரப்பினார்.

கிராம சேவகனையும் கூட்டி வந்து நிலைமைகளைக் காட்டி அவனையும் அழைத்துக் கொண்டு அதிகாரிகளிடம் நடராசபிள்ளை சென்றார். கிராமத்தில் பெரிய கலகம் மூண்டிருப்பதாக மணியகாரன் அரசாங்க அதிபர், ஏ. எஸ். பி. யாவரிடமும் தெரிவித்து சில பொலிஸ்காரரை தற்காலிகமாக கிராமத்திற்கு அழைத்து வந்தார். அவரது வீட்டிலேயே தற்காலிக பொலிஸ் நிலையம் ஏற்பட்டது.

## 47

பொலிசாரை வைத்துக் கொண்டு உடையார் தன் பழைய ஆட்சியை நிறுவத் தொடங்கினார்.

கடன்களை நெற் போரடிக்கும் இடத்திலேயே அறவிட்டார். நெல்லை தமது லொறிகளில் ஏற்றி விற்பனை செய்தார். வெளியூர் லொறிகள் நெல்லுக் கட்ட அங்கு வராது தடுத்தார்.

பொலிசார் அங்கு தங்கியிருக்கும் காலத்தை நீடிப்பதற்காக இடையிடை ஆங்காங்கே அவர்களை வைத்துக் கொண்டே தீயிடல், திருடுதல், பயிரழித்தல் ஆகியவற்றையும் செய்து கொண்டிருந்தார்.

மேலும் ஒரு குடிசை எரிந்து தாயும் குழந்தையும் நெருப்பில் வதங்கி இறந்தனர். குடிசையின் கதவை வெளியே இழுத்துப் பூட்டிவிட்டு தீ வைக்கப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



மாதவனையும் அவ்வேளையிலேயே கைது செய்துவிட வேண்டும் அல்லது கொலை செய்துவிட வேண்டும் என்று நடராசபிள்ளை திட்டமிட்டார்.

கிராமத்தைத் தான் அடக்கி விட்டதாக நடராசபிள்ளை எண்ணிக் கொண்டார். பொலிசாருக்கு வேண்டிய சாப்பாடு, இறைச்சி, சாராயம் யாவையும் தாராளமாக வழங்கினார். அவர்கள் நாள்தோறும் ஓரிரு தடவை கிராமத்தின் வெளிப் புறமாக துப்பாக்கிகளுடன் சுற்றிவந்து மது, மாமிசத்தோடு பொழுது போக்கிவிட்டு நன்கு தூங்கினர்.

பொலிசாரே அங்கே நிரந்தரமாக இருக்கவும் விரும் பினர்.

## 48

கிராமத்தவரிடை அச்சத்திலும் பார்க்க நடராச பிள்ளையின் கொடுமைகளைக் கண்டு கொதிப்பே எழுந்தது. அவர்கள் நெஞ்சம் நீறுபூத்த நெருப்பாகி வந்தது.

அங்கு நடைபெற்ற ஒவ்வொரு சம்பவத்தின் பின்னணி யையும் அறிந்து மாதவன் சரியான விளக்கம் கொடுத்துக் கொண்டிருந்தான். ஆங்காங்கே காவலாளர்களை இரவு பகலாக வைத்து செய்திகள் அறிவதோடு பாதுகாப்பும் தேடிக் கொண்டான்.

நடராசபிள்ளையின் வீட்டுக்கு வேலைக்குச் செல்பவர் ஓரிருவரையும் உளவு வேலைக்குப் பயன்படுத்தினான்.

இரவில் தக்க பாதுகாப்புடன் வழமைபோல யாவரது சந்திப்பும் விவாதமும் நடைபெற்றது.

www.padippakam.com



எரிந்த குடில்களை உடனேயே திருத்திக்கட்ட ஏற்பாடு செய்தான். மற்றவர் பயிர்களுக்கும் காவலுக்கு ஒழுங்கு செய்தான்.

''பொலிசார் யாருக்காக இருக்கிறார்கள்?''

அன்றிரவு பவளம் வீட்டில் மாதவன் கேட்டான்.

''உடையானுக்காக''

''உடையவனுக்காக''

''உடையவனின் சொத்து, உடைமைகளை, உயிரைப் பாதுகாப்பதற்காக''

பதில்கள் வந்தன.

''பொலிஸ் தற்போதைய அரசின் பிரதிநிதி; உடைமையாளர்களின் சர்வாதிகாரத்தை எம்மேல் திணிப்பதற்காக தோன்றிய அரசின் உறுப்புகளில் ஒன்று அது. அவர்கள் எப்போதும் உடைமை வர்க்கத்தையே சார்ந்திருப்பர். பலாத்காரம் அவர்களது ஆயுதம். பொலிசாரின் அதிகாரம் அவர்கள் சுமந்து செல்லும் துப்பாக்கியில்தான் இருக்கிறது. இதை நாம் மறந்துவிடப்படாது''

''உடையானின் கொடுமைகளை இன்னும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது''

ஒரு குரல் ஒலித்தது.

''உடையானை உடனே ஒழித்துக் கட்டிவிட வேண்டும்''

மற்றொரு குரல்.

''அவனைக் கொலை செய்வதால் இயக்கத்தில் ஈடுபடும் எல்லோருக்கும் ஆபத்து ஏற்படலாம். அவன் பொருட்களையெல்லாம் முதலில் பறிமுதல் செய்து பகிர்ந்துவிடுவோமே. ஒழித்துக்கட்டுவதுபற்றி பிறகு பார்க்கலாம்.''

வேலுப்பிள்ளை ஆலோசனை கூறினான்.

www.padippakam.com



''புண்பட்ட புலி பிறகு சும்மா இருந்துவிடுமா? அரசியல் அதிகாரமும் அவன் கையில் இருக்கும்போது பொருட்களை பறிமுதல் செய்வதால் மட்டும் அவனது வர்க்க சுபாவம் மாறிவிடப் போவதில்லை.''

மூர்த்தி பதில் கூறினான்.

''ஒரு நடராசபிள்ளையை ஒழிப்பதால் எமக்கு அரசியல் அதிகாரம் கிடைத்துவிடப் போகிறதா? கிராமந்தோறும் இவனைப் போன்றோர் ஆட்சி செலுத்திக்கொண்டேயிருக்கிறார்களே.''

யோகேந்திரன் சொன்னான்.

''இவனைப் போன்றவர்களை எல்லாம் ஒழித்துக் கட்டுவது எமது போராட்டத்தில் ஒரு கட்டம். இதனால் மட்டும் எமக்கு எல்லாம் கிடைத்துவிடப் போவதில்லை. இவன் பின்னே நிற்கும் முதலாளித்துவம், அதன் பாதுகாவலான அரசு, ஏகாதிபத்தியம் யாவுமே திரண்டெழுந்து எம்மேல் பாயவே செய்யும். வியத்நாம் கிராமங்களில் தோன்றிய கிளர்ச்சியை அடக்க அமெரிக்க ஏகாதிபத்தியமே முழுப் பலத்துடனேயே சென்றதை நாம் கண்முன்னேயே கண்டோமே. ஆகவே நாம் எல்லாத் தியாகத்திற்கும் தயாராகிக்கொள்ள வேண்டும்.''

தியாகன் கூறினான். அவன் கூறியதை பெரும்பாலோர் ஆமோதித்தனர்.

நடராச பிள்ளையை ஒழித்தபின் நடைபெறக்கூடிய நிகழ்ச்சிகளையெல்லாம் மாதவன் ஒவ்வொன்றாகக் கூறினான், பொலிசார் எவ்வித தந்திரங்கள், பலாத்காரங்கள், கொடுமைகள் செய்யலாம் என்பதையும் அவற்றிற்குத் தாம் கைக்கொள்ளக்கூடிய எதிர்நடவடிக்கைகள் பற்றியும்கூட ஆராய்ந்தனர். தலைமறைவில் இயங்கத் தயாரானவர்களை முதலில் கேட்டறிந்தான்.

www.padippakam.com

# 49

"உடையானைத் திருத்தி நல்ல மனிதனாக்கிவிடலாம் என்று எவராவது நினைக்கிறீர்களா?''

மாதவன் கேட்டான்.

''இல்லை''

''இல்லை.''

''அரக்கனை இன்னும் விட்டுவைக்க முடியாது.''

ஒவ்வொருவராக எழுந்து குரல் எழுப்பினர்.

''எம்மைப் பிரித்து முடிந்துவிடப் பார்க்கிறான்.''

'அவனை இனியும் விட்டு வைப்பதால் எமக்குத் தான் தொடர்ந்து நட்டமாகும், இன்னும் குடிசைகள் எரியலாம். பயிர்கள் அழியலாம். உயிர்ச்சேதமே ஏற்படலாம்.''

நள்ளிரவுக்கு மேலாகிவிட்டது. கிராமத்தவர்களே ஒவ்வொருவரும் பவளத்தின் வீட்டில் வந்து சேரத் தொடங்கினர்.

நடராச பிள்ளையின் வீட்டைக் கண்காணிக்க ஒரு சிலரை மாதவன் அனுப்பினான். உளவாளியின் துணையோடு இறைச்சி வைத்து நாயைக் கொல்லவும் துப்பாக்கிகளைத் திருடி அப்புறப்படுத்தவும் ஏற்பாடு செய்தான்.

எதிரியை ஒழிக்கும் பணிக்கு முத்துவேலுவையும் பவளத்தையும் தலைமை தாங்கும்படி ஏற்பாடு செய்தான்.

உடையான் பொருட்களை பிரித்து பிடுங்கிவிடும்வேலையை மூர்த்தியிடமும் துரைரத்தினத்திடமும் ஒப்படைத்தான். நெல், குரக்கன், கடலை, எள்ளுப் போன்ற உணவுப்

படிப்பகம்

www.padippakam.com



பொருட்கள் மக்களுக்கும் பணம் இயக்கத்திற்கும் பயன்பட வேண்டும் என்பதையும் நினைவூட்டினான்.

அந் நடவடிக்கையில் எவரெவர் பங்கு பற்றப்படாது என்பதையும் மாதவன் கண்டிப்பாகக் கூறினான். தியாக னும் சிவபாலனும் தடுக்கப்பட்டனர்.

## 50

கொதித்தெழுந்த விவசாயிகள் கையில் கிடைத்த ஆயுதங்களை எடுத்து வந்தனர். அரிவாள், கத்தி, பொல்லு, கிறிஸ், கோடரி, மண்வெட்டி, அலவாங்கு, குத்தூசி, முன் முருக்கந்தடி, கல்லு, மிளகாய்பொடி...கையில் கிடைத்த வற்றை உயர்த்திப் பிடித்தனர். இடது கையில் ஒரு தீப்பந்த மும் வலது கையில் ஒரு அரிவாளுமாக பவளம் முன் நடந் தாள். அவளைத் தொடர்ந்து விவசாயப் படை; மக்கள் படை.

வேள்விக்குப் புறப்பட்டவர்கள் போன்று விவசாயிகளின் கூட்டம் வயல்களின் வரப்பு வழியே அணிவகுத்துப் புறப் பட்டது, உடையானின் மேட்டில் கட்டியிருந்த பங்களாவைக் காட்டும் ஒற்றை விளக்கின் ஒளி கண்முன்னே எரிந்து கொண்டிருந்தது.

வர்க்க உணர்வுபெற்று கொடுமையைக் கண்டு கொதித் தெழுந்த அக்கிராம மக்களின் போர்ப்படையை பின்புறமாக நின்று மாதவனும் தியாகனும் சிவபாலனும் உடல் பூரிக்கப் பார்த்துக்கொண்டு நின்றனர். தாம் பங்குபற்ற முடிய வில்லையே என்று தியாகனின் நெஞ்சும் சிவபாலனின் மனமும் எரிந்தன.

''தியாகு இந்தக் காட்சியைப் பார்க்கும்போது உனக்கு என்ன வார்த்தைகள் நினைவில் வருகின்றன...''

படிப்பகம்

www.padippakam.com



மாதவன் கேட்டான். தியாகன் தன் நெஞ்சில் பளிச்சிட்ட மொழிகளைக் கூறினான்:

''சரியான கருத்துகள் ஒருகால் பொது மக்களால் கிரகித்துக் கொள்ளப்பட்டதும், இக் கருத்துகள் சமுதாயத்தை மாற்றுகின்ற, உலகை மாற்றுகின்ற ஒரு பொருளாயத சக்தியாக வடிவெடுக்கின்றன என்பது எத்தனை உண்மையாகத் தெரிகிறது''

''வெறுமனே விவாதிக்கொண்டேயிருந்தோம் என்று சொன்னாயே. இப்போது பார்த்தாயா? போராட்டம் ஆரம்பித்துவிட்டது. இனிமேல் நாம் பகலிலும் தூங்கமுடியாது. சரி புறப்படு எமது வேலைகள் பலமடங்காகி விட்டன''

''அவர்களும் இனித் தூங்கப் போவதில்லை. போராட்டமென்றால் இரத்தம், மரணம்...நடைபெறப் போவதை நினைக்கவே பயமாயிருக்கிறது''

தியாகன் தன் இதய நோவை வெளிப்படுத்தினான்.

''மரணம் என்பது மிகவும் சாதாரண சம்பவம். அது உனக்கும் நடக்கலாம் எனக்கும் நடக்கலாம். எல்லாரும் இறக்கவேண்டியவர்கள் தான். எங்கே போராட்டம் இருக்கிறதோ, அங்கே தியாகமும் இருக்கும். மரணம் அடிக்கடி நிகழும் நிகழ்ச்சி. ஆனால், நாம் மக்களின் நலன்களையும், பெரும்பான்மையினரின் துன்ப துயரங்களையும் மனதில் கொண்டு மக்களுக்காக உயிர்விட்டால் அது தகுதியான சாவாகும். அது மலையைவிடப் பாரமானது. பொது மக்களைச் சுரண்டுவோர், அடக்குமுறையாளருக்காக உழைத்து இறப்பது இறகைவிட இலேசானது''

போர்க்களத்தில் மாதவன் கூறிய மொழியாக வார்த்தைகள் ஒலித்தன.

★

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# மண்ணும் மக்களும்

"மற்ற பல முதலாளித்துவத்தைவிட நில முதலாளித்துவமிருக்கிறதே அது மனிதத் தன்மையை மாய்ப்பதிலே, முதல் தரமானது. குடும்பம் குடும்பமாக இந்த முதலாளித்துவத்துக்கு அடிமையாகி, தலைமுறை தலைமுறையாக, 'காலில் வெள்ளெலும்பு முளைத்த நாள் முதலாய் அடிமைக்காரனையே' என்று நந்தனார் பாடினார் என்கிறார்கள் கதையில்..... ஆனால் உண்மை நிலை என்னவோ இதுதான்....."

சி.என். அண்ணாதுரை - பக்: 14

"....எம் நாட்டின் முரண்பாடுகளிடையே தீர்க்கமான பாத்திரத்தை வகிக்கும் பிரதான முரண்பாடு என்ன?" மாதவன் கேட்டான்.

"மண்ணுக்கும் மக்களுக்கும் இடையில்...."

"நிலப்பிரபுத்துவத்திற்கும் மக்களுக்குமிடையில் உள்ள முரண்பாடு"

தியாகன் கூறத் தொடங்கியதை மூர்த்தி முடித்தான்.......

"இந்தப் பிரதான முரண்பாட்டை உடைத்தெறிவதன் மூலமே நாட்டில் புதிய ஜனநாயகப் புரட்சியை ஏற்படுத்த முடியும்." மாதவன் கூறினான்.
பக் : 104

கால் நூற்றாண்டின் முன் வெளிவந்த இந்நாவல் தமிழிலக்கிய வரலாற்றில் குறிப்பிடவேண்டிய சிறப்புடையது.